பக்கங்கள் : 24+VIII=32

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 14 ஞாயிற்றுக்கிழமை (27.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :121

# கிழக்கில் புலிகள் மீதான தாக்குதல்கள்:

# சாட்சியமளிக்க எவருமே முன்வரவில்லை!

## ஜனாதிபதி ஆணைக்குழு ஏமாற்றம் விசாரணைகள் நாளை ஆரம்பம்

மட்டக்களப்பு,மார்ச்27

**கிழக்கில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீது அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்தோன்றி சாட்சியமளிக்க எவருமே விண்ணப்பிக்க முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.**

**சாட்சியமளிப்போரின் விண்ணப்பங்களை ஏற்கும் அவகாசம் முடிவடைந்த நிலையில் ஆணைக்குழு அதன் விசாரணைகளை நாளை ஆரம்பிக்கின்றது.**


மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள், பொறுப்பாளர்கள் மீது நடத்தப்பட்டு வந்த தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தலைமையில் இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருந்தார்.

கிழக்கில் எத்தகைய சூழ்நிலைகளில் எந்த நோக்கத்திற்காக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆணைக்குழு இதுதொடர்பாக பொது மக்களிடம் இருந்தும் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புக்களிடம் இருந்தும் சாட்சியங்களைப் பெறுவதற்காக சாட்சியமளிக்க முன்வருவோரிடமிருந்தும் எழுத்து மூலமான சான்றினை முன்வைக்க விரும்புகின்றவர்களிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோரி இருந்தது. இது தொடர்பான விளம்பரங்கள் ஊடகங்கள் ஊடாக வெளியிடப்பட்டிருந்தன.

சாட்சிகளிடமிருந்து விண்ணப்பங்களை

(20ஆம் பக்கம் பார்க்க)



அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்வதையும் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் காப்பகத்தை நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

## உள்ளே சூரியகாந்தியில்

- கிழக்கில் தாக்குதல்களுக்கான பின்தளப் பிரதேசமாக வெலிகந்த....
- இறுதி அத்தியாயம் தமிழர்களின் கைகளில்....
- உத்தியோகத்துக்கான கல்வியாகவே தமிழையும் கற்கின்ற அவலம் இன்று....
- வானத்தில் பறந்த உலங்குவானூர்திக்கு பித்தளைப் பொத்தான் மூலம் சமிக்ஞை...
- மூன்று மாதங்கள் கடந்தும் முடிவுறாத அவலங்கள்...
- சீறிச் சினந்தது கலோராஸ்! - உலகை உலுக்கும் இயற்கை அனர்த்தங்கள்.

## பேராயர் ஜெபநேசன் ஓய்வுபெறுகிறார்



தென்னிந்தியத் திருச்சபையின் பேராயராகக் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகள் இறைபணியாற்றி வந்த பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் நாளையுடன் ஓய்வு பெறுகின்றார்.

தமிழ்ப் பற்றும் ஆழ்ந்த தமிழ் மொழிப் புலமையும் நிறைந்த பேராயர் ஜெபநேசன் 1993ஆம் ஆண்டு போர் நெருக்கடிகள் மிகுந்த வேளையில் - தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இக்காலப்பகுதியில் இறைபணியில் தம்மை இணைத்துக்கொண்ட அவர், போரினால் பாதிக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் போரியல் வரலாற்று அரும்பொருள் காப்பகம் திறப்பு

கிளிநொச்சி,மார்ச்27

பளை, இத்தாவில் பகுதியில் போரியல் வரலாற்றுச் சான்றுகளை எடுத்தியம்பும் அரும்பொருள் காப்பகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவு படைத்தளத்தை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட '[illegible] அலைகள் 3' போர் நடவடிக்கையின் [illegible] மாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் [illegible]களின் குடாரப்புத் தரையிறக்கம் இடம்பெற்ற [illegible]ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டியே இந்த அரும்பொருள் காப்பகம் திறந்துவைக்கப்பட்டது.

முற்பகல் 10 மணியளவில் திறப்பு விழாவில் முதன்மைச் சுடரினைத் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றினார்.

மாவீரர்களை நினைவுகூரும் உருவப் படத்திற்குத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஈகச்சுடரேற்றி

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பு நேற்று ஆரம்பம்

### முதலில் ஐரோப்பிய நாடுகளுக்கே சேவை




கிளிநொச்சி,மார்ச்27

தமிழ்மண்ணின் தேசிய ஒளி ஊடகமான தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிச் சேவை(என்.ரி.ரி.) நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ தொலைக்காட்சிச் சேவையான இந்த ஒளிபரப்பு முதலில் ஐரோப்பியப் பிராந்தியத்துக்கான சேவையை நேற்று ஆரம்பித்தது.

தாயக நேரப்படி நேற்று நள்ளிரவு 12 மணிக்கு தேசியத் தொலைக்காட்சிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஐரோப்பாவின் ரி.ரி.என். தொலைக்காட்சி ஊடாக இந்தச் சேவை நடைபெறுகிறது.

வன்னியில் இருந்து 30 நிமிடநேர நிகழ்ச்சி நேற்று ஒளிபரப்பப்பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமரின் கருத்துக்களால் ஜே.வி.பி. கட்சிக்குள் குழப்பம்!

கொழும்பு,மார்ச்27

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் வெளியிட்ட சில கருத்துக்கள் ஜே.வி.பி. கட்சிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஆராய்வதற்காக கட்சியின் அரசியல் குழு அவசரமாக நாளை திங்கட்கிழமை கூடுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டாலும் அதற்காக அரசில் இருந்து ஜே.வி.பி. வெளியேறிவிடாதென்றும் அதற்கான உத்தரவாதம் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கருத்துக் கூறியிருந்தார்.

இக்கருத்தே ஜே.வி.பிக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரக்கணக்கில் தீபங்கள் ஏற்றி உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி

### நகரில் நேற்று மாலை படையினரின் வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனை வைபவமும், தீபங்கள் ஏற்றும் நிகழ்வும் நேற்று மாலை யாழ். துரை[illegible]ப்பா மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டப் படைத்தளபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவங்களில் பெரும் எண்ணிக்கையான மதப் பிரதிநிதிகளும் படையினரும் கலந்துகொண்டு மலர்களைத் தூவி தீபங்களை ஏற்றினர். ஆயிரம்

(20ஆம் பக்கம் பார்க்க)







ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த பொதுமக்களின் ஆத்மசாந்திக்காக யாழ். பாதுகாப்புப் படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தீபம் ஏற்றும் நிகழ்வு நேற்றுமாலை துரையப்பா விளையாட் டரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

மதபிரதிநிதிகள் தீபங்களை ஏற்றுவதையும் அதில் கலந்துகொண்ட படைஅதிகாரிகள் மற்றும் அரச பிரதிநிதிகள் ஆகியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள் : பிரபா)*

# விபத்தில் காயமடைந்தவர் வீதியில் கவனிப்பாரின்றி மயங்கிக் கிடந்தார்

## கொக்குவில் பகுதியில் வியாழன் இரவு சம்பவம்

வலி.வடக்கு,மார்ச்27

மோட்டார் சைக்கிளால் மோதுண்ட ஒருவர் நீண்டநேரம் கவனிப்பாரின்றி வீதியில் விடப் பட்டு பின்னர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழனன்று இரவு கொக்குவிலில் இடம்பெற்றது.

இரவு 8.30 மணியளவில் பழைய தபால் கந் தோர் ஒழுங்கை வழியாக காங்கேசன்துறை வீதிக்கு சைக்கிளில் வந்த பிரஸ்தாப நபரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிவிட்டுத் தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

சனநடமாட்டம் குறைந்த நேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றதால் காயமடைந்தவர் வீதி யிலேயே வீழ்ந்து கிடந்தார். தலையில் பலத்த காயம் ஏற்பட்டு குருதி வெளியேறிய நிலை யில் கிடந்த அவரைக் கண்ட சிலர் போதை யில் வீழ்ந்து கிடப்பதாக எண்ணிக் கைவிட்டுச் சென்றுள்ளனர். பின்னர் அப்பகுதி குடியிருப் பாளர் ஒருவர் தற்செயலாகக் காயமடைந்து மயங்கிக் கிடந்த நபரைக் கண்டு யாழ். ஆஸ் பத்திரியில் சேர்த்தார்.

கொக்குவில் கிழக்கு, பழைய தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந் தையான செந்தில்குமரன் என்பவரே விபத்தில் காயமடைந்தவராவார். (ஐ-86)

# திருட்டுப் பேர்வழியான மகனை பொலீஸிடம் சிக்கவைத்த தாய்

## நெல்லியடியில் நேற்றுச் சம்பவம்

கரவெட்டி,மார்ச்27

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற பல கொள்ளைகளுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் நேற்று பொலீஸாரிடம் சிக்கினார். அவருடைய தாயாரே அவரைக் காட்டிக்கொடுத்துப் பொலீஸாரிடம் சிக்கவைத் தார் என்று கூறப்படுகிறது.

திருட்டுகள், கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த கண்ணன் என்று அழைக்கப்படும் பாஸ் கரன் என்பவரே பொலீஸாரிடம் மாட்டினார்.

இவரது சமூகவிரோதச் செயல்களால் ஏற் பட்ட பாதிப்புகளை அறிந்து வேதனையுற்ற தாயார் அவரை பொலீஸில் ஒப்படைக்க முயன் றார் என்று கூறப்படுகிறது.

மகனைப் பொலீஸாரிடம் கையளிக்கும் எண் ணத்துடன் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி அவரை ஓட்டோ ஒன்றில் ஏற்றி நெல்லியடிப் பொலீஸ் நிலையம் நோக்கித் தன்னோடு அழைத் துச் சென்றிருக்கிறார் அந்தத் தாயார்.

விவரம் புரிந்த மகன் வழியில் ஓட்டோவில் இருந்து குதித்துத் தப்பி ஓட முயன்றார் என் றும் -

அப்போது தாயார் 'திருடன் திருடன்' என்று குரல் எழுப்பவே வீதியில் காணப்பட்டவர்கள் அவரை மடக்கிப் பிடித்து பொலீஸாரிடம் கைய ளித்தனர் எனவும் கூறப்படுகிறது. (ஐ-70)

# மஹா கும்பாபிஷேகம்

வேலணை மேற்கு, பெரியபுலம் முடிப்பிள் ளையார் என அழைக்கப்படும் ஸ்ரீ மகா கண பதிப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9.13 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு பூர்வாங்கக்கிரியைகள் ஆரம்பமாகும்.

நாளை மதியம் 12 மணி தொடக்கம் மறு நாள் செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (3-204)

★ ★ ★

வல்வெட்டித்துறை பெரியதம்பிரான் ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9.43 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நிகழ்வு இடம் பெறும். (3-70-204)

| | | | |
|---|---|---|---|
| கு செ புத ரா | | | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| செவ் | | | |
| | | சந் | வீ கே |

# இந்த வார இராசி பலன்

## 27.03.2005 – 02.04.2005

**மாற்றம்:**
27.03.2005சித்திரை சந்திரன் துலாம் - இராசியில் நிற்கும்.
29.03.2005இல கும்ப இராசியில் புதன் நிற்கும்.

### மேடம்

சிறுவாகனத்தால் செலவு, திடீர் நண்பர்களால் இழப்பு காரணமற்ற கவலை, இன ஜனங்களின் பிரிவுகள் ஏற்பட இடம் உண்டு. மற்றவர்கள் ஆலோசனை சொல்வதை ஏற்றுக்கொள்ளாத நீங்கள், இந்த வாரம் உங்கள் நன்மைகருதிப் பொறுமையாக இருந்தால் இலா பம் அடைவீர்கள். பொருள்வரவு, பெரியவர்கள் உதவி, தூரதேச செய்திகள் என்பன கிடைக்கும். வாய்வுத் தொல்லை கொடுக் கும். வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிஷ்டநாள்கள் : புதன், ஞாயிறு.*

### இடபம்

விட்டுப்போகும் ஏழரை எட்டி உதைக்கும். மனத்துன் பம், வீண்பிரச்சினைகள் குடும் பத்தில் ஏற்படும். உறவினர் பிரிவுகள் மனத்துன்பத்தைக் கொடுக்கும். காணி பூமி சம்பந்தமான மாற்றங்கள் ஏற்படும். இடமாற்ற யோசனைகள் ஏற்படும். இரத்த அழுத்தம் அதிகரிக் கும். வியாபாரிகள் பண்ணை, விவசாயத் தொழில் செய்பவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள் : புதன்.*

### மிதுனம்

என்ன படிப்பு? இலாபமற்ற பேச்சு, வீண் பழிச்சொல் என் பன ஏற்படும். பணவரவு தடைப் படலாம். தொழில் ஸ்தானத் தில் அபிப்பிராயபேதம் ஏற்பட் டாலும் உங்கள் திட்டங்களை வரவேற்பார்கள். வீடுமனையில் புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படலாம். வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள் : புதன்*

### கடகம்

அதிகபணச் செலவுகள் ஏற்பட்டாலும் கலங்கிவிடாதீர் கள் எடுத்த காரியத்தை முடிக் கத் தெண்டியுங்கள். உடல் நிலையில் பாதிப்புவந்தாலும் வைத்தியர் ஆலோசனைப்படி செயற்படுங்கள் சுகம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் உதவிகளைச் செய்யத் தயங்குவர். அரசியல்வாதிகளுக்கு அதிகநன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள் : புதன்*

### சிங்கம்

இடமாற்றமொன்று ஏற்பட லாம். பெற்றோர் வழி உறவி னர் உதவிகள் செய்வார்கள் திருமணச் சுபகாரியப் பேச்சு களும் எதிரிகளின் மறைமுகப் பேச்சுக்களும் கொடுக்கும். பணவரவு அதிகரிக்கும். முழங்கால் நோ கொடுக்கும். உறவினர் வருகை மன ஆறுதலைத்தரும் குருத்தொழில் செய்பவர்கள் இலாபம் அடைவர்.

*அதிர்ஷ்டநாள் : புதன்.*

### கன்னி

தொழில்ஸ்தாபனத்தில் அதிகளவு வேலைப்பழு அதி கரிக்கும். மேலதிகாரிகளுக்கும் உங்களுக்குமிடையி[illegible] கருத்து வேற்றுமை அதி[illegible]க்கும். புத்திரர்களுக்கோ அன்று சகோதரர்களுக்கோ நன்மைகள் ஏற் படப்பாடுபடுவீர்கள். காயம், விஷபீடை, வயிற்றில் ரோகங்கள் வர இடமுண்டு. ஆசிரியர்கள், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் : புதன்.*

### துலாம்

உங்கள் முயற்சிக்கு ஏற்ப வருமானம் அதிகரிக்கும். வீடு மனை சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கலாம். சகோதரர்கள் உதவிகள் செய்வார்கள். கோயிற்செலவுகள் அதிகரிக்கும். வாகனத்தால் காயங்கள் வர இடமுண்டு கவனமாக இருக்கவும். எந்த அலுவல்களிலும் பொறுப்பு நிற்காதீர்கள் வீண்பழி கேட்பீர்கள். வியாபரிகள், சட் டத்துறையினர்களுக்கு வருமானம் அதிகரிக்கப் பலனுண்டு.

*அதிர்ஷ்டநாள் : புதன்*

### விருச்சிகம்

தூரதேசத்துப் பிரயாணங் களைப் பின்போடுவது நன்று அல்லது இழப்புக்களைச் சந் திப்பீர்கள் பிரயாணங்களில் நிதானமாக இருக்கவும். தொழில்ஸ்தாபனத்தில் மேலதிகாரி களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வீட்டில் வைத்தியச் செலவு கள் அதிகரிக்கும். அதிகாரிகள் உதவி செய்வார்கள். உறவினர் பிரிவு மனத்துன்பத்தைத் தரலாம். தொண்டை, அடிவயிற்று நோ என்பன கொடுக்கும். வியாபாரிகள், காவல்துறையினர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, புதன்.*

### தனுசு

சொன்ன சொற்படி நடக்க மாட்டீர்கள். இதனால் மற்றவர் களின் பேச்சுக்கு ஆளாகுவீர் கள். வீடு மனைச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் முன் னேற்றங்கள் கொடுக்கும். ஆலயச் செலவுகள் அதிகரிக்கும். பொதுத் தொண்டால் குறைகேட்டாலும் நாலுபேர் புகழத்தான் செய்வார்கள். குடும்பத்தில் எதிர்பாலரின் உடல்நிலைகளில் கவனமாக இருக்கவும். கால் நோவரும். குருத்தொழில், வியா பாரிகள் பொருள் வளம் பெறுவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, புதன்.*

### மகரம்

கூர் ஆயுதங்கள் பாவிக்கும் பொழுது கவனமாக இருங் கள். சிறுசிறு காயங்கள் வரத் தான் செய்யும். ஆனால், பயப் படத்தேவையில்லை. அடிக்கடி அலைச்சல் ஏற்படும். பொருள் விடயம், பணம் கையாளும்பொழுது அவதானமாக இருக்கவும். அயலவர்கள் பொறாமைப்படுவார்கள். என்ன கொண்டாட்டத்திற்கு போக எண்ணுகின்றீர்கள். நாரி நோ, கைகால் நோ வராமல் விடாது. ஆராய்ச்சியாளர்களுக்கு நன்மை ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, புதன்.*

### கும்பம்

உங்கள் பேச்சில் உள்ள உறுத' நிலையால் பல கரு மங்கள் நிறைவேறும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் அனுசரணையுடன் பலகாரியங்களை நிறைவு செய்வீர்கள். எதிர் பாராத தாக்கங்கள் ஏற்படலாம். பெரியவர்கள் உதவி செய்வார் கள். அரச அதிகாரிகள் உதவிகிடைக்கும். கால் வருத்தம் வைத்திய உதவி தேடுவீர்கள். ஆசிரியர்கள், பாதுகாப்புத்துறை யினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் : ஞாயிறு.*

### மீனம்

புதிய திட்டங்களை உருவாக் குவீர்கள். தொழில் சிறப்பு பண வரவு கொடுக்கும். ஆயினும் அடிக்கடி பதற்றம் ஏற்படும். நம்பியவர்கள் கைவிட்டுவிடுவர். புதியவர்கள் உதவிசெய்வார்கள் கைவிட்டுவிடுபவர் புதியவர்கள் உதவிசெய்வார்கள். கால் உளைவுகள் கொடுக்கும். பொருள் வரவு, வெளிநாட்டுச் செய்திகளால் மகிழ்ச்சி கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, புதன்.*

**மகாதேவா ஜோதிடம்**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதிகாரத்தில் நீடிக்கும் தந்திரம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில், அந்தப் பதவிக்குரிய காலத்தின் அந்தத்தில் நிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, என்ன அரசியல் குளறுபடிகளை - தகிடுதத்தம்களை - பண்ணியாவது தாம் அதிகாரத்தில் தொடர்ந்து ஒட்டிக்கொள்வதற்கு துடியாய்த் துடிக்கிறார்.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி, இந்த வருட இறுதியில் அவர் பதவியிலிருந்து இறங்க, வேறு ஒருவருக்கு அப்பதவி போக வேண்டும். தமது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பித்த விவகாரத்தில், சட்டத்தில் இருக்கும் ஓட்டையைப் பயன்படுத்தி வேண்டுமானால் இன்னும் ஒரு வருடத்துக்கு - அடுத்த வருட இறுதிவரை - இந்தப் பதவியில் அவர் நீடிக்க முடியும். அதற்கு வாய்ப்புகள் உண்டு.

ஆனால், அதற்கு அப்பால் அவர் இந்தப் பதவியில் இருக்கவே முடியாது என்பது தற்போதைய அரசமைப்பில் தெளிவாக உள்ளது.

எனவே, அரசமைப்பை எப்படியேனும் மாற்றியாவது தம்மை அதிகாரத்தில் வைத்துக்கொள்ள பகல் கனவு காண்கின்றார் சந்திரிகா.

இந்தவிடயத்தில் அரசமைப்பை அவர் மாற்றுவதாயின், அதற்கு அரசமைப்பில் உள்ள வழி முறைகளை அவர் நாடவேண்டும். ஆனால், அதையும் மீறி, அரசமைப்பை அதில் உள்ள ஏற்பாடுகளுக்கு மாறான முறையில், மாற்றவே அவர் எத்தனிக்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தாம் அதிகாரத்தில் நீடிக்க வேண்டும் என்ற அவாவை அவர் நிறைவு செய்வதாயின் - நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் மூன்றாவது தடவையும் ஒருவர் நீடிக்க வழிசெய்யும் விதத்திலோ -

அல்லது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, வேறு ஆட்சி முறையின் கீழ் அதிகாரத்தைத் தான் வைத்துக்கொள்ளக் கூடிய ஓர் ஆட்சி முறையை உருவாக்கும் விதத்திலோ -

அரசமைப்பை அவர் மாற்றியாக வேண்டும்.

இத்தகைய அரசமைப்பு மாற்றங்களைச் செய்வதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவையும் பெறவேண்டும் என அரசமைப்பு தெளிவாகக் கூறுகின்றது.

தனது உத்தேசத் திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் உரிய பெரும்பான்மையைப் பெறமுடியாத ஜனாதிபதி குமாரதுங்க, சர்வஜன வாக்கெடுப்பு என்ற பெயரில் ஒன்றை நடத்தி, மக்கள் அனுமதியைப் பெற்றுவிட்டேன் என்று காட்டி, அதை வைத்துக் கொண்டு நீதித்துறையின் உதவியோடு, அரசமைப்பை அதில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் மாற்றுவதற்கு முயல்வார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அரசமைப்புத் திருத்தத்துக்கான சட்ட ரீதியான நடவடிக்கையின் ஒரு கட்டமாக இந்த சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்துவதாயின், அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்ட மூலத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை அவர் பெறவேண்டும். அது சாத்தியமின்மை என்பதால் அந்த வகையில் இந்தச் சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்த முயலமாட்டார்.

மாறாக -

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தில் மக்களின் கருத்தை அறிவதற்காக, அந்த விவகாரம் சம்பந்தமாகச் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு விசேட உரிமை - அதிகாரம் - ஜனாதிபதிக்கு உண்டு எனத் தெரிவிக்கும் அரசமைப்பு ஏற்பாட்டை அவர் பயன்படுத்துவார். தமக்குள்ள அந்த அதிகாரத்தின் கீழ் இந்த சர்வஜன வாக்கெடுப்புக்கு அவர் உத்தரவிடுவார்.

அந்த சர்வஜன வாக்கெடுப்பின் முடிவு அவர் எதிர்பார்த்த - அவர் விரும்புகின்ற - பெறுபேறைத் தரக்கூடும்.

ஆனால், மக்கள் கருத்தறிவதற்காகத் தாம் நடத்திய சர்வஜன வாக்கெடுப்பின் பெறுபேறை மட்டும் வைத்துக்கொண்டு, தற்போதைய அரசமைப்பை அதில் அதற்கென உள்ள ஏற்பாடுகளைக் கவனிக்காமல் - அல்லது புறந்தள்ளி - எப்படி ஜனாதிபதி சந்திரிகா மாற்றப் போகின்றார்? தமது போக்குக்குச் சாதகமாக நீதித்துறையை அவர் எப்படி வளைத்துப் போடப் போகின்றார்?

காலம் பதில் கூறப் போகின்ற விடயங்கள் இவை.

எது, எப்படியென்றாலும் அவர் நாடப்போகின்ற வழிமுறையை, இலங்கை மட்டுமல்லாமல் சர்வதேச உலகமும் அவதானமாகப் பார்த்திருக்கின்றது என்பதை அவர் மறக்காமல் இருப்பது மிகவும் நல்லது.





சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் சுவிஸில் வாழும் ஈழத்தமிழ் அன்பர் ஒருவரின் நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் நிதியுதவி வழங்கிய தமிழ் அன்பர் ஆகியோர் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்குவதையும், மாணவர்களுக்கு வழங்குவதற்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ள சைக்கிள்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:பிரபா)

# சுனாமிபாதித்த 38 மாணவர்களுக்கு நேற்று சைக்கிள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்27

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடியிலுள்ள உயர் கல்வி கற்கும் 38 மாணவர்களுக்கு நேற்று சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன், சுவிஸில் இடம்பெயர்ந்து வசிக்கும் ஈழத்தவர் ஒருவர் சைக்கிள்களைக் கொள்வனவுச் செய்வதற்கான நிதியினை அன்பளிப்புச் செய்திருந்தார்.

சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பிரதிநிதி எஸ்.புவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட அனைத்துலக தொடர்பாளர் இளங்கோவும், தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வைத்து 28 பேருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை - மிகுதியாகவுள்ள 10 சைக்கிள்களைக் கையளிக்கும் நிகழ்வு வடமராட்சியில் இயங்கும் அனர்த்த புனர்வாழ்வுச் செயலணியில் நேற்று நண்பகல் இடம்பெற்றது. (எ-7)

# வலி.தென்மேற்கில் வீதி விளக்குகள் பொருத்த விரைவில் நடவடிக்கை

## பிரதேச செயலர் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,மார்ச்27

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் விரைவில் வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச செயலர் அ.சுப்பிரமணிய சர்மா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பொறியியலாளரினால் 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கான மதிப்பீடுகள் யாழ்.அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

ஆனால், அதற்கான நிதி போதியளவு வந்து கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் வீதி விளக்குகள் பொருத்தப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதுவிவகாரம் விரைவில் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (எ-185)

# நவாலியில் வீடு புகுந்து பட்டப்பகலில் திருட்டு

நவாலி,மார்ச்27

நவாலியில் பட்டப்பகலில் வீடு புகுந்து திருடர்கள் ஒருதொகைப் பணம் உட்பட பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் .

இச்சம்பவம் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திற்கு சமீபமாக வசிக்கும் ஆசிரியர் ஆ.ரூபநாதனின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வழமை போல் வீட்டுரிமையாளரும் அவரது மனைவியும் கடமைநிமிர்த்தம் வெளியில் சென்றுள்ளனர் இதன் பின்னரே இந்தத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்க ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தையும் டெக் மற்றும் பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-100)

# காணி சம்பந்தமான பிரச்சினையை தீர்த்துவைக்க திருமலையில் பட்டறை

## அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் பங்கேற்றனர்

யாழ்ப்பாணம்,மார்ச்27

வடக்கு - கிழக்கு மக்களின் காணி உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் அதற்கான முதலாவது பயிற்சிப் பட்டறை அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றது.

தொடர்ந்து 4 நாள்கள் இடம்பெற்ற இவ்வேலைப்பட்டறையினை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சிப் பட்டறையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் காணி ஆணையாளர்கள், காணி உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வடக்கு - கிழக்கில் வசிக்கும் மக்கள் இதுவரை காலமும் எதிர்நோக்கிய காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மான ஆலோசனைகளும் அதன் மூலம் வீட்டு நிர்மாணப்பணிகளுக்கு வேண்டிய அரச உதவிகளைப் பெறுவது தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (எ-202)

# இணுவிலில் நூல் வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,மார்ச்27

தெய்வீக அருட்புகழ் நூல் வெளியீடும், இறுவட்டு வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வெளியீட்டுரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் சிறப்புரைகளை பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரும் -

நயப்புரையை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதனும் தகவுரையினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் இன்னிசை வேந்தன் பொன்.சுந்தரலிங்கம், இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணன், நுண்கலைப் பீடத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா, லயஞான சிரோண்மணி, எஸ்.மகேந்திரன், பிச்சையப்பா ரஜிந்தன், இசைச்சுரபி கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, இன்னிசை வாரிதி கலாபூஷணம் வி.கே. நடராசா, இன்னிசை வாரிதி சி.சிவஞானராஜா, இசையரசி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன், கலைமாணி த.றொபேட், சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரம், நி.வரோதயன் ஆகிய கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். (எ-203)

**நாளை**

*பங்குனி 15*
*திங்கட்கிழமை*
*28.03.2005*
*திதி : திருதியை*
*பின்னிரவு 1.58 வரை.*
நட்சத்திரம் : *சுவாதி*
*பின்னிரவு 1.17 வரை.*
காரைக்காலம்மையார் குருபூசைத்தினம்
*சுபநேரம் : 12.13 - 1.43*
*ராகுகாலம் : 7.43 - 9.13*
*(யாவும் பழைய நேரப்படி)*

# கழிவுநீர் வடிகால்கள் குறித்து முறைப்பாடு

குருநகர்,மார்ச்27

குருநகர் பகுதியில் உள்ள கழிவுநீர் வடிகால்கள் சீராகத் துப்புரவுச் செய்யப்படுவதில்லை என இப்பகுதிக் குடியிருப்பாளர்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

இந்த வடிகால்களைத் துப்புரவு செய்ய காலைவேளைகளில் வருகைதரும் சுத்திகரிப்பாளர் தமது கடமைகளைச் சீராகச் செய்வதில்லை. இதனால், வடிகால்களில் பாசி படிந்து காணப்படுவதுடன் மணல் நிரம்பியுள்ளது.

வடிகால்கள் சீராகத் துப்புரவுச் செய்யப்படாமையால் கழிவுநீர் வடிந்து செல்ல முடியாமல் தடைப்படுகின்றது. இதனால், துர்நாற்றம் வீசுகின்றது - என்று அவர்கள் மேலும் கூறினர்.

வடிகால்கள் சீராகத் துப்புரவுச் செய்யப்படாமையால் குருநகர்ப் பகுதியில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-51)

**உதயவாக்கு**

கொடுமையில்லாமலே தீமையை அழிப்பதற்கு நகைச்சுவையால் தான் முடியும். *– பெர்னாட்ஷா*

## மனமுவந்து வாழ்த்துவதற்கு அழைக்கின்றோம்




திரு-திருமதி நித்தியானந்தன் - அருட்செல்வி தம்பதியரின் அன்புப் புதல்விகளாகிய நாம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) எமது இல்லத்தில் பிறந்தநாளைக் கொண்டாடுகின்றோம். சகல கலைகளும் கற்று நாம் நிறைந்த செல்வத்துடன் வாழ எம்மை வாழ்த்துமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

281/7 கண்டி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.021 222 5777

நி.தயானந்தி, நி.வித்தகி

### கூட்டங்கள்

தோப்புக்காடு, காரைநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பல வருடங்களாக நடத்தப்படாமல் இருந்த இச் சங்கத்தின் பொதுக் கூட்டம் காரைநகர் உதவி அரச அதிபரின் தீவிர முயற்சியால் மீண்டும் நடைபெறுவது குறிப்பிடத் தக்கது. (எ-175-202)

★★★

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர்களின் பொது அமைப்பின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலையின் தொழில் அதிபரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-202)

★★★

தென்மராட்சி,மார்ச்27

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமானப் பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 11 மணிக்கு சுன்னாகம் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும். (எ-117-202)

### பாதை திறப்பு

கடந்த பல வருடங்களாகப் பொதுமக்கள பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி, கச்சாய் வீதியிலிருந்து புகையிரதப், பாதையூடாகத் தனங்களப்பு வீதிக்குச் செல்லும் பாதை திறந்துவிடப் பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள குடியிருப்புகளில் இடம்பெயர்ந்திருந்த முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதை அடுத்து இவ்வீதி திறந்துவிடப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-117)

### மருத்துவமுகாம்

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை நவாலி வடக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாகக் கழகத் தலைவர் லயன் எஸ்.சிவராஜீஸ்வரன் அறிவித்துள்ளார். ( எ-202-185)

### மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர்களுக்கான பொதுக்கூட்டம்

இடம்: விரிவுரை மண்டபம் - I மருத்துவபீடம்
காலம்: இன்று (27.03.2005) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 4 மணி (43556) (24-14-15)

விடயம்: மருத்துவபீட மாணவர் பெற்றோர் சங்கத்தினை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் இடைநிறுத்தப்பட்ட சத்திர சிகிச்சை கற்கைநெறியினை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடல்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் சகல மாணவர்களினதும் பெற்றோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர், மருத்துவ மாணவர் ஒன்றியம் - (2005).

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 – 06 – 1930



இறப்பு 07 – 04 – 2004

**திருமதி இராமசாமி கோகிலம்**

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உமது நினைவு என்றென்றும் மறையாது
ஈண்டு உமது திருமுகம் கண்முன் தெரிகிறதே
மாண்டு நீர் போனாலும் மறக்கவே மாட்டோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: ச.செல்வராஜா (மருமகன்).
அம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(43547)(42-14-15-24)

### 2005 A/L இற்குப் பிறகு இந்தியாவில் படிப்புகள்

**பிருந்தாவன் கல்லூரி**

முன்னர் தேசிய முதன்மைத் தரக் கல்லூரி
பங்களூர் பல்கலைக்கழகம் இந்தியா

பட்டப்படிப்புப் பாட நெறிகள்

B.Sc. உயிரியல் தொழில்நுட்பம்
B.Sc. மரபியல்
B.Sc. நுண் உயிரியல்
B.Sc. வர்த்தக முகாமைத்துவம்
B.Sc. கணனி விஞ்ஞானம்
B.B.M.வர்த்தக முகாமைத்துவம்
B.C.A. கணனிப் பிரயோகம் (அப்ளிகேஷன்)

பட்டபின் படிப்பு பாடநெறிகள்
M.Sc., M.B.A., M.C.A.

★ 42 தேசத்தவர்களுடன் கற்றல்.
★ 270 சிறிலங்கன்களுடன் கற்றல்.
★ 350+சிறிலங்கன் மாணவர்கள் ஏற்கனவே பங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.
★ பதிவுக்கட்டணமின்றி மாணவர்கள் ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
★ 2005 A/L எழுதவிருக்கும் மாணவர்கள் பெறுபேறுகளை எதிர்பார்த்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்
★ ஒதுக்கீட்டுக்கான கட்டணம் US$ 400

See Website
www.brindavancollege.com.
Send E.Mail
enquiry @ brindavancollege.com
info@ brindavancollege.Com

COMPANY SECRETARIAL SERVICES (PVT) LTD.
NO.285, C 1/1, STANLCY TILLAKARATNE MW.
NUGEGODA.
T.P. 011 - 2854438, 0777-317043
(C/41808) (24-14-15)

### சித்திரத்தேர் அமைத்தல்

அராலி வடக்கு, மயிலியற்புலம் கந்தசுவாமி கோயிலுக்குச் சித்திரத்தேர் அமைப்பதற்குத் தகுதியானவர்கள் 10.04.2005ஆம் திகதி காலை 10 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மேற்படி கோயில் மண்டபத்திற்கு அனுபவச் சான்றிதழ், ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(43560) (24-14-15)

பரிபாலன சபையும்
தேர்த்திருப்பணிப் சபையும்
மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில்.

Moorthy Lazer Digital Colour Lab

### இலவச பயிற்சியுடன் வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் Photo Graphing & Photo Printing போன்ற துறைகளில் பயில ஆர்வமுள்ள இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

விண்ணப்பதாரிகள் வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் போன்ற பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிக்கலாம்

முன் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 30.03.2005 ஆம் திகதிக்கு முன் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அழைக்கின்றோம்



தொடர்புகொள்ளவேண்டிய முகவரி
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
யாழ் வீதி மானிப்பாய்
தொ.இல.021-222 2884

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07*03*1933
மறைவு 19*03*2003

அமரர் **செல்லப்பா பிரமானந்தம்**

அன்பு என்ற சொல்லுக்கே இலக்கணமாய் வாழ்ந்து எம்மையும் அவ் வழியே வளர்த்து ஆளாக்கிய எங்கள் அப்பா நீங்கள் இறையடி சேர்ந்து இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பு முகம் மறையாது எம் மனதில்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

54/12,கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்

மனைவி,பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(43521)(51-14-15)

## பிறக்கப்போகும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு---!

## எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஒரே கூரையின் கீழ் தனது சேவையை மேலும் விஸ்தரிக்கவுள்ளது

kit

01.04.2005 ஆம் திகதி முதல் தினசரி சொகுசுபஸ் சேவை/வான் சேவை

**கொழும்பு - யாழ் - யாழ் - கொழும்பு**

more Mobitel

திங்கள், வியாழன், சனி ஆகிய மூன்று நாள்களிலும் கொழும்பு - யாழ்.சொகுசு பஸ் வெள்ளவத்தை...ல் இருந்து காலை 5.00 மணிக்குப் புறப்படும்.

யாழ்-கொழும்பு முதல் பஸ் காலை 7.00 மணிக்குப் புறப்படும் இரண்டாவது பஸ் 7.30 மணிக்கு நெல்லியடி, பருத்தித்துறை, கொடிகாமம் ஊடாக கொழும்பைச் சென்றடையும்.

★ஒரு நாளில் ஒரு பயணத்துக்கு ஒரு டிக்கட் குலுக்கல் முறை மூலம் இலவசம்!

**எமது முகவர்களுக்கு ஒரு நற்செய்தி**

1. Kit Card 100 - 400 - 1000
2. More Card 350 - 1000
3. Sim Card

பதிவுகளுக்கு:

1. பஸ்நிலையத்துக்குமுன்உள்ள Atlas Telecom
2. அற்லஸ், இல. 77, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
3. அற்லஸ், இல. 01, கண்டி வீதி, கொடிகாமம்.

மொத்தமாகவும் (சில்லறையாகவும்) பெறும்முகவர்களுக்கு விசேட சலுகைகளுடன் எமது பொருள்களைப் பெற்றுக்கொள்ள வசதிகள்செய்து கொடுக்கப்படும்.தேவை ஏற்படின் தங்கள் வசதியைக் கருத்திற்கொண்டு பொருள்களை உரிய இடத்துக்குக் கொண்டுசென்று வழங்கப்படும்.




**Atlas - அற்லஸ்**

தொடர்புகளுக்கு:- அற்லஸ் கொமினிகேஷன்

1. பஸ்நிலையத்துக்கு முன் உள்ள Atlas Telecom :- 222 2031
2. அற்லஸ், இல. 77, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் :- 222 2557, 2990
3. அற்லஸ், இல. 01, கண்டி வீதி, கொடிகாமம் :- 2263400, 2263411,

(C-41638)(53-11)

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் (சோக்கேஸ், Hall Set) Sony 21" T.V., றலி பழைய மொடல் சையிக்கிள் ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:.
இல. 16/2, கைலாசபிள்ளையார் கோயில் வீதி (சொக்கன் கடை அருகில்),
(43558) நல்லூர், யாழ்ப்பாணம். (24-14-15)

### பதவி வெற்றிடங்கள்

- அலுவலக விசிதர்
- Computer Typist
- பரீட்சைப்பகுதி பொறுப்பாளர்
- ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள்

தேவையான தகைமைகள்:

1) தெரிவுசெய்யும் பதவிக்குரிய உயர் கல்வித் தகைமைகளும் அனுபவமும்
2) நிறுவனத்திலிருந்து 3 km சுற்றாடலில் வசிப்பவராயிருத்தல்.

நிறுவனப் பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

- அதிபர்.

The Express Institute
Irupalai, Kopay. (43533) (21-14-15-24)

# நிறைவான தமிழ்ப் புலமை உடையோர் இப்போது மிக அரிதாகிவிட்டனர்



**இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமான சம்பந்தன் விருதினை இந்த ஆண்டு பேராசிரியர் சின்னையா மௌனகுரு பெற்றுக்கொண்டார். கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.**

**பேராசிரியர் சி.மௌனகுரு இப்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண் கலைத்துறைத் தலைவராகப் பணிபுரிகிறார். யாழ்ப்பாணத்தில் பாடசாலை ஆசிரியராகவும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் பல்கலைக்கழக ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். இவர், ஆசிரியர் மட்டுமல்லர். எழுத்தாளர், நடிகர், நெறியாளர், ஆய்வாளர், திறனாய்வாளர் என்று பன்முகங்களைக் கொண்டவர்.**

**மூன்று மாதங்களுக்கு முன் எமது மக்களில் பெரும் எண்ணிக்கையானோரை நிர்க்கதிக்கு ஆளாக்கிய 'சுனாமி' எனப்படும் கடற்கோளினால் தாக்கப்பட்டவர்.**

**பேராசிரியர் துலங்கும் அகன்ற துறைகள் குறித்தும் அவற்றில் அவர் பெற்ற அனுபவங்கள் குறித்தும் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியின் முதலாவது பகுதி இது.**

❑ *கேள்வி:* உங்களைப் பற்றிச் சொல்லுங்கள். உங்கள் இள்மைக்கால நினைவுகள், நாடகத்துறையில் உங்கள் ஈடுபாடு, கல்விப்புலம் சார்ந்த உங்கள் செயற்பாடுகள், அரசியல் அனுபவங்கள்?

❍ *பதில்:* நான்கு வினாக்களை ஒரேயடியாக வினவுகிறீர்கள். என்னைப் பற்றி என்ன சொல்ல?

நான் தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண் கலையும் நாடகமும் அரங்கியலும் பயிற்றுவிக்கின்றேன். பல்கலைக்கழகத்தின் சில பொறுப்புகள் என்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. எனது ஆய்வுத்துறை நாடகமும் அரங்கியலுமாயின், தமிழியல், வரலாறு, இந்துநாகரிகம், மெய்யியல், சமூகவியல் என்பனவற்றிலும் எனக்கு மிகுந்த நாட்டமுண்டு. பல்துறைச் சங்கம் ஆய்வு நெறியில் (Multi diciplinary Apprach) எனக்கு நம்பிக்கை உண்டு.

ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியனாக, பின் சேவைக்கால பயிற்சி ஆசிரியராக, கொழும்பில் பாட நூல் எழுத்தாளராக, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக எல்லாம் 1980 வரை பார்த்த தொழில்சார் உத்தியோகங்களும் 17 வருட யாழ்ப்பாண வாழ்வும் என் அனுபவங்களை அகலித்தன.

இளமைக்கால நினைவுகள் யாவும் என் அழகிய கிராமம் சார்ந்தவை.

*மீன்மகள் பாடுகிறாள் வாவிமகள் ஆடுகிறாள்*
*மட்டுநகர் அழகான மேடையம்மா - அங்கு*
*எட்டுத் திசையும் கலையின் வாடையம்மா*

- என்று கவிஞர் காசி ஆனந்தன் பாடிய மட்டுநகர் வாவியின் ஓரமாக அமைந்திருந்த அழகிய அமிர்தகளி சீலாமுனைக் கிராமியச் சூழலும், வாவியின் அழகும், சோலைகளின் அமைதியும், எளிமையான அதேவேளை, உறுதியும் தன்மானமும் மிக்க மக்களின் வாழ்வும்' அவ்வூரில் நடைபெறும் கூத்துக்களின் மத்தள ஒலியும் சதங்கை ஒலியும் ஆட்டலாவகமும் கோயில்களின் உடுக்கொலியும், சிலம்பொலியும் கண்ணகி அம்மன் குளிர்த்திப் பாடல்களும் அம்மானைப் பாடல்களும் என் இளமைக்கால நினைவுகளில் ஆழமாகப் பதிந்தவை.

இளமைக்காலத்தில் கிராமப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி, 5ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பெற்றதால் பத்து மைலுக்கு அப்பாலிருந்த வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் இடைநிலை உயர் நிலைக்கல்வி. அங்கு பல்வேறு மதங்கள், பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் 8 வருடம் மிகவும் கட்டுப்பாடான விடுதி வாழ்க்கை. இவை என் ஆரம்ப அடித்தளம.

ஆறு வயதினிலேயே நாடகத்துறையில் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. பாடசாலை நாடக மொன்றில் அந்தப் பிஞ்சு வயதில் நடித்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியும் புகழும் என்னை நாடகத்தின்பால் ஈர்த்தன. தொடர்ந்து மத்திய கல்லூரியின் நாடகங்கள். நான் உயர்தரம் படித்துக்கொண்டிருக்கையில், கூத்தில் சிவ வேடனாக ஆடினேன். அதனால் கவரப்பட்ட பேராசிரியர் சு.வித்தியானந்தன் அதனைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றினார். அங்கு சிங்களப் பேராசிரியர்களும் தமிழ் மாணவர்களும் பலமாக அதனை வரவேற்றபோது, கூத்தில் ஏதோ இருப்பதாக உணர்ந்தேன். இவ்வாறுதான் நாடக ஈடுபாடு ஏற்பட்டது.

செவ்வி கண்டவர்: தே.தேவானந்த்

### கைகளைக் கீறி இரத்தக் கையெழுத்திட்டு அரசுக்கு மகஜர் அனுப்பினேன்

அரசியல் செயற்பாடுகள் சுவாரஸ்யமானவை. நான் எனது 15 ஆவது வயதிலே அன்றைய தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளன்; செயற்பாட்டாளன், தமிழரசுக் கட்சிக்கு அன்று மட்டக்களப்பின் இளைஞர் அணி முதுகெலும்பு. காசி ஆனந்தன் என்னைவிட 10 வயது மூத்தவர். அவர் அப்போது சென்னையில் படித்துக்கொண்டிருந்தார். அவர் பாதிப்பு என்னில் இருந்தது. 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' என்ற ஓர் இயக்கம் நடத்தினோம். வீதி வீதியாகத் தமிழுணர்ச்சிப் பாடல்களை இரவு பகலாகப் பாடிச் செல்வோம்.

அன்று நான் மட்டக்களப்பு மாணவர் மன்றத் தலைவராக இருந்தேன். மாணவர்களை ஒன்றுதிரட்டிக் கைகளைக் கீறி இரத்தக் கையெழுத்திட்டு ஆட்சியாளருக்கு மகஜர் அனுப்பினோம்.

2000 மாணவர்களைத் திரட்டிச் சென்றமைக்காகப் பாடசாலையில் எனக்குப் பகிரங்கப் பிரம்படி கிடைத்தது. விலக்கவில்லை. மாணவர் எதிப்புக்கு அதிகாரம் பயந்தது. 1960இல் யாழ். மாணவ மன்றத்தின் அழைப்பில் இங்குவந்து முத்திரைச் சந்தை மைதானத்திலும் கைகளைக் கீறினோம். அன்று நான் மிகத் தீவிர தமிழ்ப் பற்றாளனாக இருந்தேன். அன்றைய தமிழரசுக் கட்சி அரசியல் தலைவர்களுடன் தொடர்பிருந்தது.

1961இல் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றபின்னர் சிங்கள மாணவர்களினதும், யாழ்ப்பாண இடதுசாரி மாணவர்களதும் நட்புக்கிடைத்தது. மாக்சிஸத்தின் அறிமுகம் கிடைத்தது. புதிய பார்வையில் உலகைப் பார்க்கும் பயிற்சியும் கிடைத்தது. இன, மத, சாதி, வர்க்க பேதமில்லாத இலங்கையை உருவாக்க அதுதான் மார்க்கம் என்று எம்மிற் பல இளைஞர்கள் எண்ணினர். அர்ப்பணிப்போடு ஈடுபட்டனர். பல இடதுசாரித் தலைவர்களின் தொடர்பும் கிடைத்தது.

பின்னர் இடதுசாரிக் கட்சிகள் பெருந்தேசியவாதக் கட்சிகளுடன் சங்கமித்ததைக் கண்டு வெறுப்புற்று அந்த அரசியற் போக்கிலிருந்து ஒதுங்கிக்கொண்டேன். சாதாரண வறிய மக்களின் விடுதலை பற்றி எந்த அரசியற் கட்சிகளும் கவனம் செலுத்தாமை எனக்குக் கட்சி அரசியலில் பலத்த வெறுப்பை ஏற்படுத்தியது. 1970 இற்குப் பின்னர் கட்சி அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டேன். இப்போது கலை உலகில் என் செயற்பாடுகள் தொடர்கின்றன. நாடகத்துறையிலும் ஆய்வுத்துறையிலும் என்னாலானவற்றைச் செய்துகொண்டிருக்கின்றேன்.

### பேராசிரியர் வித்தியானந்தன் எனது திசைகாட்டி

❑ *கேள்வி:* பாரம்பரியக் கூத்துக்களில் பரிட்சயமுடைய நீங்கள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வித்தியானந்தனுடன் இணைந்து கூத்துப் புத்தாக்க முயற்சிகளில் ஈடுபட்ட அனுபவத்தைக் கூறலாமே?

❍ *பதில்:* பேராசிரியர் சு.வித்தியானந்தன் என் வாழ்வின் திசைகாட்டிகளுள் மிகமுக்கியமானவர். ஆசிரியர் என்பதைவிட அவர் எனக்கு ஓர் அப்பாவைப் போல. அவர் 4 கூத்துக்களை அங்கு தயாரித்தார். கூத்துக்களைச் சுருக்கி எழுதுபவனாக, பிரதி உருவாக்குபவனாக, ஆடல், பாடல்களை அண்ணாவியாருடன் சேர்ந்து பழக்குபவனாக, கூத்து உடுப்புகள் தயாரிப்பவனாக இருக்கும் வாய்ப்பை எனக்கு அவர் அளித்தார். பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி, பாலகிருஷ்ணன் என்போர் அவருக்குத் துணையாக நின்றனர். ஒருவகையில் அவரும் இவர்களும் என்னைப் புடம்போட்டனர். கர்ணன் போரில் கர்ணனாகவும் நொண்டி நாடகத்தில் செட்டியாகவும் இராவணேசனில் இராவணனாகவும் நடித்தேன். நடிப்பு முறைகளை, நாடகம் எழுதும் முறைகளை, நாடகம் தயாரிக்கும் முறைகளைப் பேராசிரியர் வித்தியானந்தனிடமிருந்தும் பேராசிரியர் சிவத்தம்பியிடமிருந்தும் கற்றுக்கொண்டேன். அந்தக் கூத்துக்கள் இலங்கையின் பலபாகங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டன. இதனால். நான் பரவலாக அறிமுகமானேன். பல புதிய நண்பர்கள் கிடைத் தனர். நான் அழகாக ஆடுவதாகவும் நடிப்பதாகவும் பலர் கூறினார்கள். அதனால், கவரப்பட்டவர்தான் என் மனைவி சந்திரலேகா.

❑ *கேள்வி:* தமிழ்த் துறையில் உங்கள் சாதனை யென்று எதைச் சொல்லுவீர்கள்?

❍ *பதில்:* சாதனை என்பதெல்லாம் பெரிய வார்த்தைகள். நம்மால் முடிந்ததைச் செய்கிறோம். அவ்வளவுதான். நான் பேராதனையில் தமிழ் சிறப்புப் பட்டம் பெற்றேன். முறையாகத் தமிழ் பயின்றோம். தமிழ்ப பண்பாட்டைத் தெளிவாக உணர அக்கல்வி பயன் தந்தது. சங்க இலக்கியம், காவியம், இலக்கணம் என்பனவற்றுடன் சைவசித்தாந்தம், சித்தர் பாடல்கள், நவீன இலக்கியம் எல்லாம் படித்தோம். தமிழை சமூகவியற் பின்னணியில் ஆயும் முறையியலை கைலாசபதி மூலம் பெற்றுக்கொண்டேன். அவ்வகையில் தமிழ் இலக்கியத்தை ஆராயத் தொடங்கினேன். அவை இலக்கியக் கட்டுரைகள். கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் நீலாவணன், விபுலானந்தர் காலமும்கருத்தும், சங்க கால இலக்கியமும் வாழ்வும், ஒரு மீள் பார்வை எனும் நூல்கள் இவ்வகையின. தமிழியலில் பல புதிய பார்வைகள் செலுத்தப்பட்டுள்ளன.

பேர்ட்டன் ஸ்ரைன், நொபுறுகறோசிமா, சுப்பராயலு, ஐராவதம், மகாதேவன், செண்பகலக்சுமி ஆகியோரது விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் புதுப்புலங்களைக் காட்டியுள்ளன. இப்பின்னணியில் சில கட்டுரைகள் எழுதியுள்ளேன். எமது பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலே குறிப்பிட்ட அறிஞர்கள் பெரிதாக அறிமுகப்படுத்தப் படுவதில்லை. பழைய தடத்திலேயே எமது தமிழ்க் கல்வி செல்வதாக நான் நினைக்கின்றேன்.

### ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர்களின் அறிவு நதியில் துளிர்த்த செடிகள் நாம்

❑ *கேள்வி:* ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர், அவர்களோடு ஊடாடிய உங்கள் அனுபவம் மற்றும் தமிழ்ப் புலமைத் துறையின் இன்றைய நிலை பற்றிச் சொல்வீர்களா?

❍ *பதில்:* ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர்களான பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, சதாசிவம், வேலுப்பிள்ளை, தனஞ்செயராசசிங்கம், தில்லைநாதன், சண்முகதாஸ் இவர்களிடம் தமிழ் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இவர்களிற் பலர் தத்தம் துறையில் துறைபோகியவர்கள். தமிழ்ப் புலமை மரபில் வந்தவர்கள் சுன்னாகம் குமாரசாமிப் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், வித்துவான் கணேசையர், சுவாமி விபுலாநந்தர் ஆகியோரின் மாணவர்கள் இவ்வகையில் தமிழ்ப் பாரம்பரியக்கல்விப் புலமை இவர்களூடாக எங்களை நோக்கிப் பாய்ந்தது அந்த அறிவு நதியில் துளிர்த்த செடிகள்

பேராசிரியர் செல்வநாயகம் தொல்காப்பியத்தை சோமசுந்தரப் பாரதியாரிடம் கற்றிருந்தார். அந்தக் குறிப்புகளூடான தொல்காப்பிய நூலைக்கட்டியிருந்த துண்டை அவிழ்த்து மெதுவாக விரித்துத்தன் கம்பீரத்தொனியில் செல்வநாயகம் வகுப்பு ஆரம்பித்தது இப்போதும் என் கண்முன் நிற்கிறது. நாம் கொடுத்துவைத்தவர்கள்; நிறைவான அறிஞர்களிடம் படித்தோம். தமிழ்ப்புலமையின் நிறைவை இன்று ஓரிருவரிடம்தான் காணக்கிடைக்கிறது. நிறைவான புலமை உடையோர் இப்போது அரிதாகிவிட்டார்கள்.

❑ *கேள்வி:* நீங்கள் இலக்கியப் படைப்பாளியாகவும் அரங்கப் படைப்பாளியாகவும் இருக்கிறீர்கள். இதில் எதில் திருப்தி கொள்கிறீர்கள்?

❍ *பதில்:* என் இலக்கியப்படைப்புக்கும் அரங்கப்படைப்புக்கும் மேற்சொன்ன பாரம்பரியத் தழிழ்க்கல்வி பெரிதும் பலமான பின்னணியாக இருக்கிறது. இரண்டும் எனது இரண்டு கண்களைப் போல எந்தக் கண்ணை நான் திறமெனக் கூறுவது? இலக்கியப்படைப்பு ஒருவித அனுபவமெனில், நாடகப் படைப்பு இன்னோர் அனுபவம். இலக்கியப்படைப்பு தனிமனித மகிழ்வு. நாடகப் படைப்பு கூட்டு முயற்சியால் வரும் மகிழ்வு. இலக்கியப் படைப்புக்குப் பெருமுயற்சி தேவையில்லை. நாடகப் படைப்புக்குப் பெரும் ஏற்பாடும் முயற்சியும், உழைப்பும் தேவை.

### வாழ்ந்ததன் பயனை அனுபவிக்கும் கணங்கள்

❑ *கேள்வி:* ஆசிரியனாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளனாகவும் பல காலம் கடமையாற்றியதனூடு எதைச் சாதித்தீர்கள்?

❍ *பதில்:* ஒன்றையும் சாதிக்கவில்லை. ஆனால், அன்பும் பண்பும் பாசமும் மிகுந்த ஆயிரக்கணக்கான மாணவர்களைத் தேடிக் கொண்டேன். பாடசாலையில் 17 வருடங்கள் பலாலி ஆசிரிய கல்லூரியில் 3 வருடங்கள், பல்கலைக்கழகத்தில் 20 வருடங்கள், பிரத்தியேக நிறுவனத்தில் வெளிவாரி மாணவர்களுக்காக 5 வருடங்கள்.

ஓ! எத்தனை ஆயிரம் மாணவர்களுடன் நான்பேசி இருக்கிறேன். இந்த மகா சமுத்திரத்தை எனக்கு அறிமுகம் செய்த காலத்துக்கு நான் நன்றி கூறவேண்டும். 10 வயதிலிருந்து 40 வயது வரையான மாணவர்கள்.

இவர்களிற் பலர் தம் பழைய நாள்களை நினைத்துக் கடிதம் எழுதும்போதும் வந்து சந்திக்கும்போதும், கண்ணீர் மல்கக் கட்டி அரவணைக்கும்போதும், தமது பிள்ளைகளைக் கூட்டிவந்து என்னைக் காட்டும்போதும் நான் மிகமிக நெகிழ்ந்து விடுகிறேன். வாழ்ந்ததன் பயனை அனுபவிக்கும் கணங்கள் அவை. இத்தகைய அன்பான மாணவர்களைத் தேடிக்கொண்டமையைச் சாதனை என்பீர்களானால் அதுவே படிப்பித்தலின் சாதனை.

## இலக்கிய, அரங்கப் படைப்புகள் இரண்டுக்குமே பாரம்பரிய தமிழ்க் கல்வி பலம்வாய்ந்த பின்னணி

(வளரும்)


## தபால் மூலக் கல்வி
## Electronics & Cellular Courses

தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் இலத்திரனியல் மற்றும் செலுலார் பயிற்சி நெறிகளை நேரடியாகக் கற்க விரும்புபவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள கட்டணங்களை தபாற்கந்தோரில் காசுக்கட்டளை மூலம் அனுப்பலாம். அல்லது கற்கை நெறி பற்றிய முழு விபரங்களை அறிந்து கொள்ள மேலதிக ரூ5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து எமது முகவரிக்கு அனுப்பலாம். கற்கை முடிவில் பயிற்சி மற்றும் பரீட்சை மூலம் சான்றிதழைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவரும் இணைந்து கொள்ளலாம். யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் சுற்றுப்புறத்தில் இருக்கும் அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம். மொழி - தமிழ்.

**Dip in Electronics (6m, fee - 1000 + 1000/=)**

Full Basic Electronics, Basic Engineering Science, Handling of Digital Meters, Transistor & IC Circut Designing, Making lot of interesting usefull circuits, Wireless Remote Controling & Transmitting(full), Radio Technology(full), TV Technology(full), Computer Monitors & UPS, VCD,DVD....




**Dip in Cellular Technology (3m, fee - 800/=)**

(1)Cellular Battery Check up,Charging & Maintenance. (2) Important GSM Phone's & SIM's Security setup & Codes. (3) Analog & Digital, AF & RF waves, Cellular Networks (Basic) (4)lot of Cellular maintenance tips for users & Technicians (5) User Interface Softwares (Ring Tones,Pictures, Phone Book,SMS) (6)Professional Cellular service Softwares (Unocking Softwares........) (7)Type of Cellular Service Cables, G.S.M Service Codes, International GSM codes, Circuits & Service Diagrams, Professional Cellular tools (8) Introduction of computer hardwares. (9) Mobile Phone Repairing. (Professional Cellphone service software CD is Free)



செலுலார் மாணவர்களுக்கு பழுதுபார்க்கும் மென்பொருள் தொகுதி இலவசமாக வழங்கப்படும்.

நீங்கள் நிரப்பும் மணிஓடர் பத்திரத்தில் :- பணம் கொடுபடவேண்டிய இடம் - Wellawatta Post Office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute. Post office ல் பெற்ற பற்றுச் சீட்டையும், தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் பதிவுத் தபாலில் உடன் அனுப்பவும்.

இவ் இரு பாடத்திட்டங்களுக்கும் வீடியோ செய்யப்பட்ட VCD க்களும் அனுப்பப்படும். இதன் மூலம் மாணவர்கள் நேரடியாக வகுப்பில் பயிற்சியில் ஈடுபடுவதைப் போன்ற அனுபவத்தைப் பெறமுடியும். இதில் இலத்திரனியல் அடிப்படை உபகரணங்கள், கருவிகள், சேக்கிற் தயாரித்தல், பரிசோதனைகள், செலுலார் மென்பொருள் கணனிப் பகுதிகள், பழுதுபார்த்தல் என்பனவும் அடங்கும்.

செலுலார் திருத்துபவர்களுக்கு இலத்திரனியல் அவசியமானது. எனவே இரு பாடங்களையும் தெரிவு செய்பவர்கள் ரூ1800(1000+800) அல்லது ரூ2800(2000+800) காசுக்கட்டளையை அனுப்பலாம்.

இந்நெறிகளை தேவையுடைய ஆண்கள், பெண்கள் வயது வேறுபாடின்றி கற்க முடியும். (பாடசாலை மாணவர்கள், எந்திரவியல் மாணவர்கள், தொழில் பார்ப்பவர்கள், திருத்துனர்கள், ஆசிரியர்கள்........

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd floor, Galle Road, Wellawatta.TP: 2361362

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சைப்பிரஸ் பாம்ஸ், செவ்வரத்தை, யம்பு நாவல், றெசினா ஆகிய பூங்கன்றுகளும் 4 இஞ்சி கொங்கிறிற் கல், பூச்சாடி என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்புகள்: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (43493)

புதிய ஓட்டோ ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.வேலாயுதபிள்ளை C/o நலந்தன் அச்சகம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.(43457)

202 xxxx தொடர் இலக்கமுடைய ஓட்டோ, 1000 லீற்றர் தண்ணீர்த் தாங்கி, சிசில் குளிர்சாதனப்பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr.வேலன் அம்மன், சிவராஜா அவெனியூ, தபால்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (43487)

JN தொடக்க இலக்கமாக உடைய ஓட்டோக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கண்ணன், சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி. T.P.: 0777 111084.(43522)

Fully Automatic Toshiba Washing Machine, Gas Cooker with Oven விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 833, Hospital Road, Jaffna. (7th Day Advential Church இற்கு முன்பாக) T.P.: 077 - 6511657 (43516)

10 Hourse Power English 3 Phase Mill (மில்) மோட்டார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரகுநாதன், பழைய வீடு, இருபாலைச் சந்தி, கோப்பாய். (43553)

நல்ல நிலையில் உள்ள HExxxx தொடரிலக்கமுடைய Honda CD 125 (Benly) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 70, நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T.P.: 0776079352. (43504)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) தொடர்பு:19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(43402)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 160/-. சுத்தம் செய்யப்பட்டது. 250/- வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ் பாம், ஆனைக்கோட்டைச்சந்தி, விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. (மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும். (43550)

## கோழிக்குஞ்சு விற்பனை

மூன்று நாள் வளர்ச்சியடைந்த Prima புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 38/- தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி, றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், மதுரா கால்நடைத் தீவன விற்பனை நிலையம். 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ராதா, மாவடி வட்டுக்கோட்டை. T.P. No.: 222 2867, 222 3529. (43514)

## வீடு விற்பனைக்கு

பழைய பொலீஸ் நிலைய வீதி, சாவகச்சேரியில் 9 அறைகள் கொண்ட பெரியவீடு 4½ பரப்புக் காணியில் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சே.கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். T.P.: 222 7802. (43471)

ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் (பிடாரி கோயிலடி உபதபால் கந்தோர் ஒழுங்கை) மூன்று பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு T.P.: 077 6031764. சந்திக்கும் நேரம்: கிழமை நாள்களில் மாலை 5 மணிக்குப் பின், சனி, ஞாயிறு. (43519)

பலாலி வீதியில் 1¾ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 149396, 0776146307 (43536)

கோண்டாவில் டிப்போவிற்கு முன்பாக 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு த.தங்கவேல் 15/15A, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (43538)

## கார் விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள 13 ஸ்ரீ xxxx தொடரிலக்கமுடைய Nissan Sunny Hb 310 கார் (Gold Colour) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 375, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P. 077 6559896, 0777 064467 (43515)

## வாடகைக்கு

பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியில் இரு பெண்கள் தங்கக்கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. ரெலிக்கொம் தொலைபேசி வசதியும் உண்டு. தொடர்புகளுக்கு: 0777 489409, 021 - 222 7879 (43460)

கோயில் வீதி, I.C.R.C சந்தியடியில் கடை உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: பாலா, இல.18, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் T.P.: 222 6875 (43477)

## கடை வாடகைக்கு

இருபாலைச் சந்தியில் புதிய மேல் மாடிக் ...த்தில் கடைகள் வாடகைக்கு விடப்... தொடர்பு: S.ரகுநாதன், பழைய வீடு, ...லைச் சந்தி கோப்பாய். (43554)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1979ஆம் ஆண்டு, திருவோணம் 4இல் செவ்வாய், கிரகபாவம் 45, U.K.B.Sc. (Hon.) Degree, மேலும் படித்த U.K.இல் தொழில் புரியும் P.R. உள்ள அழகிய பெண்ணுக்கு எக்கவுண்டன், டாக்டர், என்ஜினியா மணமகன் தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43271)

கௌரவ குடும்பம், 1973ஆம் ஆண்டு, உத்தரட்டாதி 2ஆம் பாதம், B.A. பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. (அரச உத்தியோகம் or ஆசிரியர் விரும்பத்தக்கது) தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43483)

கௌரவ குடும்பம், 1970ஆம் ஆண்டு, உத்தரம 4ஆம் பாதம், (23) பாவம் உள்ள ஜேர்மனியில் மிக அழகான B.Sc. பட்டதாரி மணமகளுக்கு இந்து or கிறிஸ்தவம், படித்த அரச உத்தியோகம உள்ள மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவராய் இருந்தாலும் பரவாயில்லை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43483)

கௌரவ குடும்பம், 1963ஆம் ஆண்டு, பூரம் 2ஆம் பாதம், U.K. P.R உள்ள படித்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43482)

கௌரவ குடும்பம், 1975ஆம் ஆண்டு, 12இல செவ்வாய், உத்தரம் முதலாம் பாதம் (25) பாவக்கிரகம் உள்ள மணமகளுக்கு கனடா, லண்டன் மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43479)

கௌரவ குடும்பம், 1969ஆம் ஆண்டு, சுவாதி பாவக்கிரகம் (39) உள்ள படித்த மணமகளுக்கு உள்ளூர் சிறு அரச உத்தியோகம் அல்லது சொந்தத் தொழில் செய்பவராக இருக்கும் மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43480)

யாழ்.கௌரவமான கிறிஸ்தவ Newzeeland Citizen வயது 32 மணமகளுக்கும் 26 வயதில் இருந்து 45 வயது வரையிலான பல தரப்பட்ட கிறிஸ்தவ கத்தோலிக்க மணமகள்மாருக்கு மணமகன்மார் தேவை. Multy Top Mediaters, 8B, First Floor, Vajira Road, Bambalapitiya, Colombo. 0777 422692. (சி-41842)

கௌரவ குடும்பம், 1979ஆம் ஆண்டு, அச்சுவினி முதலாம் பாதம் உள்ள B.Sc. எஞ்சினியர் ஆகப் பணிபுரியும் 5 அடி 3அங்குலம் உயரமுள்ள மிகவும் அழகான மணமகளுக்கு பொறியியலாளர் or கணக்காளராக இருக்கின்ற அழகான மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி.(43481)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1975ஆம் ஆண்டு, அவிட்ட நட்சத்திரம், கும்பராசி, செவ்வாய் தோஷமற்ற லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு அழகிய கல்வியறிவுள்ள 24 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: மாலை 5 இற்கு பின் (0777 041313) T.P. 021 222 - 6902. (43498)

யாழ்.இந்து கௌரவ குடும்ப மணமகன்மார் வயதுகள் 28 B.Sc Engineer Canada, 32 Msc. Engineer Colombo, 31 Charted Accountant Colombo Vegetarians, 33 Msc London, 34 Msc Australia உட்பட இன்னும் பலதரப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன்களுக்கு மணமகள்மார் தேவை.Multy Top Mediaters, 8B, First Floor, Vajira Road, Bambalapitiya, Colombo. 0777 422692. (41840)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

-சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A.C உடன் கல்சியம். இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:
**BIO TEC INTERNATIONAL**
இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.T.P.: 021-4590907.

### கட்டடம் வாடகைக்கு உண்டு

மனோகராச் சந்திக்கு அருகில் பதினெட்டு அறைகள் கொண்ட, நான்கு குளியல் அறைகள் உடைய, நான்கு மண்டபங்கள் உடைய, சிறிய ரக வாகனங்கள் நிறுத்தக் கூடிய வசதியுடைய கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப் படும்.
021 222 7085, 0777 162428
(43534) (17-15-21)

### உடன் தேவை

பதிவுசெய்யப்படாத அல்லது பாவிக்கப் படாத LML ஸ்கூட்டர் உடன் தேவை. பயன்பாட்டில் இல்லாத LML ஸ்கூட்டர் வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
**விளம்பர இல. 2540**
**மே/பா உதயன்,**
**யாழ்ப்பாணம்.**
(சி-41841) (21-15-17)

### தென்மராட்சியில்!

கணபதி நெட் கொம்
நேரடி இன்ரநெட் வசதியுடன் பரீட்சை பெறுபேறுகள், ஈமெயில் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்கள் குறைந்த கட்டணத்தில்!
புத்தாண்டுவரை உள்வரும் அழைப்புகளுக்கு நிமிடத்துக்கு ரூ 2/-
இதனைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
☎ 021- 4591979, 021- 4591981
கணபதி நெட்கொம், கண்டிவீதி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி.
E.Mail Kanapathy @ Wow L.k. (43543) (39-21-17-15)

### மோட்டார் சைக்கிள் காணாமற் போய்விட்டது

கல்வியங்காடு, கலைமகள்வீதியைச் சேர்ந்த கா.வேதாரணியம் என்பவருடைய
**YAMAHA MATE- 90**
சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் 21.03.2005 திங்கட்கிழமையன்று யாழ். கன்னாதிட்டிச் சந்தியில் காணாமற் போய்விட்டது.
இயந்திர இலக்கம் V 90 T 326976 இல. NPGL 8985
இதுபற்றிய தகவல் தெரிந்தவர்கள் 0776620531 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: கா.வேதாரணியம், கலைமகள் வீதி, கல்வியங்காடு.
T.P: 0776620531
(43539) (39-21-17-15)

### ஓராண்டு நினைவுதின அழைப்பு



வேலுப்பிள்ளை இராஜரட்ணம் (செல்வம்)

தோற்றம் - 24.04.1953
மறைவு - 08.04.2004

கடந்த 08.04.2004 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இராஜரட்ணம் (செல்வம்) அவர்களின் ஓராண்டு நினைவையொட்டி நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (28.03.2005) திங்கட் கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் தனிப்பட்ட அழைப்பாய் ஏற்று அழைக்கின்றோம். (C/41821)(51-14-15)

இல.19, B.A தம்பி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
☎ 222 5749, 222 7016, 0777 71569
மனைவி, பிள்ளைகள்.

### AITKEN SPENCE OVERSEAS TRAVEL SERVICES (PVT) LTD

COMPETITIVE AIR FARE

BEST OFFER IN JAFFNA FOR YOUR AIR TICKETS & HOTEL PACKAGES

WE HANDLE ALL YOUR TRAVEL FORMALITIES WITH A PERSONALIZED SERVICE

- TICKETING AND RESERVATIONS - INTERNATIONAL AND DOMESTIC
- VISA FORMALITIES
- TRAVELERS INSURANCE
- ISSUE OF RAIL TICKETS FOR TRAVEL WITHIN EUROPE
- AIRPORT TRANSPORT
- HANDLING TRAVELERS CHEQUES
- PACKAGE TOURS ABROAD AND IN SRI LANKA
- BRANCH OFFICE IN JAFFNA ALSO SPECIALIZE IN TOURS WITHIN NORTH

CONTACT:
AITKEN SPENCE OVERSEAS TRAVEL SERVICES (PVT) LTD
56/15, STANLEY ROAD, JAFFNA.
TEL: 021 - 2223771
MOBILE: 0777 - 915824
E.MAIL: aitkenspenceif@sltnet.lk



HEAD OFFICE:
GROUND FLOOR, 305, VAUXHALL TOWERS,
VAUXHALL STREET, COLOMBO 02,
TEL: 2308308, 471771, 4719832, 2300913
HOTLINE: 4719831 TELE/FAX: 2430893
E- MAIL: outbound@aitkenspen.lk/ ots.marketing@aitkenspence.lk



# றோட்டறியின் தொழில்வல்லுநர் விருதுக்கு தாதியும், 'மிக்ஷர்' தயாரிப்பாளரும் தெரிவு


கலைச்செல்வி சுரேந்திரராஜ்

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் வருடாந்தம் வழங்கும் தொழில் வல்லுநர் விருதுக்கு இந்தமுறை இரு தொழிற்றுறையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுக்கான விருதுகள் எதிர்வரும் 31ஆம் திகதி 'உதயன்' அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் வைத்து வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண றோட்டறிக் கழகம் வருடந்தோறும் V.R.A. (Vocation Recogni tion Award) வழங்கி வருகிறது. சமூகத்தில் சேவையாற்றுபவர்களை ஊக்குவிக்கும் வகையில் வேலைக்கேற்ற கணிப்பை மேற்கொண்டு இருவரைத் தெரிவுசெய்து தொழில்திறன் விருது வழங்கப்படும்.

ஒருவர் அரச சேவையிலும், மற்றையவர் தனியார் துறையிலும் தெரிவுசெய்யப்படுவது மரபு. அதனடிப்படையில் இவ்வருடம் நடத்தப்பட்ட கணிப்பீட்டில் முதன்மை பெற்றவர் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

அரச சேவையில் 'தாதியர்' துறை இம்முறை தெரிவுசெய்யப்பட்டு சிறந்த சேவைக்கான விருதை திருமதி கலைச்செல்வி சுரேந்திரராஜ் அவர்களுக்கும் சிறு கைத்தொழில்த் துறையில் சிறந்த முயற்சிக்கான விருதை 'அல்பா மிக்சர்' உரிமையாளர் ப.பாலமுருகனுக்கும் யாழ்.றோட்டறிக் கழகம் வழங்குகின்றது.

திருமதி கலைச்செல்வி சுரேந்திரராஜ் புங்கன்குளத்தைச் சேர்ந்தவர். ஆரம்பக் கல்வியை கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் பின் அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை இடைக்காடு மகா வித்தியாலயத்திலும் பயின்றவர். பேச்சுப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி போன்றவற்றில் முதற் பரிசு பெற்றவர். ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சபையின் தமிழ் மொழிப் போட்டியிலும் பரிசுபெற்றவர்.




ஆரம்ப சுகாதார நிலையத்தின் தொண்டராகவும், கூட்டுறவு மகளிர் குழு உறுப்பினராகவும் சேவையாற்றியவர். பின் 1989 ஆம் ஆண்டு தாதிய பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்டு, பயிற்சிகளைச் சிறந்த முறையில் பெற்றார். பின் 1993 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நியமிக்கப்பட்டு சிகிச்சைக்களம் 17.03.02 போன்றவற்றில் சேவையாற்றினார். தற்போது மருத்துவப் பகுதிக்கான சிகிச்சைக்களம் 4 இல் சிறந்த சேவையாற்றி வருகின்றார். இவருடைய சேவையால் பலர் நன்மையடைந்துள்ளார்கள். இவருடைய துறைசார் சிறந்த சேவையைக் கணிப்பிட்டு இவ்வருடம் தொழில்திறன் விருதை இவருக்கு வழங்கி யாழ்.றோட்டறிக் கழகம் பெருமையடைகின்றது.

ப.பாலமுருகன் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்து, வறுமையின் எல்லைவரை வாழ்ந்தவர். பண்டத்தரிப்பு ஐயனார் வித்தியாலயத்தில் தரம்-6 மட்டுமே கற்கமுடிந்தது.

இவரது மனைவி இதய நோயாளி. முதற் குழந்தை பிறந்து இறந்தது. பணக் கஷ்டத்துடன், நோயும் இவர் குடும்பத்தை வாட்டியது.

ஆரம்பத்தில் 'ரயர்' ஒட்டும் கடையை ஆரம்பித்து, காலத்தின் கோலத்தால் தோல்வி கண்டார். பின் 1998ஆம் ஆண்டு கச்சேரியடியில் 'மிக்சர் கடை' ஒன்றை ஆரம்பித்தார். மிகவும் சிறிய அளவில் குடிசைக் கைத்தொழிலாக ஆரம்பிக்கப்பட்டது. பின் அயராத முயற்சியால் படிப்படியாக திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி, சங்கானை ஆகிய பகுதிகளில் கிளைகளை ஆரம்பித்தார். பின் மானிப்பாயில் தலைமை நிலையம் ஒன்றை நிறுவி, இயந்திரமயமாக்கப்பட்ட மிகப் பெரிய தொழிலகம் ஒன்றை நடத்திவருகின்றார்.


ப.பாலமுருகன்

தான் வாழ்வதற்கே கஷ்டப்பட்ட ஒருவர் இன்று பல மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து வாழ்விக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளார். இது அவரது தனிமனித முயற்சி அவருக்கு யாழ். றோட்டறிக் கழகம் தொழிற்றிறன் விருது வழங்கிக் கௌரவிக்கின்றது.

இந்த இரு தொழில்திறன் விருதுகளும் எதிர்வரும் 31ஆம் திகதி உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.

**லோ.துஷிகரன்**
**(பத்திராதிபர், யாழ்.றோட்டறிக்கழகம்)**


இயற்கை அனர்த்தத்தின் போது தமது வாழ்விடங்களை விட்டுப் புலம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினரால் உலர் உணவு வழங்கப்பட்டது. சிறுவன் ஒருவன் உலர் உணவைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (3-190)

# பாடசாலைகள் தோறும் பொன் அரும்புகள் மன்றம் அமைப்பு

## சேமிப்பை ஊக்குவிக்க இலங்கை வங்கி நடவடிக்கை


மாணவருக்கும் பரிசில்கள் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச்27

மாணவர்களிடையே சேமிப்பை வளர்க்கும் நோக்குடன் இலங்கை வங்கி, 'பொன் அரும்புகள் மன்றம்' என்னும் சேமிப்புப் பிரிவை பாடசாலைகள் தோறும் ஆரம்பித்துள்ளது.

இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளையினால் இந்த மன்றங்கள் யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், புனித பத்திரிசியார் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளில் 11 மாணவர்கள் வங்கியின் உத்தியோகத்தர்களாக செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றனர். பாடசாலை அதிபர் வங்கியின் சேமிப்புப் பிரிவு சிரேஷ்ட ஆலோசகராக இருக்கிறார்.

அதிகூடிய சேமிப்பைப் பேணும் மாணவருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதோடு, சேமிப்புக்கணக்கை ஆரம்பிக்கும் மாணவருக்கும் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

இது மட்டுமன்றி பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு, அவரது மேற்படிப்புக்கு விசேட பரிசில்களையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு தொழில் முயற்சிக்கான பயிற்சிகளும் உதவிகளும் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-204)

# 35 வருட வாடிக்கையாளரை கௌரவித்தது மக்கள் வங்கி

சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் 35 வருடங்களாக வாடிக்கையாளராக இருந்து வரும் வீ.இராசதுரையை மக்கள் வங்கி அண்மையில் கௌரவித்தது.

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பிரதம காசாளராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்றவர் வீ.இராசதுரை. இவர் தனது கூட்டுறவு நிறுவனம் சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் சுன்னாகம் மக்கள் வங்கியில் 35 வருடங்கள் வாடிக்கையாளராக இருந்துவருகிறார். ஓய்வுபெற்ற இராசதுரை வங்கியோடு கொண்டிருந்த நல்லுறவைப் பாராட்டும் வகையில் மக்கள் வங்கி அவரைக் கௌரவித்தது.

வங்கி அலுவலர் வீ.சிவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ஏ.ஈ.ஆனந்தராஜா இத்தகைய வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதற்காக வங்கி பெருமைப்படுகிறது. வங்கியில வாடிக்கையாளர்கள் சொத்துக்கள், பிணைகள், வைப்புகளை வைப்பதைக் காட்டிலும் நல்லுறவைக் கொண்டிருப்பதே மேலானதாகக் கருதப்படுகிறது. வங்கி ஒவ்வொரு வாடிக்கையாளரது குடும்ப உறவின் அங்கமாகத் திகழ வேண்டும். அப்போது தான் வங்கிக்கும் வாடிக்கையாளனுக்குமிடையிலான நம்பிக்கை, பிணைப்பு அதிகமாகும் - என்றார். இத்தகைய ஒரு வாடிக்கையாளரைக் கௌரவிப்பதில் தாம பெருமையடைவதாக வங்கி முகாமையாளர் மா.சந்திரகாந்தன் தமதுரையில் கூறினார்.

இந்நிகழ்வில் வாடிக்கையாளர் இராசதுரைக்கு வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ஏ.ஈ.ஆனந்தராஜா பரிசுப்பொதி வழங்கிக் கௌரவித்தார். (3-150)

# கணனித் தயாரிப்பில் முன்னோடி 'மேர்கரி'

ஓசைபடாமல் நுழைந்து கொண்டிருக்கும் புதிய தொழில்நுட்ப மாறுதலுக்கு ஏற்ப கணனித் தொழில்நுட்பமும் மாறிக்கொண்டிருக்கின்றது. அதற்கேற்ப புதிய தொழில்நுட்பங்களுடன் கணனிகளை அறிமுகப்படுத்துவதில் கணனித் தயாரிப்பில் முன்யோடியாகவுள்ள நிறுவனங்களுக்கிடையே பெரும் போட்டி நிலவுகின்றது.

கணனியின் மிக முக்கியமான பகுதியில் ஒனறு **Motherboard** இது எல்லா வகையான பகுதிகளையும் தொடுப்பதற்குப் பயன்படுத்தப்படுவதோடு தனது தொழிற்பாடான தகவல் பரிமாற்றம், கணனியைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறன **Motherboard** களை பல புதிய தொழில்நுட்பங்களுடன் உருவாக்கி வழங்குவதில் இன்று தகவல் தொழில்நுட்பத்துறையில் முன்னிலையில் **Mercury** நிறுவனம் திகழ்கின்றது.

**Mercury Company** தற்போது வாடிக்கையாளர்களுக்காக **PI 865GRM-L, PI 865 GM-L, PI 845 GLM-AGP** போன்ற புதிய **Motherboard** களை 3 வருட உத்தரவாதத்துடனும சிறப்பான விலைக்கழிவுகளுடனும் அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வாறு அறிமுகமாகியுள்ள **Mercury Motherboard Intel-P4, Celeronocess or Support** உடையவை. மேலும் **Prescott** மற்றும் **Hyper threading** தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவை **AMD - Duron.Athlon, Sempron Processor** தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்த Motherboard கள் 400/533/800 MHz FSB, 333/400Mhz DDr Support, 32/64MB onboard VGA, 2MB Flash Bios உடையவை. அத்துடன் இவற்றின் விசேட சிறப்பம்சமாக Intel/VIA/SIS Chipsets, 6 Channel Audio மற்றும் SATA/CNR/USB Connectors காணப்படுகிறது.

இவ்வாறான சிறப்பம்சங்களுடன் கூடிய **Motherboard** களை அறிமுகமாக்கியுள்ள **Mercury** நிறுவனமானது, இலங்கை முழுவதிலும் பரந்த 256 முகவர் சந்தை நிலையங்களில் பராமரிப்பும், விற்பனை சேவையையும் கிட்டத்தட்ட 10 வருடங்களாக வழங்கிக் கொண்டிருக்கின்றது. Mercury Motherboard ஆனது இன்று ஆசிய, பசுபிக்கில் 70% சந்தை வீதாசாரத்தைக் கொண்டுள்ளது. அது மட்டுமன்றி இந்தியாவில் விற்பனையாகும் **Motherboard** வகைகளில் முதலாவதாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறான தொழில்நுட்பத்துடன் அறிமுகமாகியுள்ள **Motherboard** களை உத்தரவாதததுடன விற்பனையின் பிந்திய சேவையை வழங்குவதில் இலங்கையில் நாடளாவிய ரீதியில் **MICRO PC SYSTEMS** இன் கிளைகள் அனைத்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.(3)


செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் யாழ்.ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி அவசர மருந்துப் பொருள்களை நேற்றுமுன்தினம் கையளித்தது.
அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர்.ரங்கநாதன் மருந்துப் பொருள்களை நிர்வாக அதிகாரி எஸ்.மகேந்திரதாசனிடம் கையளிக்கும்போது எடுக்கப்பட்ட படம்.
(படம்:கவிதரன்)

## பிரிவுபசாரவிழா

தென்மராட்சி,மார்ச்27

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமை யாற்றி இளைப்பாறியும் இடமாற்றம் பெற்றும் சென்ற உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசாரவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது. வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இளைப்பாறிச்சென்ற முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) கே.ஆர்.டேவிட், முன்னாள் முதன்மை ஆசிரியர் (சங்கீதம்) திருமதி பொ.பொன்னம்பலநாதன் மற்றும் இடமாற்றலாகிச- சென்ற தமிழ் தட்டெழுத்தாளர் செல்வி கோ.சிவ ஞானவல்லி ஆகியோருக்குப் பிரிவுபசாரம் வழங்கப்படவுள்ளது. கல்வி வலய நலன்புரிச் சங்கத்தினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். (எ-117)

## நூல்வெளியீட்டு விழா

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய 'சிவஜோதி' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்துகொள்வார். (எ-15)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
(C/36310)



ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

## 61ஆம் நாள் நினைவலைகள்







**பாஸ்கரன் தனுஜா**
ஜெனனம்: 13-11-1990

**தங்கராசா பாஸ்கரன்**
ஜெனனம்: 01-02-1967

**புஸ்பராசா ஜீவனா**
ஜெனனம்: 29-08-1991

**மரணம்: 26-01-2005**

செம்பியன் ஊரில் புத்துயிர் பெற்ற புத்திஜீவிகளே!
புன்னகை தவள புன்சிரிப்புடன் சென்றீர்களே!
நீங்கள் திரும்பிய கோலம் எவ்விதத்தில் பார்ப்போம்?
எம் அக்காவுக்கு வாழ்வழித்த அத்தானே!
எம் கையால் தூக்கி வளர்த்த எம் செல்லக்குட்டி தனுஜாவே!
நீ தனியாகப் படுத்துறங்கியதை நாம் அறியவில்லையம்மா!

பலகதை கூறி பகிடிவகை போட்டு எமது தூக்கம் குழப்ப
மூவரும் திட்டம் போட்டு வந்தீர்களா - உங்களைப்
படைத்த பிரமா ஒருவரையும் கூட மன்னிக்க மறுத்து விட்டானே ஏன்?
இன்று அறுபத்தியொருநாள்....
எம் அனைவரையும் விட்டுச்சென்ற மூன்று நெஞ்சங்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (27-03-2005) ஞாயிற்றுக்கிழமை அன்னார்களது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செம்பியன்பற்று தெற்கு,
நெல்லியான்.

(43518)(46)

V.உதயகுமார் (பாபு),
ரஜனி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்ணில் வந்தது
15 - 05 - 1937



விண்ணில் மறைந்தது
25 - 02 - 2005

**அமரர் கந்தர் சொக்கலிங்கம்**

மனிதருள் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதராய் வாழ்ந்த உங்களை மறக்கமுடியுமா?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் 27-03-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் இந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

(43495)(46-14)

-குடும்பத்தினர்.

வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

**Foundation Degree Programme**

UK, Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்குக் வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

பாடப்பரப்பு
தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கைநெறி

பாடநெறிக்காலம்
திங்கள் முதல் வெள்ளி வரையிலான மூன்று மாதங்களைக் கொண்ட முழு நேரப்பாடநெறி

வெளிநாட்டில் உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக்கொள்வதற்கு பூரண வழிகாட்டுதல்கள் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

எமது சர்வதேச இணைப்புகளும் அங்கீகாரங்களும்:
THE UNIVERSITY OF BUCKINGHAM · Cornwall College · St James's Park College

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

### வினாடிவினாப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 6 - தரம் 11 வரை கற்கும் மாணவர்களிடையே கணித, விஞ்ஞானபாட வினாடிவினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகளை மே 15ஆம் திகதிக்கு முன்னர் தனித்தனியாக நடத்தி வகுப்பு ரீதியாக முதலிடம்பெற்ற மாணவர்களின் பெயர்களை அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார்.

வலயமட்டப்போட்டிகளை ஜூலை மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (எ-17)

**எங்கள் அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு**
**ஒரு நற்செய்தி**

எங்கள் தலைமைக் காரியாலயம் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் மூடவேண்டி ஏற்பட்டுவிட்டது. அதன் நிமித்தம் அங்கிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை (ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட புத்தகங்கள்) பாவனையாளர்களின் நன்மைகருதி கடந்த 01.04.2004 தொடக்கம் இன்றுவரை எம்மிடம் பொருள்கள் கொள்வனவு செய்த சிட்டை (Bill) வைத்திருப்பவர்களுக்கு 250.00 ரூபாவுக்குக் குறையாத புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். நேரில் வரவும்.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்றில் இருந்து மேலும் ஒருவாரத்துக்கு (03-04-2005வரை) நீடிக்கப்பட்டுள்ளது.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
எண். 212-214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி
A.C.D.

T.P.:5542

(சி-41692) (24-14-15)

# உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழ்

## 'சுனாமி' பாதித்த மக்களுக்குத் தொடர்ந்து அன்புப் பணிபுரிய ஆயர் அழைப்பு



ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய மறைநிகழ்ச்சிகளைச் சிந்திக் கின்ற தவக்காலம் கிறிஸ்தவ மக்கள் அனை வருக்கும் செப தப நோன்பின் காலமாகும். இக் காலம் எமது வாழ்வையும் பணியையும் அலசி ஆராய்ந்து புதிய வாழ்விற்கு அத்திபாரம் இடும் காலமாகும். இக்காலத்தை முடித்து ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பின் மகிழ்வில் நிறைந்திருக் கும் அனைவருக்கும் உயிர்ப்பு விழா வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றோம்.

எல்லாக் காலத்தையும் விட இந்தத் தவக்காலம் பணிசெய்ய எமக்குப் பல அழைப்புக்களைத் தந்த காலமாகும். கடந்த ஆண்டில் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடிய மறுதினம் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய சுனாமிப் பேரழிவும் மனிதாபிமான ரீதியில் அன்புப் பணிபுரிய பல கோணங்களில் எமக்கு அழைப்பு விட்டிருந்தது.

சொந்த பந்தங்களையும் வாழ்நாள் சொத்து முழுவதையும் ஒருசில நொடிப் பொழுதுகளில் கண்மூடித்திறக்கு முன்னர் இழக்கின்ற ஓர் அனுபவம் ஒரு பயங்கரமான அனுபவமாகும். நீண்டகாலப் போரும் அதன் அழிவுகளும் கொணர்ந்த அழிவையும் வேதனையையும் நான்கு நிமிட இயற்கை அனர்த் தம் தந்து எம்மை அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.

இறப்பையும் இழப்பையும் சந்தித்து விரக்தியின் விளிம்பிலிருக்கும் மக்கள் நம் பிக்கையை இழந்துவிடாதிருக்கவும் இனியும் இதன் மத்தியிலும் வாழமுடியும் என்ற உறுதியான உணர்வைப் பெற்றுக்கொள்ளும்படியும் வேண்டி நிற் கின்றோம்.

இந்த நிகழ்வு நடைபெற்ற பின்னர் உதவிப் பணிகளைப் புரியும்படி உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊடகங்கள் மூலமாக அழைப்பு விடுத்திருந்தோம். எமது அழைப்பை ஏற்று உதவிப் பணிகளைசி பணமாகவும் பொருளாகவும் உடனடியாக அனுப்பிவைத்த அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றோம். ஆலயங்களிலிருந்தும் பொது அமைப்புகளில் இருந்தும் இளைஞர்களும் மற்றவர்களும் குழுக்களாக இணைந்து உணவுப்பொருள் களைச் சேகரித்துத் தேவையானவர்களுக்கு வழங்கிப் பெருந்துணை புரிந்தார்கள். குறிப்பான விதமாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற மக்கள் அங்கு பணியாற்றுகின்ற எமது குருக்களூடாகத் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கியிருக்கிறார்கள்.

அனைவருக்கும் தனித்தனியான விதமாக நன்றிகளை அனுப்பமுடியா விட்டாலும் இந்த ஈஸ்ரர் செய்தி வழியாக நன்றியைத் தெரிவிப்பதோடு. உயிர்த்த இயேசு உங்கள் வாழ்வில் என்றும் உங்களுக்கு உறுதுணையாயிருப்பார் என்று கூறிவைக்க விரும்புகின்றோம்.

நிவாரணப் பணிகளை விட உடனிருந்து ஆறுதல்கூறி ஆற்றுப்படுத்தும் பணி இன்று ஓர் அவசர பணியாக இருக்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்துவதும் நம்பிக்கையூட்டுவதும் இன்றைய அவசரத் தேவையாகும். உண்மையில் இப்பணியினைச் செய்வதற்கு எமக்கு ஒரு விசேட கடமையும் தகுதியும் இருக்கிறது. குருக்கள், கன்னியர்கள் தமது பயிற்சிகளோடு அடிப்படை உளவியல் ஆற்றுப்படுத்தும் கலையைக் கற்றிருக்கின்றார்கள். இதனைவிட, குருக்கள், கன்னியர்களிடம் நம்பிக்கை யோடு மனந்திறந்து பேசமுடியும் என்ற ஒரு நம்பிக்கை உணர்வை மக்கள் வைத்திருக்கின்றார்கள். எனவே, உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தும் பணியினைச் செய்வதற்கான ஓர் அழைப்பு எமக்கு விடப்பட்டிருக்கின்றவேளையில் இதனை முன்னுரிமைப்படுத்தி இனி வருங் காலங்களில் இப்பயிற்சிகளை வழங்குவோர் இதில் விசேட கவனம் செலுத்தவும் அநேகரை விசேட பயிற்சிக்காக அனுப்பவும்வேண்டும் என விரும்பி நிற்கின்றோம்.

### ஈஸ்டர் செய்தி

ஏற்கனவே, போரினால் தாக்கப்பட்டுத் துன்பத்தை அனுபவித்த மக்களை நாம் மறந்துவிடக் கூடாது. இன்னும் அகதிகளாக இருப்போர் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாதிருப்போர் - தமது அன்றாடத் தொழில்முயற்சிகளைச் செய்ய முடியாதிருப்போர் - ஆகியோர் அனை வருக்குமான பணிகள் செய்யப்படவும் துரிதப்படுத்தப்படவும் வேண்டும் என வேண்டி நிற்கின்றோம். குறிப்பாக இந்தியாவிலிருந்து நாடு திரும்பிக் கொண்டி ருப்போர் மீளக்குடியமரத் தேவையான உதவியைப் பெறவேண்டிய வர்களாவர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவேறி விட்டன. ஆனால், எந்த முடிவையுமே பெறமுடியாத ஓர் இக்கட்டான நிலையில் தான் தமிழ் மக்களின் வாழ்வு இன்னும் இருக்கிறது. தமிழ்மக்களின் சுதந்திர மான வாழ்வையும் சுபீட்சமான எதிர்காலத்தையும் உறுதிசெய்கின்ற வகையில் நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படச் சம்பந்தப்பட்ட அனைவரும் உண்மையாக உழைக்க வேண்டுமென வேண்டி நிற்கின்றோம். காலம் வீணே கடந்து செல்கின்றவேளையில் அரசியல் தலைவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் அதில் எந்தக் கவனமும் கரிசனையும் எடுக்காதிருப்பது மிகவும் வேதனை தருகின்ற ஒரு விடயமாகும்.

சாவை வென்று வெற்றியின் வேந்தனாக உயிர்த்தெழுந்த இயேசு எமது அன்றாட வாழ்விலும் எமது பொதுவாழ்விலும் நாம் எதிர்நோக்குகின்ற அனைத்துத் துன்ப , துயர அனுபவங்கள். வேதனைமிக்க போராட்ட நிகழ்வுகள் அனைத்திலும் வெற்றிபெற்று ஒரு புதிய வாழ்வுக்காய் - ஒரு விடுதலையின் வாழ்வுக்காய்- உயிர்த்தெழ உயிர்த்த இயேசு அருள்பாலிப்பாராக.

**அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம்**
**ஆயர், யாழ்.மறை மாவட்டம்.**

லைடன் புடைவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2381

மெலித்தா கிறிஸ்தவ சங்கம் தனது ஈஸ்ரர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது
இயேசு கிறிஸ்து உனக்காக மரித்தார்! உனக்காக உயிர்த்தார்!
★ ஆவிக்குரிய புஸ்தகங்கள், ★ ஸ்ரிக்கர்கள், ★ பைபிள், ★ அன்பளிப்புப் பொருள்கள்,
★ D.G.S தினகரன், அன்பான இயேசு, யூதாவின் செங்கோல் அடங்கிய ஒலி நாடாக்கள்
★ Audio, Video, CD என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
இலவச தபால்மூல வினாவிடை (ஆதியாகமம் தொடக்கம் வெளிப்படுத்தல் வரை )
பெற்றுக் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மெலித்தா கிறிஸ்தவ சங்கம் 50, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5542.

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும் ஒரே கூலியில் செய்து தரப்படும்.
வேணு நகைத் தொழிலகம்
372 பீ(B)ச் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
Mobile: 0777 222 091.

லொயலாஸ்
Loyalase
David Alexander
Proprietor
0777-734083
195, Main Street,
4th Cross Street Junction,
Jaffna.
59, Patricks Road, Jaffna. 021-222 2110
021 222 3352

திரேசா தளபாடம்
137, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

ரட்ணா ஸ்ரோர்ஸ் & கொமினிகேஷன்
287, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

நாளுக்கு நாள் மாறும் நவீன டிசைன் நகைகளை உங்களுக்குத் தருவதில் பலவருட கால முன்னோடிகள்! உங்கள் தேவைகளுக்கு!
நிஷாநந்தா ஜுவல்லறி
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: "கலாநிதி" அ.ஆனந்தன்
தொ.பே: 0777 732702, 7985

(43232)(50-14)

உ
கணபதி துணை

யாழ்ப்பாணம் - வேலணை மேற்கு
பெரியபுலம் முடிப்பிள்ளையார் என வழங்கும்
அருள்மிகு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தானம்
புனராவர்த்தனப் பிரதிஷ்டா, நூதன இராஜகோபுர நவகுண்ட மகாயாக
# மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா



**ஐங்கரன் அடியார்களே!**

**மஹா கும்பாபிஷேக கிரியாரம்பம்:** நிகழும் மங்களகரமான தாரண வருஷம் உத்திராணயம் பங்குனி மாதம் 11ஆம் நாள்(24.03.2005) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல்

**யாகாரம்பம்:** பங்குனி மாதம் 14ஆம் நாள்(27.03.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிமுதல்

**தைலாப்பியங்கம்:** (பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்) பங்குனி மாதம் 15ஆம் நாள் (28.03.2005)திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் 29.03.2005 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை.

**மஹா கும்பாபிஷேகம்:**

**பங்குனி மாதம் 17ஆம் நாள் (30.03.2005)புதன்கிழமை காலை 9.13 மணிமுதல் 10.13** மணிவரை வரும் அனுஷ நக்ஷத்திரத்துடன் கூடிய இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

மண்டலாபிஷேக பூர்த்தி: பார்த்திப வருஷம் சித்திரை மாதம் 13ஆம் நாள் (13.05.2005) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் நவோத்தரசாகஸ்ர மஹாசங்காபிஷேகம், மண்டலாபிஷேக பூர்த்தி நண்பகல் 12.00 மணிஅளவில் வருடாந்த மஹோற்சவம் துவஜாரோகணம்(கொடியேற்றம்) நடைபெற்று, தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

"விநாயகர் பாதம் தொழ மாண்புகழ் மிகுந்து வரும்" "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அனைவரும் வருக ஐங்கரன் அருள் பெறுக!

பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்
வேலணை மேற்கு
தொலைபேசி: 021-4590840

ஆலய பரிபாலன சபையினர்.

விளம்பர அனுசரணை:-
## விக்னேஸ்வரா நகைப் பூங்கா

| | | |
|---|---|---|
| 205/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP:. 021 4590022 | 10B,34D, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா TP:. 024 222 1857, 024 222 1910 | 157 காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 TP:. 0112 559535, |

முடிப்பிள்ளையார் நகைப்பூங்கா, 167 யாழ்சாலை,கிளிநொச்சி.

(C41507)(52-11-17)



# சுவையும் நலமும் நிறைந்தது
# மிகவும் சுலபம் பூசுவது

Simas®
# சீமாஸ் மாகரின்




ஆம், புதிய சீமாஸ் மாகரின் பாவிப்பதால்
எல்லாமே சுலபம்

- உயர்தரமான சுவையும் நலமும்.
- மீண்டும் வைத்துப் பாவிக்க பிறிஜ் தேவையில்லை.
- பாணில் பூசுவது மிகச் சுலபம்.
- விலையும் குறைவு.

**சீமாஸ் மாகரின்**
**சுவையும் நலமும் - விலையோ குறைவு**

விற்பனையாளர்
ABMauri
ஏ.பி. மௌரி லங்கா
124, டெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை.

# இந்தியாவின் இந்துசார் தேசியவாதப் பின்னணியில் சுயநிர்ணய உரிமை குறித்து இன அலகுகள் சிந்திக்கவில்லை



மு.திருநாவுக்கரசு

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.

எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.

இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.

அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -

சிறந்த அரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.

இவ்வாரம் அதன் ஐந்தாவது பகுதியை வாசியுங்கள்

## பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்

தொடர் சிறப்புக் கட்டுரை 5

## முஸ்லிம்களும் இஸ்லாமியர் என்ற அடிப்படையிலேயே சிந்தித்தனர் தமக்கிடையே காணப்பட்ட தேசிய இனங்களின் நலன் குறித்தல்ல

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஓர் ஐரோப்பியப் பிரச்சினையாக வெடித்துக் கிளம்பியதே யூத இனப்பிரச்சினை. அவ்வாறு அந்த உலகமகா யுத்தத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய ஐரோப்பிய தீப்பிளம்பானது யூத அரச வடிவில் மேற்காசியாவில் வீழ்ந்து அப்பிராந்தியத்தை அரைநூற்றாண்டிற்கும் மேலாய் தொடர்ந்து எரித்துக்கொண்டே இருக்கின்றது. இவ்வாறு இரணடாம் உலக மகா யுத்தத்தின் பொறி அணையாது ஒரு பிராந்தியத்தையே தொடர்ந்து எரித்துக் கொண்டு இருக்கின்றது என்ற வகையிலும் இரண்டாம் உலகமகா யுத்தம் இன்னும் ஆசியாவில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என்று கூறத் தோன்றுகின்றது. தற்போதைய நிலையில் அரை நூற்றாண்டு கால வரலாற்று வளர்ச்சியின் மூலம் யூத அரசு மேற்காசியாவில் தவிர்க்க முடியாத ஒரு யதார்த்த மாகிவிட்டது. ஆதலால் அக்கம் பக்கமாகச் சுதந்திரப் பலஸ்தீன அரசையும் அமைக்கவேண்டியதுதான் இனிமேற் காரிய சாத்தியமானது.

அடுத்து தேசிய இன வேறுபாடுகள் மிக அதிகமாக உள்ள தென்னாசியாவை நோக்குவோம். பொதுவாகத் தென்னாசிய மக்களிடம் தேசிய உணர்வைவிடவும் இனக்குழும உணர்வு அல்லது இனமான உணர்வுதான் அதிகம் மேலோங்கியுள்ளது. இனக்குழும உணர்வு அல்லது இனமான உணர்வு என்பது பிற இனக்குழுக்களுக்கு எதிராக இன்னோர் இனக்குழுவின் குழுமான உணர்வுதான் அது. இத்தகைய குழுமான உணர்வு தேசிய உணர்வல்ல.

ஓர் இனக்குழுவானது தன்னிடம் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும், அடிமைத்தனங்களையும், எஜமானித்துவங்களையும் தம்மகத்தே பேணிக்கொண்டு இனக்குழு அடையாளத்தின் அடிப்படையில் இன்னோர் இனக்குழுவுடன் போட்டியிடும், பொருதும், பெருமை பேசும். ஆனால், தேசிய இன உணர்வு என்பது அப்படியல்ல. அது பொருளுற்பத்தியின் பின்னணியில் தன்னகத்தே காணப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் ஆண்டான், அடிமை நிலைகளையும் களைந்து அரசியற் பண்பாட்டு ரீதியில் மனித சமத்துவத்தைக் கோரிநிற்கும். இந்த இனக்குழுவாதத்திலிருந்து தேசியவாதம் பிரதானமாக வேறுபட்டிருக்கும் அம்சங்கள் என்னவெனில், தேசிய அடையாளம் இங்கு போட்டியல்ல, ஒரு யதார்த்தம் என்பதும், அந்த அடையாளம் ஒரு தற்காப்பு வரம்பு என்பதும்தான். அதுவும் ஓர் இயற்கையே தீவிர வீம்பல்ல. அடுத்து முற்றிலும் அந்தத் தேசிய வரம்புள் வாழும் மக்களது சமூக மாற்றம் பற்றியது. இது இனக் குழுவாதத்துள் சிறிதும் இல்லாத ஓர் அம்சம். அதாவது, தேசியம் என்பது அரசியல் பண்பாட்டு ரீதியில் சகல மனிதர்களையும் ஒருவர்க்கொருவர், சமத்துவமுள்ளவராக்குவதுதான். அத்தகைய சமத்துவம் உற்பத்தி வளர்ச்சிக்கான கூட்டுத்தேவையின் நிமித்தம் உருவாகின்றது.

மனிதனது பல இட்சக்கணக்கான ஆண்டு கால வரலாற்றில் தேசிய சமூக வாழ்வுதான் அது வரை நிலவிய அனைத்துக் கூட்டுவாழ்வு முறைகளை விடவும் அதிகூடிய கூட்டுவாழ்வுத் தன்மை கொண்டதாகும். அத்தகைய கூட்டுக்கும் கூட்டாகச் செயற்படுவதற்குமான ஓர் ஏற்பாடுதான் அரசியல் ஜனநாயகம் என்பது. இந்த வகையில், இனக்குழு உணர்வை விடவும் தேசிய உணர்வு பரந்ததும் உயர்ந்த விழுமியங்களைக் கொண்டதும் என்பதுடன் அது தன்னகத்தே புதிய பண்பாட்டையும் புதிய வாழ்க்கை முறையையும் புதிய சமூக இயக்க சக்தியையும் கொண்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக இனக்குழு உணர்வையே தேசிய உணர்வென தென்னாசிய சமூகங்கள் பெரிதும் விளங்கிக்கொள்கின்றன. இனக்குழு உணர்வின் பிரதான இயல்புகளில் ஒன்று தன்னிடமுள்ள குறைகளைப் பற்றிப் பெரிதும் சிந்திக்காது எதிர்க்குழு உணர்வில் நின்றே அதிகம் சிந்திப்பதாகும். பிராந்திய மக்களிடம் காணப்படும் தேசியவாதத்தில் எதிர் இனக்குழு நிலை உணர்வு மேலோங்கி நிற்பதைக் காணலாம். இதற்கு இந்திய தேசியவாதத்தை உதாரணமாகக் கொண்டு நோக்குவோம். இந்திய தேசியவாதத்தில் காலனித்துவ எதிர்ப்பு பிரதான அம்சமாகும். ஆனால், காலனித்துவ எதிர்ப்புத்தான் தேசியவாத மென்பது அல்ல. காலனித்துவ எதிர்ப்பு ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் வரலாற்று இயல்புகளில் ஒன்றாயும் வரலாற்று நிர்ப்பந்தங்களில் ஒன்றாயும் காணப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை காலத்திற்குக் காலம் அந்நியர் வருகைகள் ஏற்பட்டு அதன விளைவால் அந்நிய எதிர்ப்புணர்வு ஸ்தம்பிதம் அடைந்திருப்பதுடன் அந்நியச் செல்வாக்கும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. 'ஆரியர் வருகை', 'அராபியர் வருகை', 'ஐரோப்பியர் வருகை' என இதில் பெருவெட்டான இன வருகைகள் பல. இதனால், இனமோதற் பண்பும் பண்பாட்டுக் கலப்பும் பக்கம் பக்கமாய் வளர்ந்த ஒரு நாடாய் இந்தியாவுள்ளது.

### இந்தியாவின் சமூகநிலை பலதும் பத்தும் கலந்த சாம்பார்'

மேற்கத்தேச சமூகத்தினரின் வாழ்க்கை முறையில் பெருவெட்டாக ஒரு கட்டம் முடிந்து இன்னொரு கட்டம் தொடங்குவது போல இந்தியச் சமூகத்தினரின் வாழ்க்கை முறையில் இல்லை என்ற ஒரு சமூகவியற் கருத்துண்டு. அதாவது, அரை அடிமை முறை, குடிமை முறை, நிலமானிய முறை, இனக்குழு வாழ்க்கை முறை, சாதி முறை, நாடோடி வாழ்க்கை முறை, முதலாளித்துவமுறை, தேசிய வாழ்க்கை முறை, பல்லினக் கலப்பு வாழ்க்கை முறை, இன,மத, மொழிப் பகைமை மனநிலை கொண்ட வாழ்க்கை நிலை, பல்லினச் சமரசப்போக்கு எனப் பலதும் பத்தும் ஒன்றுகலந்த ஒரு சாம்பாராய் இந்திய சமூகநிலை காணப்படுகின்றது. மாடி வீட்டிலிருந்து எச்சில் இலை வீசும் மனிதனையும் அந்த எச்சில் இலைக்காக நாயுடன் கடிபடும் மனிதனையும் தொடப்படக்கொள்ளக் கொம்பெடுத்துக் குழல் ஊதும் மனிதனையும் கண்டம் விட்டுக் கண்டம் செய்மதியில் உரையாடும் மனிதனையும் வண்டி ஏறா மனிதனையும் அண்டவெளியில் பறந்து திரியும் மனிதனையும் ஒரேவேளையிற் காணக்கூடிய ஒரு புவிப் பரப்புத்தான் இந்தியா.

தொடர்ச்சியான அந்நிய வருகைகள் படையெடுப்புகள் ஆண்டான், அடிமைக் கொள்கைகள் என்பவற்றிற்கு ஊடாக சாதி அடுக்குகள், ஏற்றத்தாழ்வுகள், பல்லினப் பண்பாட்டுக் கலப்புகள் பலவித நம்பிக்கைகள் பன்முக விழுமியங்கள் எனப் பல்வேறு அம்சங்களும் ஸ்தம்பிதமடைந்தன. பல ஆயிரமாண்டுகால நீண்ட வரலாற்றுப் போக்கில் இத்தகைய சாதி அடுக்குகளும் ஏற்றத் தாழ்வுகளும் சமூக இயக்கப் போக்குக்கு ஏற்ற வகையில் ஒரு சீரான படிமானத்தைப் பெற்றுவிடடன. அத்தகைய சாதி அடுக்குகளும் ஏற்றத் தாழ்வுகளும் சமூக, சமய அறநெறிகளாக ஆக்கப்பட்டு அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டு அம்சங்களாகவும் ஆக்கப்பட்டன. வர்ணாச்சிர தர்மம்பற்றிக் காந்தி குறிப்பிடுகையில், அதனை 'விட்டுவிலக முடியாத ஒரு தெய்வீகக் கட்டு' என வர்ணித்தார். இத்தகைய அனைத்துப் பண்புகளுடனும் நீண்டகால வரலாற்றுப் போக்கோடு சேர்ந்து வளர்ந்துவந்த அந்நிய எதிர்ப்பு, சாதி அடுக்கு, சமூக ஏற்றத் தாழ்வு, இவற்றின் அடிப்படையிலான சமூகப் பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றிற்கு ஊடாகவே காலனித்துவ எதிர்ப்பும் இந்தியாவிலே தோன்றியது. எனவே, இந்தியச்சமூகம் எப்படித் தன்னிடம் ஏற்கனவே காணப்பட்ட பல்வேறு தீய அம்சங்களையும் ஒன்றுகுழைத்து அந்தக் குழையலுக்குள்ளால் அந்நிய எதிர்ப்புப் பண்பையும் எப்படி ஓர் அம்சமாகக் கொண்டிருந்ததோ அப்படியே அதன் காலனித்துவ எதிர்ப்பும் ஏற்கனவே அதனிடமிருந்த தீய சமூக அம்சங்களையும் புறந்தள்ளாது அவற்றுடன் இணைந்தே எழுந்தது. இப்படி பழைய குப்பை கூழங்களுடன் புதியதோர் அம்சத்தையும் அது நல்லதோ அன்றிக் கெட்டதோ இணைத்து உள்வாங்குவது இந்திய சமூகவியலிற் காணப்படும் ஒரு முக்கிய இயல்பாகும். இப்போக்கு வளர்வதற்குப் புவியியல் அமைவிடம் ஒரு புறக்காரணியாய்த் துணை நின்றுள்ளது போல் தெரிகின்றது.

இந்தியாவில் அந்நிய எதிர்ப்பு, சாதி அடுக்கு, சமூக ஏற்றத்தாழ்வுகள், கண்மூடித்தனமான இன, மத, மொழி விசுவாசம் அவற்றின் அடிப்படையிலான வெறித்தனமான போக்குகள் ஆகிய அனைத்தும் இனக்குழு உணர்வின் வெளிப்பாடுகளாகவோ அல்லது அத்தகைய இனக்குழு உணர்வின் விளைவுகளாகவோ அல்லது இவை இரண்டினதும் கூட்டாகவோ உள்ளன. இத்தகைய திரட்சியான சமூக வரலாற்றுப் போக்கிற்கும் மனப்பாங்கிற்கும் ஊடாகத்தான் இந்திய சமூகங்களின் காலனித்துவ எதிர்ப்பு அமைந்தது. இத்தகைய காலனித்துவ எதிர்ப்பைத்தான் நாம் தேசியவாதம் என அழைக்கின்றோம். காலனித்துவ எதிர்ப்பு அவசியமானது. அதிற்பிரச்சினை இல்லை. ஆனால், அந்த காலனித்துவ எதிர்ப்புடன் கூடவே தேசியவாதம் எவ்வளவு தூரம் உருத்திரண்டுள்ளது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

### நேருவின் நடுவு நிலைமையும் ஒருவகையில் வகுப்புவாதமே

இந்தியத் தலைவர்கள் எவ்வளவுதான் தேசியம் பேசினாலும் செயலில் அவர்கள் வகுப்புவாதிகளாகவே பெரிதும் இருந்தனர். உதாரணமாகத் தனது சுயசரிதையில் ஜவகர்லால் நேரு கூறுவதை நோக்குவோம். 'தமது தேசியப் போர்வைக்குள் காங்கிரஸ்காரர்கள் வகுப்புவாதிகளே. ஆனால், எந்தப்பக்கமும் சாராது காங்கிரஸ் தலைமை உறுதியான நடுநிலை வகித்தது. ஏனெனில், சீக்கியரும் மற்றும் சில சிறுபான்மையினரும் தமது கோரிக்கைகளை விடுக்கலாயினர். இரண்டு பக்கமும் சாராத நிலை இதனால் தவிர்க்க முடியாததாயிற்று.' (அழுத்தம் எனது) இதில் நேரு ஏனைய காங்கிரஸ்காரர்களைத் தேசியப்போர்வையிலான வகுப்புவாதிகள் என்று கூறுவதற்கு அப்பால் நேருவும் அவரது நடுநிலை மூலம் வகுப்புவாதத்திற்குத் துணைபுரிபவராகவே இருந்துள்ளார். அதாவது, ஒடுக்கும் பெரும்பான்மையினருக்கு எதிராக நிலைப்பாடு எடுக்காமல் நடுநிலை வகித்தது என்பது பலத்தாற் குறைந்த சிறுபான்மையினங்களைப் பெரும்பான்மை இனம் ஒடுக்க உதவி புரிந்ததாகவே முடிந்தது. இந்த வகையில் அவர் கூறும் அவரது நடுநிலையும் ஒரு வகுப்புவாதமே. இந்தவகையில், தேசியவாதத்திற்குப் பதிலாக வகுப்புவாதமே இப்பெரும் தலைவர்களினதும் இயல்பாய் இருந்துள்ளதானது இந்தியத் தேசியத்தை அதன் கருவிலேயே கேள்விக்குறியாக்குவது சாத்தியமாகிவிட்டது.

இந்தியாவில் ஆங்கிலேயர் தமது தேவைகளின் பொருட்டுச் செயற்பட்டதன் விளைவாகத் தேசியத்திற்கான சில அடிப்படை கட்டமைப்புக்களை உணர்வுபூர்வமின்றி தோற்றுவித்தனர். பிரதேசத்துடன் பிரதேசம் தொடுத்து இணைக்கப்பட்டன. புகையிரதப் பாதைகள், போக்குவரத்து ஏற்பாடுகள், வீதிகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள் போன்ற வலைப் பின்னல்களால் வடக்கிலிருந்து தெற்குவரை, கிழக்கிலிருந்து மேற்குவரை இந்தியா பின்னிப் பிணைக்கப்பட்டது. இயந்திர மயமாக்கல்கள், பண்ட உற்பத்திகள், நிர்வாக அமைப்புகள், மேற்கத்தேச சிந்தனைகள் போன்ற பல அம்சங்களும் தேசியம் உருவாகுவதற்கேற்ற புறநிலை ஏற்பாடுகளைச் செய்தன.

ஆனால், அரசியற் கலாசாரத்திலும் சமூக பண்பாட்டம்சங்களிலும், வாழ்வு பற்றிய நோக்கிலும், விழுமியங்களிலும், கண்ணோட்டங்களிலும் சிந்தனை முறைகளிலும் தேசியம் உருவாகத் தவறியது. தேசியம் பற்றிய விவகாரத்தில் இது மிகவும் ஓர் ஆழமான பிரச்சினை. பொதுவாக ஆசிய சமூகங்கள் அனைத்திலும் தேசியம் பற்றிய சிந்தனைப் போக்கு முழு அளவிற் பிரச்சினைக்குரியதாய் இருக்கின்றது.

அந்நிய வருகை, அந்நிய எதிர்ப்பு, ஆண்டான் அடிமை நிலை, சாதியடுக்கு, ,சமூக ஏற்றத்தாழ்வு, இனக்குழுமான உணர்வு, மத பண்பாட்டு நம்பிக்கைகள் ஆகிய இவை அனைத்தின் அடிப்படையிலும் நீதி - அநீதி, தர்மம் - அதர்மம், பாவம் - புண்ணியம் பற்றிய இந்திய மனப்பாங்கும் இந்திய சிந்தனைப் போக்கும் உருவானது. இவ்வாறு உருண்டு திரண்ட மனப்பாங்கிற்கும் சிந்தனை முறைக்கும் ஊடாகவே புதுவரவான காலனித்துவத்தையும் இவர்கள் எதிர்கொண்டனர். பழகிப்போன நமது சிந்தனை முறைக்கும் மனப்பாங்கிற்கும் ஊடாகவே இவர்கள் காலனித்துவத்தின் புதிய நிலைமைகளை உள்வாங்கி அதனுடன் தம்மை இணைத்து தேசியம் என்ற பெயரில் ஒரு புதுவளம் பெற்றனர். காலனித்துவ ஆதிக்கத்தை எதிர்த்தனராயினும், காலனித்துவ ஆதிக்கத்தின் இயல்புகளைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். ஏற்கனவே, நிலவி வந்த சமூக ஏற்றத் தாழ்வுகளும் ஆதிக்கங்களும் காலனித்துவ நிலைமைகளின் கீழ் புதுவடிவம் பெற்றன.

தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான போர், தர்மத்திற்கு ஏற்படும் சோதனைகள் என்பனவற்றையே இந்துப் புராணங்கள் தமது சிந்தனை நெறிகளாகக் கொண்டுள்ளன. இந்திய தேசிய விடுதலைக்குத் தலைமை தாங்கிய காந்தி, தனது மனப்பாங்கை வடிவமைத்ததில் ஹரிச்சந்திரா கதைக்குப் பெரும் பங்கிருந்ததாகக் கூறுகிறார். இந்திய இந்துக்களிடம் மிக வலுவுள்ளதாகக் காணப்படும் புராண - இதிகாச மனப்பாங்கும் முஸ்லிம்களை இந்திய தேசியத்திலிருந்து புறந்தள்ளி விட்ட அம்சங்களில் ஒன்றாகும்.

### உலகளாவிய வரலாற்றிலே காந்தி தனித் தினிசான தலைவர்

20 ஆம் நூற்றாண்டின் உலகளாவிய வரலாற்றில் இடம்பிடித்த தனிமுதன்மையான தலைவர்களுள் காந்தியும் ஒருவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்துடன், இதுவரையான உலக வரலாற்றில் இவர் ஒரு தனித் தினிசான தலைவருங்கூட.

காந்தியின் கதராடைத் தோற்றத்தில் இந்தியத் துறவுநிலையும் இந்தியாவின் ஏழ்மையும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன. கைத்தடியும் அரைமேனிக் கதராடையும் இந்து, சமண, பௌத்த மதத் துறவிகளை அல்லது மதரீதியான புனிதர்களை நினைவுறுத்துவதாக அமைந்தன.

இந்துக்களின் மனங்களில் உறைந்திருந்த ஓர் இந்துத் துறவியை, தெய்வீகத் தன்மை வாய்ந்த ஓர் இந்துப் புனிதரை நினைவுறுத்துபவையாகக் காந்தியின் தோற்றமும் கருத்துக்களும் அமைந்தன. பிரிட்டிஷ் பிரதமராயிருந்த வின்சன் சேச்சிலின் கண்களில் காந்தி ஓர் 'அரை நிர்வாணப் பக்கிரியாய்' காட்சியளித்தார். ஆனால், இந்துக்களின் கண்களில் அவரது தோற்றம் ஒரு தெய்வீகப் பிறவியை முன்னிறுத்தியது. இந்திய மக்களின் சமூகவியற் பண்பில் இருவகையான தோற்றங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒன்று எளிமையான, தெய்வீகத்தனமான தோற்றம். இரண்டு படாடோபமான மன்னர் அல்லது ஜமீன்தார்த் தோற்றம் இதில் காந்தியின் தோற்றம் முதலாவதைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

இந்தியாவின் இந்து மதத்திற்குள் நூற்றுக்கணக்கான தேசிய இனக்கூறுகள் உண்டு. ஆனால், காந்தியின் இந்தத் துறவி வடிவிலான இப்பிரசன்னத்தின் கீழ் ஏனைய இந்துத் தேசிய இனங்களின் தேசிய முக்கியத்துவம் மழுங்கிப் போயின. அதாவது, அத்துறவு வடிவத்திற்குள் ஏனைய இந்துத் தேசிய இனங்கள் நெகிழ்ந்து அதற்குள் தம்மையும் இணைத்துப் பார்த்தன. அத்துடன், காலனித்துவ எதிர்ப்பு மட்டுமன்றி உள்ளூர உறைந்திருந்த இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வும் இப்போக்கிற்கு உரமூட்டின. இந்துக்கள் மத்தியில் காணப்பட்ட ஏனைய இந்துத் தேசிய இன அலகுகள் தம்மை அறியாமலே இந்து-முஸ்லிம் பிளவின் முன் அகண்ட இந்து வாதத்துடன் சமரசத்திற் குள்ளாகின. இப்பின்னணியில் முஸ்லிம் மக்கள் மட்டும் பிரிந்து செல்லும் உரிமை பற்றிச் சிந்திக்கலாயினர். ஆனால், முஸ்லிம்களும் இஸ்லாமியர் என்ற ஒரு மத அடிப்படையிலேதான் சிந்தித்தனரே தவிர இஸ்லாமியர் மத்தியில காணப்பட்ட பல தேசிய இனங்களினதும் அடிப்படையில்அல்ல.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட இந்துசார் தேசியவாதப் பின்னணியில் இந்துமதம் சார்ந்த ஏனைய தேசிய இன அலகுகள் தமக்குள்ள தேசிய சுயநிர்ணய உரிமை பற்றியோ அதனடிப்படையில் பிரிந்து செல்வதைப் பற்றியோ அதிகம் சிந்திக்காத நிலைக்குள்ளாகின. இஸ்லாமிய மதம் சார்ந்த பல தேசிய இனப் பிரிவுகளின் நிலையும் இதுவே. இந்து-முஸ்லிம் என்ற பெருவெட்டுச் சிந்தனைக்குள் பலவாய தேசிய இனச் சிந்தனைகள் நசிந்துபோயின.

(தொடரும்)

வனிலா சுவையூட்டப்பட்டது

# Action

**Nutritional Food Drink**

போஷாக்கு நிறைந்த பானம்

**பிள்ளைகள்**
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் B, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**வாலிபர்**
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**வயது வந்தவர்கள்**
புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**கர்ப்பிணி/பாலூட்டும் தாய்மார்கள்**
சக்தி, புரதம், கல்சியம், (ƒ)போலிக் அமிலம், விட்டமின் $B_{12}$, இரும்புச்சத்து, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.**

27 அத்தியாவசிய போஷனைப்பதார்த்தங்கள்

தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்.

தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்.

**வயோதிபர்**
புரதம், விட்டமின் B, அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.



**450 கிராம்**
**ரூ.460/=**




Manufactured by :

Astron

**Astron Limited,**
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741, 5566741 Fax: 2636173
E-mail: astron@astron.lk

# தமிழர் விடுதலையை விரைவுபடுத்த பாலா அண்ணனின் நூல் வழிவகுக்கும்

## சிறப்புரையில் இளம்பரிதி பாராட்டு

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.**

**இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது. ஏனையோரின் உரைகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன.**



போருக்கு முகம் கொடுத்து, எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காமல் உறுதியான ஒரு நிலைப்பாட்டில் எங்களுடைய தேசியத்திற்காக - எங்களுடைய வாழ்விற்காக - இந்த இலங்கைத் தீவிலே எமது தலைவர் ஒரு சம பலமுள்ள படையமைப்பை நிறுவினார்; பலத்தை நிர்ணயித்தார்.

சமமான நிலையொன்று உருவானதால், இங்கு சமாதானத்திற்கான சூழலொன்று உருவானது. அதைத் தலைவரே தோற்றுவித்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

இந்தச் சமாதானம் ஏற்பட்டு மூன்றாண்டுகள் கடந்துகொண்டிருக்கின்றன. இந்தக் காலத்துக்குள்ளே - இராணுவ வலைப்பின்னலுக்குள்ளே - வாழ்வின் ஒளியைத் தேடி நாங்கள் அலைகின்றோம்; நிம்மதியைத் தேடி அலைகின்றோம்; தடைகளற்ற ஒரு நிலை எங்களுக்கு வேண்டுமென்று எதிர்பார்த்துத் துடிக்கின்றோம்.

கிராமம் கிராமமாக எங்களுடைய தொழிலாளர்கள் - ஆண்கள் - தொழிலுக்குப் போகின்றார்கள். கரையிலிருக்கின்ற காவலரண். சிப்பாய்கள் அதனைப் பார்த்து வீட்டுக்குள் புகுந்து அச்சுறுத்தி நெருக்கடிகளைக் கொடுக்க நாளும் பொழுதும் முனைகின்றார்கள். இவ்வாறு தொழிலுக்குப் போகின்ற ஒவ்வொருவரும் அச்சத்துடன் உள்ளார்கள்.

சமாதானம் நிலவுகின்றது; வேட்டொலிகள் கேட்கவில்லை. ஆனால், மனங்களில் சமாதானம் உண்டா? எங்களின் எண்ணங்களில் சமாதானம் தெரிகின்றதா? அதை அனுபவிப்பதற்கான வழிகள் ஏதும் திறக்கப்பட்டிருக்கின்றதா? என்று பார்க்கின்றபோது, எதுவுமே எமக்கு இல்லைத்தான்.

யாழ். வைத்தியசாலையிலே சென்று பார்த்தபோது சிறுவயதுத் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதன் தாக்கம் எங்கே போகப்போகின்றது? வாழ்வின் மேன்மையான தன்மைகளை, பக்குவத்தையும், பண்புகளை, நடைமுறைகளையும் கொண்ட எமது இனத்தின் சீரழிவுக்குக் காரணம் என்ன?

வீட்டின் கட்டுக்கோப்போடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற எங்களின் இளைஞர்கள், இறுதியில் அடாவடிகளாக, ஒருவரின் இயல்பை அச்சுறுத்துபவர்களாக மாறிக்கொண்டே இருக்கின்றார்கள்.

மறைந்துகொண்டு போன பேதங்களை - இல்லாமல்போன பேதங்களையெல்லாம் தூண்டித்தூண்டித் தோற்றுவித்து, மோதல்களை உருவாக்கி, அந்த மோதல்கள் மூலம் இன்னும் சீரழிவை ஏற்படுத்தி, அச்சம் உள்ள சூழலை உருவாக்குவதன் பின்னணி என்ன?

இளைஞர்களின் சண்டை நடக்கின்ற பொழுது பார்த்துக்கொண்டிருக்கின்ற பொலீஸார், விளக்கத்துக்கு வருகின்ற பொழுது அவர்களைத் தாக்குகின்றார்களே இந்த சமாதான காலத்தில் மக்கள் இதனையா எதிர்பார்த்தார்கள்?

ஒரு பெரியவர் என்னிடம் குமுறினார். "எத்தனையோ எதிர்பார்ப்போடு என் வீட்டிலிருந்தேன் என் கடற்கரையில் நான் தொழில் செய்ய ஆசையோடு இருந்தேன்; செய்தேன்; மனங்குளிர வாழ்ந்தேன். என்னைப்போல் எத்தனை பேர் காத்திருந்து இன்று 19 வருடங்களாகிவிட்டன. எப்பொழுது நான் போவது."

மனங்கள் குமுறுகின்றன; மக்களுடைய மனங்கள் ஏங்குகின்றன. தங்களுடைய இருப்புக்குப் போகவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள்.

ஆனால், இடங்கள் கிடைக்கின்றனவா? வழிகள் திறக்கப்படுகின்றனவா? முயற்சிக்கின்றபொழுதெல்லாம் முடக்கப்படுகின்றார்கள் எம் மக்கள்.

எனவே, போரின்போதும் சமாதானத்தின் போதும் எமது மக்களுடைய நிலைகள் என்ன? அதற்கான பின்னணிகள் என்ன? கூற்றுவங்கள் என்ன? நகர்வுகள் என்ன என்பதை ஒவ்வொருவருக்கும் பாலா அண்ணனுடைய இந்த நூல் தெளிவுபடுத்திக்கொண்டே இருக்கின்றது; இருக்கும்.

எங்களுடைய மக்களின் அர்ப்பணிப்பினாலும் தலைவரின் தீர்க்கபூர்வமான போக்கினாலும் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் கால ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் தனித்துவ நிலைகளையும் அந்தஸ்தையும் பெற்றுச் செல்கின்றது.

அதேவேளை - அன்று இலங்கைத் தீவிலோ வடக்கு - கிழக்கிலோ சுய ஏகாதிபத்தியத்தோடு எமது மூதாதையர்கள் வாழ்ந்தார்கள் அது மறுதலிக்கப்பட்டபோது, எமது மூதாதையர்கள் கிளர்ந்தெழுந்து அரசியல் ரீதியாகப் போராட முற்பட்டார்கள். அவர்களின் முடிவின் அடிப்படையிலேயே எமது தலைவர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

எப்படித்தான் எதிர்காலம் இருந்தாலும் இலங்கையிலே ஓர் ஏற்றம் ஒன்று இருக்கின்றது. தென்னிலங்கையும், வடகிழக்கு இலங்கையும் அரசியல் நிலைவரம் என்ற நிலையில் பிரிக்கப்பட்டுள்ளன; பிரிந்து கொண்டிருக்கின்றன.

அரசினுடைய சர்வதேச ரீதியான மூடி மறைப்புக்கள் எல்லாம் இன்று விலகத் தொடங்கிவிட்டன. ஊடகவியலாளர்கள் இங்கு வந்து உண்மைகளை வெளிப்படையாகக் கொண்டு போவதற்கான மறைப்புக்களை, ஊடகச் சுதந்திரத்தை அரசினுடைய ஆட்சித் தலைமையும் அதனுடைய அலகுகளும் மூடி மறைக்கின்றன; அத்துமீறுகின்றன.

இப்பொழுது கணிப்பு புலிகள் மனித உரிமைகளை மீறுகிறார்களா? இல்லை, புலிகள் தான் மனித விழுமியங்களைக் கொண்ட - மனித மேன்மைகளை விரும்புகின்ற - ஒரு விடுதலைச் சக்தியாகப் பார்க்கப்படுகின்ற - சூழல் இருக்கின்றது.

உலகத்திலே மனித உரிமைகளிலே மிக மோசமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரசின் போக்குகள் அமைந்து கொண்டிருக்கின்றன.

இந்தத் தன்மையிலே நாளும் பொழுதும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற எமது மக்களின் மனங்கள் குமுறிக்கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம்.

ஏனெனில், விரக்தி, வெறுப்பு, நம்பிக்கையீனம் இவையெல்லாம் கடந்து எத்தனைதான் தடைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து - நாங்கள் போவோமென்ற ஒரு புத்துணர்ச்சி - புத்தெழுச்சி - எங்கள் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்றது.

இன்று ஒவ்வோர் இடத்திலும் இதுவரை மழுங்கடிக்கப்பட்டதை - மூடி மறைக்கப்பட்டதை - வெளிக்கொணரப் பயந்த நிலை மாற்றமடைந்து வருகின்றது. மக்களுக்குடைய விழிப்புணர்ச்சியே மக்களுடைய வாழ்வு நிலையைத் தீர்மானிக்கும் என்ற தத்துவார்த்தத்துக்கு அமைவாக இன்று எங்களுடைய மக்களின் மனங்கள் குமுறிக்கொண்டிருக்கின்றன. அந்த மக்களுடைய மன எரிமலைகள் வெடிக்கத் தொடங்கிவிட்டன; வெடித்துக்கொண்டிருக்கின்றன.

ஒரு சுதந்திரச் சூழலைத் தோற்றுவிக்கின்ற - மக்களுடைய மனநிலையிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்ற - வழி இதுவாகும். அந்த மக்களுடைய விடுதலைக்கான அங்கீகாரத்தைச் சர்வதேசத்திலே ஏற்படுத்துவதற்கான வழியைத் திறக்கின்ற ஒரு வெளியீடாக எங்களுடைய பாலா அண்ணனின் இந்நூல் இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தச் சூழ்நிலையில் வெளிவருவது எங்களுடைய விடுதலையை வேகப்படுத்துவதற்கான வழியாகவே அமைகின்றது.

ஆதலால், எமது மக்களுடைய அந்த உணர்வு ரீதியான உந்துதலால் அவருடைய இன்னும் பல வெளியீடுகள் வருகின்றபோது, சர்வதேச ரீதியில் எங்கள் மீது போடப்பட்ட பொய்மைகளும், இருட்டடிப்புக்களும் அகன்று போகின்ற ஒரு சூழலுக்கான ஓர் அங்கீகாரமும், எங்களுடைய மக்கள் மத்தியிலே மறைக்கப்பட்டிருக்கின்ற அல்லது மறந்து போயிருக்கின்ற அல்லது திரிவுபடுத்தப்பட்டிருக்கின்ற எல்லா சந்தேகங்களுக்கும் தீர்வுகள் கிடைத்து விழிப்புணர்ச்சி பெறுகின்ற ஒரு சமுதாய மாற்றம் தோன்றும். இதனூடாக நாங்களும் நீங்களும் விரும்பு கின்ற அந்த மானிட விடுதலை கிடைக்கும்; மகிழ்ச்சியும் நல்லாட்சியும் நிலவும் - என்றார். (த-202-7-86)



வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் பரிசுத்தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், முதன்மை விருந்தினரான சைவப்புலவர் வ.கந்தசாமிக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் ந.சிவராஜாவும் படத்தில் உள்ளார். (எ)

### வீடியோப் படக்காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் தர்மசேன பத்திராஜாவின் நெறியாளகையில் உருவான 'அஹஸ் கவ்வ (ஆகாய கங்கை) என்னும் சிங்களத் திரைப்படம், ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசனின் வழிநடத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம்பெறும்.

(எ-202)


### பிரதேச செயலக ஊழியரை அரச அதிபர் சந்தித்தார்

வலிமேற்கு,மார்ச்27

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் வலி.மேற்கு பிரதேச செயலகத்துக்குச் சென்று உத்தியோகத்தர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டார்.

கிராம அலுவலர்களுக்கு விரைவில் தளபாடங்களை வழங்குவதற்கும், மோட்டார் வண்டிக்குரிய கடனைப்பெற்றுக் கொடுப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் அங்கு தெரிவித்தார்.

(எ-175)




வர்த்தக வங்கியின் நெல்லியடிக் கிளையில் 'அருணலு' சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள மாணவர்களில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 17 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த மாத இறுதியில் வங்கி முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் வங்கி முகாமையாளர் மற்றும் வங்கி அதிகாரிகள் இணைந்து எடுத்துக்கொண்ட படம்.



கலாபூஷண விருது பெற்ற எஸ்.கெங்காதரன் ஆசிரியருக்கு முன்னாள் அதிபர் சி.தார்சீசியஸ் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். கௌரவிப்பு நிகழ்வுக்குத் தலைமை வகித்த இ.கிறிஸ்தோப்பரும் படத்தில் உள்ளார்.

# வளர்ப்பு நாய்களுக்கு கொக்குவிலில் தடுப்பூசி

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொக்குவில் பிரதேசத்தில் நாளையும் நாளைமறுதினமும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை கோண்டாவில் புகையிரத நிலையத்திலும் -

முற்பகல் 10.45 மணிமுதல் 12.15 மணிவரை கோண்டாவில் இருபாலை வீதியிலுள்ள ஞானவீர சனசமூக நிலையத்திலும் -

நண்பகல் 12.30 மணிமுதல் 2 மணிவரை கோண்டாவல் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேச சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 10.30 மணி வரை கோண்டாவல் நாராயண வீதியிலுள்ள ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்திலும் - முற்பகல் 10.45 மணி முதல் 12.15 மணி வரை ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையத்திலும் நண்பகல் 12.30 மணிமுதல் 2 மணிவரை கோணடாவில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும். (எ-202)


## றோயல் தங்கப் புதையல் போட்டி

ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப் போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்று வோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2வது, 3வது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப் படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான் - றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச் சீட்டினையும் இணைத்துப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

றோயல் தங்கப் புதையல் போட்டி, சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச் சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும். றோயல் குளுக்கோஸ் புயல் வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 222-2567

றோயல் குளுக்கோஸ்

பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.

இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P:- 0777-277670, 011-4712439.
(54-14-15-42)


## உள்ளூராட்சி ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக கே. சபாபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று வருட இடைவெளியின் பின்னர் இவர் மீண்டும் இந்தப்பதவியை ஏற்றுள்ளார்.

உள்ளூராட்சி ஆணையாளராக இருந்த செல்வி தெது. விஜயலட்சுமி உள்ளூராட்சி தலைமைப்பீட பணிப்பாளராக நியமனம் செய்யபபட்டுள்ளார்.

மேற்படி நியமனங்களை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ செய்துள்ளார்.

இதேவேளை, இம் மாத இறுதியில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயலாளர் மட்டத்திலும் விரைவில மாற்றங்கள் இடம்பெறவுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-185)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்27

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி வார முகாமைத்துவ போட்டி - 2004 இல் வெற்றிபெற்ற சபைகளுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா தலைமையில் எதிர்வரும் 31ஆம் திகதி திருக்கோணமலையில் இடம்பெறும் மேற்படி விழாவில் மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாணடோ பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.(எ-185)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தகவல் சேகரித்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் கீழ்க்காணப்படும் விவரங்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களோ அல்லது பொறுப்புவாய்ந்தவர்களோ கீழ்க்காணப்படும் விவரம் தெரிந்திருப்பின் பிள்ளைகளின் உயரிய நலன்கருதி கீழ்க்காணப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ உடன் அறியத்தரவும்.

- பெற்றோரை இழந்திருக்கலாம்.
- நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
- காணாமற்போயிருக்கலாம்.
- உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்திருக்கலாம்.
- இல்லங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம்.
- வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம்.
- கல்வி புறக்கணிக்கப்பட்டிருக்கலாம்.
- துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டிருக்கலாம்.

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு**
அறை எண்.30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
தொ.இல.: 222 5657
மின்னஞ்சல்: dcpc jaffna@yahoo.com
இணையம்: www.pillaii.org
(சி.41656)(42-14-46)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**செல்லத்துரை கமலாதேவி**

மண்ணில் 1947-05-10
விண்ணில் 2005-02-25

காலத்தால் அழியாத காவியமே - எம்மம்மா
கோலத்தின் பிடிக்குள் அகப்பட்டு எம்மையெலாம்
கதிகலங்க வைத்துவிட்டு. விண்ணோக்கி விரைந்த தேனோ?
31 நாள்களாகியும் உமது நினைவுகள் நீங்கவில்லையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நந்தாவில்,
கோண்டாவில் மேற்கு.
(43512)(46-14)
-குடும்பத்தினர்.

## சிறு நீரகம் உடனடியாகத் தேவை

எனது சகோதரருக்கு (வயது 42) ('0' Group) சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது.
இதனைத் தந்துதவ விரும்பும் எவாராவது கீழ்க்காணும் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு முகவரி: உதயன் ஹாட்வெயர்ஸ்
59, பிரதான வீதி,
சங்கானை,
தகவல்: திருமதி உ.பவானி,
(சகோதரி)
(சி.41831)(46-14)


## தென் இந்தியத் திருத்தல யாத்திரை

**தென்இந்திய ஆந்திரா, கர்நாடக சேவை பாண்டிச்சேரி ஊடாகத் திருத்தல யாத்திரை**

மேல்மருவத்தூர், ஸ்ரீ சைலம், மந்திராலயம்,சாயிபாபா, மூகாம்பிகை, சோட்டானிக்கரை, திருப்பதி,சுசீந்திரம், நவக்கிரக கோயில்9, சிதம்பரம், திருவெண்ணாமலை, ஆறுபடை வீடுகள், தஞ்சாவூர், பிள்ளையார்பட்டி, சரஸ்வதி ஆலயம், மாங்காடு, திருவேற்காடு, மலைக்கோட்டை, இராமேஸ்வரம் உட்பட 100 இற்கும் அதிக சிறப்புமிக்க ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

**இந்திய இன்பச் சுற்றுலா இளம் தம்பதிகளுக்கும் சுற்றுலாப் பிரியர்களுக்கும் அரியதொரு சந்தர்ப்பம்**

ஊட்டி (ஒரு நாள்), முதுமலைக் காடு (ஒரு நாள்), மைசூர் (ஒரு நாள்), சிம்லா (3 நாள்), குளு, மணாலி (3 நாள்), டெல்லி (2 நாள்), ஆக்ரா, தாஜ்மஹால் (ஒரு நாள்), ஹைதராபாத் (ஒரு நாள்), கோவா (2 நாள்), கேரளா (ஒரு நாள்), கொடைக்கானல் (2 நாள்), டார்ஜி லிங் அல்லது அமிர்தசரஸ் (ஒரு நாள்), சென்னை (2 நாள்), நாள்கள் 25+2 பயணிகள் 20 உணவு – சைவ, அசைவ உணவுகள்.

**வட இந்தியத் திருத்தல யாத்திரை**

காசி,கயா, ரிஷிகேஸ், ஹரித்துவார், அயோத்தி, வைஸ்ணவி தேவி, பத்திரிநாத், கேதார்நாத், அமர்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திரிவேணி, இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, சென்னை, 15 நாள்கள், 23 நாள்கள், 40 நாள்கள் யாத்திரை ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் விருப்பமுடையவர்கள்

**முழுவிவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.**

**T. Ranganathan**
☎: 0777 680102, 077 6264301
(C-41835)(53-11-14)



## யாழ். மாவட்டத்தில் சிறந்த பாடகர் / பாடகி யார்?





**அரியாலை**
**86ஆவது சுதேசிய விழாவை**
**முன்னிட்டு**
**மாவட்ட ரீதியில் திறந்த போட்டி**

விதிகள்:
1. ஒருவர் தனியொரு ஏதாவது முழுப்பாடலைப் பின்னணி இசையோடு இணைந்து பாடவேண்டும்.
2. வயதுக் கட்டுப்பாடு இல்லை.
3. தெரிவுப்போட்டிகள் முன்னர் நடைபெறும்.

✳ **வருடப் பிறப்பன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் 5 பேருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.**

விண்ணப்பங்கள் ஒப்படைக்கவேண்டிய முகவரி:
1. இல. 03, நவீன சந்தை மேற்புறம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (கே.கே.எஸ். மக்கள் வங்கிக்கு அருகில்).
2. செயலாளர், 86ஆவது சு.தி.கொ. 392, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 30.03.2005**
**அனுமதிக்கட்டணம் ரூ.50/-**

அனுசரணை வழங்குபவர்கள்:

**கிறீன்பலஸ் எம்போறியம்**

யாழ்நகரில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறை வசதியுடன் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தினுசுகளின் நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகம் செய்பவர்கள்தான்

**கிறீன்பலஸ் எம்போறியம்**
இல.43, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி-41825) (24-14-15)

# நெல் அறுவடை, சூடுமிதிக்க புதிய இயந்திரம் விவசாயிகளுக்கு உத்வேகம் அளிக்கும் செய்தி

**மன்னார் மாவட்டத்தில் அடம்பன் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கறுக்காய்குளம் கிராமத்தில 23.02.2005 அன்று வன்னி வேளான் தொழில்நுட்ப நிறுவனம் புதிதாக அறிமுகம் செய்து வைத்த நெல் அறுவடை செய்து உடன் சூடுமிதித்து நெல்லைப் பொதிசெய்து சந்தைப்படுத்தும் புதிய தொழில்நுட்ப இயந்திரத்தின் அறிமுக விழா நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.நிக்கிலாப்பிள்ளை உதயனுக்கு அளித்த செவ்வி இது.**

◆கேள்வி:-வன்னி வேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினர் இன்று மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு நெல் அறுவடை செய்து, உடன் சூடுமிதித்து நெல்லை வேறாகப் பிரித்து தூற்றி பொதிசெய்யக்கூடிய இயந்திரத்தினை அறிமுகம் செய்துள்ளனர். இந்த இயந்திரத்தின் அறிமுகம் பற்றி உங்கள் கருத்து?

❐பதில்- இது ஒரு மிக முக்கியமான நிகழ்வு. கூடுதலாக விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற வன்னிப் பெருநிலப்பரப்பு மக்கள் காலத்திற்குக்காலம் நெற்செய்கையில் பெரும் பிரச்சினைகளைச் சந்தித்து வந்திருக்கிறார்கள்.

நெல் உற்பத்தியில் ஆரம்பத்திலிருந்து அறுவடை முடியும்வரையும் பெரும் சிரமங்களை அவர்கள் எதிர்கொண்டு வந்துள்ளனர்.

தொடர் உற்பத்தியில் ஆரம்பத்திலிருந்து பல தொழிலாளர்கள் தேவையாக இருக்கின்றனர். அதுவும் நெல் அறுவடைக்குப் பெருமளவு ஆள்கள் தேவை. முன்னைய காலங்களில் மட்டக்களப்புப் பகுதியில் இருந்து பலர் இங்கு வருகை தந்து நெல் அறுவடைக்கு உதவி புரிவார்கள். அதனால் ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருந்து வந்தது.

தற்போது ஏற்பட்ட சுனாமிப் பேரலையை அடுத்து அவர்களும் இம்முறை வரவில்லை. இதனால், நெல் உற்பத்தி மேற்கொண்ட மன்னார் மாவட்ட விவசாயிகள் செய்வதறியாமல் இருந்தனர். இந்தவேளையில்தான், வன்னி வேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினர் இந்தச் சேவையை வழங்க முன்வந்துள்ளனர். இது மிகவும் பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

நெல் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களைக் குறுகிய காலத்தில் அறுவடை மேற்கொண்டு இதன் முழுப்பயன்பாட்டையும் பெறுவதற்கு விவசாயிகள் ஆவலாக இருந்தார்கள்.

இந்த ஆவலையும், எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் வகையில் வன்னி வேளான் தொழில் நுட்ப நிறுவனத்தினர் இப்படியான நவீன வசதிகளை உடைய இயந்திரங்களைக் கொண்டு வந்து நெல் அறுவடையை மேற்கொண்டு விவசாயிகளுக்கு உதவுவது ஒரு பெரும் சேவை என நான் கருதுகிறேன். இது விவசாயிகளுக்குப் பல வகையிலும் இலாபம் தரக்கூடியதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

◆ கேள்வி:- இயந்திரத்தினால் நெல் அறுவடை மேற்கொள்வதும் சூடுமிதிப்பதும் கூலியாள்கள் மத்தியில் எத்தகைய மனநிலையை உருவாக்கும்.

❐பதில்:-கூலித்தொழிலாளர் சிலருக்கு இது மனக்கசப்பை உருவாக்கினாலும் அவர்களும் இனிவருங்காலங்களில் தாமும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள இது உந்துசக்தியாக அமையும்.

உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இந்தத் தொழில் நுட்பம் வழிவகுக்கும். விவசாயிகளுக்கும் நாம் உதவி புரியவேண்டும். இலகுவான தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிந்து அதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் ஏறத்தாழ 12 ஆயிரம் ஹெக்டெயர் நிலத்தில் 2004 - 2005 ஆம் ஆண்டு பெரும்போகத்தின்போது நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

## வன்னி வேளான் தொழில் நுட்ப நிறுவனத்தின் முன்னுதாரணமான பணி

◆ கேள்வி:- இந்த வருடம் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு நெல் விளைவை எதிர்பார்க்கின்றீர்கள்?

❐ பதில்:- இம்முறை 50ஆயிரம் மெற்றிக் தொன் நெல் எங்களுக்கு விளைவாகக் கிடைக்க



நெல் அறுவடை செய்து சூடுமிதித்து பொதிசெய்யும் நவீன இயந்திரம்.

வுள்ளது. கிட்டத்தட்ட 5ஆயிரம் லொறி லோட் நெல் உற்பத்தி கிடைக்குமென நம்புகின்றோம்.

இதில் 40 வீதமான நெல் எமது மக்களுக்கு உணவு மற்றும் விதை நெல் போன்ற தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கும். மிகுதி 60 வீதமான நெல்லை நாங்கள் சந்தைப்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

◆ கேள்வி:-அரசினால் உங்களுக்கு நெல் கொள்வனவுக்காகக் கொடுப்பனவு எதுவும் தரப்பட்டுள்ளதா?

❐பதில்:- ஆம், அரசு நெல் கொள்வனவுக்கென 10மில்லியன் ரூபாவைத் தந்துள்ளது. நாம் நெல் கொள்வனவை மேற்கொள்ளுமாறு இந்தப் பணத்தைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏனைய ஸ்தாபனங்களுக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கின்றோம். இன்னும் 50 மில்லியன் ரூபா பணத்தினை அரசிடம் கேட்டிருக்கின்றோம். திறைசேரி கொள்கையளவில் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. பணம் கிடைத்தவுடன் நாம் நெல்லை கொள்வனவு செய்வோம்.

◆ கேள்வி: நெல் கொள்வனவுக்கான விலையை அரசு அறிவித்துள்ளது. நீங்கள் நெல்லை என்ன விலையில் விவாயிகளிடமிருந்து கொள்வனவு செய்கின்றீர்கள்?

❐பதில்: ஆம், அரசு அறிவித்த விலையில் நெல்லை நாம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஏனைய ஸ்தாபனங்கள் மூலம் கொள்வனவு செய்கின்றோம்.

இந்த வருடம், நாங்கள் 60 மில்லியன் ரூபாவைக் கேட்டிருக்கின்றோம் (நெல் கொள்வனவிற்காக) இந்த வருடம் காலநிலை சீர்கேட்டால் நெல் உற்பத்தி பி[illegible]ய காரணத்தினாலும் விவசாயிகள் டிசெம்பர், ஜனவரி மாதங்களிலும் நெல் விதப்பை மேற்கொண்ட காரணத்தினாலும் அறுவடை ஒரே சீராக இல்லை.

பிந்திய நெல் உற்பத்திகளில் பூச்சி நோய்த் தாக்கம் ஏற்பட்டிருந்தபோது, விவசாயத் திணைக்கள அதிகாரிகள் முழுமையாகச் செயற்பட்டு இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

◆ கேள்வி: மன்னார் மாவட்டத்தில் சுனா



மிப் பேரலையின் தாக்கம் எவ்வாறு இருந்தது?

❐பதில்: தெய்வாதீனமாக கடலின் நடுவில் எமது மாவட்டம் இருந்தபோதும் பாரிய தாக்கம் எதுவும் ஏற்படவில்லை. எமது மாவட்டத்தின் தீவுப் பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் பேர் வரையில் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்திருந்தனர். இவர்களுக்குச் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன. இருந்தபோதும் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்த மீனவர்களின் வலைகள் கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டதாக சம்பந்தப்பட்ட மீனவர்கள் முறைபாடு செய்துள்ளனர். இதுபற்றி நாம் சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு அறிவித்துள்ளோம். பதில் வரும் பட்சத்தில் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வோம்.

◆ கேள்வி: 2005ஆம் ஆண்டு சிறுபோக நெல் உற்பத்தியை எவ்வளவு நிலப்பரப்பில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளீர்கள்?

❐பதில் விவசாயத் திணைக்களத்தின் அபிப்பிராயப்படி மன்னார் மாவட்டத்தில் இரண்டாயிரம் ஹெக்டெயர் நிலத்தில் சிறுபோக நெல் உற்பத்தி மேற்கொள்வதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளத்தில் தற்போது சிறுபோக நெற்செய்கைக்கென நீரைத் தேக்கி வைத்துள்ளோம்.

கடந்த வருடம் நியாப் I திட்டத்தின் கீழ் கட்டுக்கரைக் குளத்தில் பெரும் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டதன் காரணமாக நீரைத் தேக்கிவைக்கக் கூடியதாக இருந்தது.

இந்த வருடமும் நியாப் II திட்டத்தின் கீழ கட்டுக்கரைக்குளத்தின் அபிவிருத்திக்கென 200 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. இத்துடன் நியாப் 2 திட்டத்தின் கீழ், கட்டுக்கரைக்குளம் மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள குளங்கள், தூரிசுகள் என்பவற்றைப் புனரமைக்க இந்த வருடம் 600 மில்லியன் ரூபாவைத் தருவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**செவ்வி கண்டவர்:**
**மு.கந்தசாமி**
***(பரந்தன் செய்தியாளர்)***

இவ்வேலைத்திட்டங்களின் மூலம் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்துக் குளங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்கினை நாம் செய்யவுள்ளோம். ★

---

# சுனாமி பாதித்த முல்லை மக்களுக்கு ஆற்றுப்படுத்தல் இன்று அவசிய தேவை

கொடிய யுத்தத்தினால் தமிழ்மக்கள் நாடிழந்து சொத்துக்களை உறவுகளை இழந்து, தமது வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பப் பட்ட துயரம் இன்னமும் மாறவில்லை. சுனாமிப் பேரலை மக்களின் மனங்களை உலுக்கிச் சென்று நேற்றுடன் மூன்று மாதங்கள் முடிவடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியமர்வு, நிவாரணம், வாழ்வியற் கட்டுமானங்கள் குறித்து இன்று பல்வேறு தரப்பினாலும் சிந்திக்கப்பட்டு வருகின்றது.ஆங்காங்கே இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு அவர்களது வாழ்வியலைக் கட்டியெழுப்பும் திட்டங்கள் பற்றிப் பேசப்படுகின்றது.




தமிழர் தாயகப் பிரதேசத்தில் முல்லைத் தீவு ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்து, இன்று மயான பூமியாய் காட்சி தருகிறது. இங்கும், புனர் நிர்மாணப் பணிகள் நடை பெறுகின்றன. மனித வளங்களைப் பற்றியும் பேசப்படுகின்றது இவை யாவும் எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது குறித்து ஆராய்கிறது இந்தக்கட்டுரை.

நாம் எங்கு குடியமர்வது எப்படி நமது பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவது, எதிர்காலம் பற்றிய கனவுகளை நிச்சயப்படுத்துவது எப்படி என தமது மனங்களை ரணகளமாக்கும் உள்ளங்கள் தான் இங்கு அநேகம்.

ஒரு மீனவத் தொழிலாளி கூறுகையில்- "என்ர பிள்ளையள், மனைவி உடன்பிறப்புக்கள், பெற்றதாய், தந்தை என எல்லோரையும் இழந்து தனிமனிதனாக நிற்கின்றேன். யாருக்காக நான் வாழவேண்டும்? உழைக்கவேணும்" என்கிறார்.

இவ்வாறுதான் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்றி தமது வாழ்வை இருட்டறைக்குள் நடத்துகின்றனர்.

இவர்களது வாழ்வாதாரங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால், முதலில் இவர்களது மனங்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். "சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்". எனவே, முதலில் தனி மனிதனின் முக்கியத்துவம் உணர்த்தப்படவேண்டும்.

தமது கவலைகளையும், துயரங்களையும் தம்முள்ளே பூட்டிவைத்து புழுங்குவதனால் நாளடைவில இங்கு மன நோயாளிகளின் எண்ணிக்கை உழைப்பாளிகளின் எண்ணிக்கையை விட அதிகரித்துவிடும் சாத்தியம் உள்ளது.

எனவே, இவர்கள் பழைய மனிதர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டுமானால் அவர்களுக்கான பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, பொழுதுபோக்கு மேம்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் இவர்களது முக்கியத்தும் உணரப்படுத்தப்படுவதோடு அவர்களை தேச நிர்மாணத்தின் பங்காளிகளாகவும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

**இ. தனபாலசிங்கம்**
***(ஒட்டிசுட்டான் செய்தியாளர்)***

மனித வளத்தை மன இருட்டறைக்குள் பூட்டிவைத்து எதிர்காலம் பற்றிய கனவுகள் சிதைந்து போகாமல் நாமும் கைகொடுத்து எம்முள் ஒருவராய் அவர்களை மாற்றுவோம். ★

# வடகொரியா பிடிவாதத்தைக் கைவிட்டு 6–நாடுகள் மாநாட்டுக்குத் திரும்புமா?

**அணு** ஆயுதங்கள் உலகில் மேலும் பலநாடுகளில் பரவாமல் இருக்கச் செய்வதற்கு அமெரிக்கா பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொண்டு வரும் அதேவேளை, அதன் நடைமுறைகளை ஏற்றுகொள்ளாத வடகொரியா, ஈரான் போன்ற நாடுகள் தங்கள் முயற்சியைக் கைவிடப்போவதில்லையென்று விடாப்பிடியாக இருந்துவருகின்றன.

அமெரிக்காவின் 'பெரிய அண்ணன்' (Big brother) போக்கு இந்த நாடுகளை வெகுவாகச் சினம்கொள்ளச் செய்துள்ளன.

தன் கையிருப்பில் தாராளமாக அணு ஆயு




தங்களைப் பொதி பொதியாகத் தயாரித்து வைத்துக்கொண்டு ஏனைய நாடுகளை, குறிப்பாக வளரும் அல்லது பின்தங்கியுள்ள நாடுகளை வெருட்டுவது நியாயமா என்று இந்த நாடுகள் கேட்கத் தொடங்கியிருக்கின்றன.

என்றாலும் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு இந்த நாடுகள் தெரிவிக்கும் நியாயங்கள்தான் விசித்திரமாகத் தெரிகின்றன.

வடகொரியா தனது பாதுகாப்புக்காகவே அணுகுண்டைத் தயாரிப்பதாகக் கூறிக் கொள்கின்றது.

பில் ஆழ்த்தியது. இந்தநிலையில், அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் இயற்கையாகவே எரிச்சலும், ஆத்திரமும் அடைந்துள்ளன. இது வடகொரியா எதிர்பார்த்த ஒரு நிலைதான்.

இது வடகொரியா மீதான நம்பகத் தன்மையைக் குறைக்கும் என்பதை அதுகருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. அணு ஆயுதம் தயாரிக்கவில்லையென்று அறிவிப்பதும் பிறகு அணுகுண்டு தயாரித்து விட்டதாக அறிவிப்பதும் அந்நாட்டின் போக்கில் சர்வதேசக் கருத்துக்களைத் திசைதிருப்பி விடக்கூடும். அதன் எதிரி நாடுகளின் நிலைப்பாட்டை நியாயப்படுத்த உதவும்.

தனித்துச் செயற்படுவதென்பது இன்றைய

தளர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை அமெரிக்கா எதிர்க்கவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1989ஆம் ஆண்டு சீனத் தலைநகரில்தியனன் மென் சதுக்கத்தில் நடந்த ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டத்தைச் சீன அதிகாரிகள் இரும்புக் கரங்கொண்டு நசுக்கி இரத்தக்களரியை ஏற்படுத்தியதையடுத்து ஐரோப்பிய நாடுகள் தமது நவீன ரக ஆயுதங்களைச் சீனாவுக்கு விற்பனை செயவதை நிறுத்திவிட்டன. சீனா மீதான ஆயுத விற்பனைத் தடையை நீக்க வேண்டும் என்பதில் பிரான்ஸும் ஜேர்மனியும் அக்கறை கொணடுள்ளன.

இது தொடர்பாகப் பிரஸல்ஸில் இடம்பெற்ற

கள் தாம் சொன்னபடி ஆட்டிப் படைக்கப் பார்க்கிறார்கள்.

இந்தநிலையில், ஐ.நாவில் சிலபல சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பது குறித்து தற்போதைய செயலாளர் நாயகம் கொபிஅனான் ஒரு விரிவான நகல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இதில் பிரதானமாகத் தற்பொழுது 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ள பாதுகாப்புச்சபையை 24 உறுப்பினர் சபையாக மாற்றவேண்டும் என்பதாகும். இதில் எத்தனை நாடுகளுக்கு 'வீட்டோ' அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்பது பற்றி அவர் ஏதும் தெரிவித்திருப்பதாகத் தெரியவில்லை. ஐ.நா. சபையில் பாரிய சீர்திருத்தங்கள் செய்

## அந்நாடு அமெரிக்க நெருக்குதலால் பொருளாதாரத் தடையை எதிர்நோக்கும் ஆபத்து

உலகில் எந்த நாட்டுக்கும் உகந்த காரியமாக இருக்கமுடியாது. எனவே, வடகொரியா மீண்டும் 6 நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்டு தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வது அவசியம்.

**கொண்டலிஸா எச்சரிக்கை**

அண்மையில் பேஜிங்கிற்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் இதைத்தான் வற்புறுத்தியிருந்தார். வடகொரியா தொடர்ந்தும் பிடிவாதம் காட்டி வருமானால் அமெரிக்கா வேறு செயற்பாடுகள் பற்றி ஆலோசிக்க வேண்டியிருக்கும் என்று அவர் கூறியிருந்தார்.

மாநாட்டில் ஆராயப்பட்டது. அதற்கு முன்பே அமெரிக்க ராஜாங்க அமைச்சர் விடுத்த எச்சரிக்கையில், "ஆஸியாவில் சமபல நிலையை சீர்குலைக்கும் வகையில் நேசநாடுகள் எதுவும் செய்து விடக்கூடாது என்று தெரிவித்திருநதார்.

தாய்வான் தனிநாட்டுப் பிரகடனம் செய்யுமானால், அதன் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அதிகாரமளிக்கும் சட்டம் ஒன்று அண்மையில் பேஜிங் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து அமெரிக்கா ஆத்திரமடைந்துள்ளது. பிரிட்டனும் தனது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்துவருகின்றது.

சீனாவுக்கான ஆயுத ஏற்றுமதித் தடையை நீக்குவதற்குப் பிரான்ஸ் அதிபர் ஜெக்ஸ் சிராக முன்னின்று உழைத்துவருகிறார். ஐரோப்பிய யூனியனுக்கும் சீனாவுக்குமிடையிலான உறவு

யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் கொபி அனான், அவர்கள் இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா. சபையில் நடைபெறவிருக்கும் உலக நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னர் உறுப்புநாடுகள் இந்தச் சீர்திருத்தங்கள் பற்றிய ஒருமித்த கருத்துக்கு வந்துவிடவேண்டும் என்று கேட்டுள்ளார். அனானின் பதவிக்காலம் 2006ஆம் ஆண்டு முடிவடையவிருக்கிறது. அதற்குமுன் இந்தச் சீர்திருத்தங்களை நிறைவேற்றி விடுவதில் அவர் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அனான் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக பயங்கரவாதம் தொடர்பான ஐ.நாவின் செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதம் என்பதற்கு ஒரு வரைவிலக்கணம் இருக்கவேண்டும் என்று தமது அறிக்கையில் தெரிவித்துள்ள கொபிஅனான், அத

## ஐ.நா.வில் சீர்திருத்தம் தேவை கொபி அனான் இதில் ஆர்வம்

அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு முறையில் அமெரிக்காவுக்கு நேர்மாறாக விளங்கும் இந்நாட்டுத் தலைவர்கள், அமெரிக்காவிடமிருந்து எந்த வேளையிலும் ஆபத்து விளையலாம் என்று அஞ்சுவது நியாயமாக இருக்கலாம். அதற்காக அணுகுண்டைத் தயாரித்து அமெரிக்காவை அச்சுறுத்த முடியும் என்று கருத முடியாது. ஏனென்றால், அப்படியான ஒரு யுத்தம் ஏற்படுமானால் வடகொரியாவுக்கே பலத்த சேதம் ஏறபட வாய்ப்பு உண்டு. அமெரிக்காவிடமும் அதன் நேசநாடுகளிடமும் இருக்கும் அணு ஆயுதங்களுக்குச் சமமான அளவு குண்டுகளைத தயாரித்து சமபலத்தைப் பேணுவது என்பது முயற்கொம்பாகவே முடியும்.

இருந்தாலும் வடகொரியா ஓர் இறைமையுள்ள தனிநாடு என்றவகையில் தன் கௌரவத்தையும் தனித்துவத்தையும் காப்பாற்றிக் கொள்ள முயல்வதில் எந்தத் தவறும் இல்லை.

எனவேதான், பழைய 'பனிப்போர்' பாணியில் பகைமைப் போக்கினை வடகொரியா கைவிட்டு, அதன் நேச நாடான சீனாவின் அனுசரணையில் மீண்டும் 6 தரப்புப் பேச்சு மேசைக்குத் திரும்புவது பற்றி ஆலோசிப்பது உசிதமாகவிருக்கும். பகைமைப் போக்கும் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சியும் சிறிய நாடுகளின் வளர்ச்

வடகொரியா மீதான பொருளாதாரத்தடையை ஐ.நா.மூலம் ஏற்படுத்துவதையே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும். இராணுவ ரீதியில் நடவடிக்கை எடுப்பது பற்றி இப்போதைக்கு அமெரிக்கா ஆலோசிக்கும் என்று கூறமுடியாது.

ஆறுநாடுகள் மாநாட்டை வடகொரியா தொடர்ந்து பகிஷ்கரித்துவருமானால் அமெரிக்கா என்ன செய்யும் என்று கேட்கப்பட்டபோது கொண்டலிஸா அம்மையார் பின்வருமாறு பதில் கூறினார்.

"அப்படியானால் நிச்சயமாக நாங்கள் வேறு செயற்பாடுகள் பற்றி ஆலோசிக்க வேண்டியிருக்கும். சர்வதேச அமைப்பில் வேறு தெரிவுசெயயககூடிய மாற்றுத் திட்டங்களும் உண்டு என பதை எவரும் அறிவார்கள்" என்று.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அவர்களுக்கு ஒரு பிரச்சினை இருந்தால், அவர்கள் தொடர்ந்தும கீழ்நோக்கியே போய்க் கொண்டிருந்தால், அமெரிக்காவோடு மட்டுமல்ல, ஜப்பான், வடகொரியா, சீனா, ரஷ்யா மற்றும் உலகின் எல்லா நாடுகளோடும் அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படத்தான் போகின்றது" என்று கூறினார்.

வடகொரியா மீது சர்வதேச மட்டத்தில் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவருவதற்கு



பிரஸல்ஸில் இடம்பெற்ற ஐரோப்பிய உச்சி மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் (இடது), ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவர் ஜோசப் பொரெல் (நடுவில்), பிரெஞ்சு அதிபர் ஜெக்ஸ் சிராக் (வலது) ஆகியோர் உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

## சீனா மீதான ஆயுதத்தடையை நீக்குவதிலும் சிக்கல்

சியைப் பெரிதும் பாதிக்கவே செய்யும். போர் முனைப்பானது குறித்த நாடுகளின் அரசியல் தத்துவார்த்தப் போக்கில் உலகநாடுகள் மத்தியில் சந்தேகத்தையும் வெறுப்பையுமே கொணடுவரும்.

வடகொரியாவின் அணு ஆயுதத் தயாரிப்பு விடயம் தொடர்பான 6 நாடுகள் மாநாட்டை நடத்துவதற்குச் சீனா எப்போதுமே விருப்பம் கொண்டிருக்கிறது. இதனை நல்ல முறையில் வடகொரியா பயன்படுத்திக்கொள்ள முயல வேண்டும்.

ஆரம்பத்தில் அணு மின் உலைகளையே வடகொரியா நிர்மாணிப்பதாகக் கூறப்பட்டது. பின்னர் இந்த உலைகளில பயன்படுத்தப்பட்ட யுரேனியத்தைச் செறிவூட்டி அணு ஆயுதத்தயாரிப்புக்கு ஆயத்தப்படுத்துவதாக அமெரிக்கா சந்தேகம் கொள்ளத் தொடங்கியது. இதனால் ஏற்பட்ட பிரச்சினை இருதரப்பு நெருக்கடியாகவும் சர்வதேசக் கவலையாகவும் மாறியது.

இதன் பேரில் ஏற்பட்ட ஆறுநாடுகள் பேச்சுக்களில் முதலில் விருப்புடன் கலந்துகொண்ட வடகொரியா, பின்னர் திடீரென பின்வாங்கிக் கொண்டது. அத்துடன், தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக வேறு அறிவித்து உலகத்தை வியப்

அமெரிக்கா ஆலோசிக்கிறது என்பதையே கொண்டலிஸா இவ்வாறு கூறியிருக்கிறார் - என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

**புஷ் நிர்வாகம் சீனாவுக்குக் கண்டனம்**

தாய்வான் பிரிந்து செல்வதைத் தடுக்க எதிரான சட்டம் ஒன்று சீன நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதை அமெரிக்கப் புஷ் நிர்வாகம் கண்டித்துள்ளது. தாய்வான் பிரிந்துசெல்லத் தீர்மானிக்குமானால் அதன் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதை அனுமதிப்பதாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

இது மிகவும் துரதிர்ஷ்ட வசமானது; உறவுகளைச் சீர்குலைக்கும் தன்மை கொண்டது என்று புஷ் நிர்வாகம் வர்ணித்துள்ளது.

தாய்வானின் எதிர்காலத்தை அமைதியான முறையிலன்றி வேறு எந்தமுறையில் தீர்மானிக்கப்படுவதையும் அமெரிக்கா எதிர்க்கும் என்று வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

**ஆயுதத் தடையைத் தளர்த்த எதிர்ப்பு**

சீனாவுக்கு ஆயுதம் விற்பனை செய்வது மீதான ஐரோப்பிய நாடுகளின் தடையைத்

களைப் பலப்படுத்துவதிலும் அவர் அக்கறை கொண்டுள்ளார். இவ்வருடம் ஜூன் மாதமளவில் இந்தத் தடை நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கிடையில், ஐரோப்பிய யூனியனின் ஆயுதத் தடையை நீக்கும் விடயம் தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில் -

தனிநாட்டுப் பிரிவினையைத் தடுக்கும் சட்டத்துக்கும் ஆயுத ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று கூறியுள்ளார்.

✪✪✪

**பாதுகாப்புச் சபையின் விஸ்தரிப்புப் பற்றி அனான் அறிக்கை**

உலக விவகாரங்களில் ஐ.நா.சபை இன்னும் முனைப்பாகவும் உழைப்பாகவும் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து.

பல்வேறுபட்ட அரசமைப்பு முறைகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பையும் உறவுகளையும் பேணுவதில் ஐ.நா. பெரும் பணியாற்றி வந்தபோதிலும் சிலபல சமயங்களில் பலமும் பணமும் படைத்த நாடுகள் ஐ.நா.சபையொன்று இருப்பதையே மறந்து செயற்படுவதைப் பார்க்கின்றோம்.

அரசுகளை உள்ளூர் சண்டியர்கள் தம் வசப்படுத்திக்கொள்வதுபோல் இந்த உலக சபையையும் கூடச் சில சர்வதேசச் சண்டியர்

னைச் சபையுடன் விரிவானதோர் உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்கின்றார்.

✪✪✪

**சிரியா, அமெரிக்கா பின்பற்றுமா?**

லெபனானிலிருந்து சிரியா துருப்புகளை வெளியேறும்படி அமெரிக்கா வற்புறுத்தி வருகிறதல்லவா, அதேபோல் அமெரிக்காவும் தான ஆக்கிரமித்துள்ள நாடுகளிலிருந்து வெளியேறுமா என்று சிரிய அதிகாரி ஒருவர் கேட்டுள்ளார்.

வாஷிங்ரனில் சிரியாத் தூதுவராகவுள்ள முஸ்தபா என்பவர் ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகத்தில் உரைநிகழ்த்தியபோது, நாங்கள் மிக விரைவில் லெபனானிலிருந்து வெளியேறிவிடுவோம். அதேபோல் ஈராக், பலஸ்தீனம், ஏன் சிரியாவிலிருந்தும் கூட அங்கு ஆக்கிரமித்துள்ள நாடுகள் வெளியேறி முன் உதாரணம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என்று கூறினார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் மத்திய கிழக்கில் தாங்கள் ஆக்கிரமித்துள்ள நாடுகளிலிருந்து வெளியேறவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார் அவர் மேலும் கூறியதாவது:-

அரபு உலகுக்கு உதாரணமாகத் திகழும் வகையில் ஈராக் வடிவமைக்கப்படும் என்று அதிபர் புஷ் கூறிவருகிறார். இப்பொழுது சிரியாவின் முன்மாதிரியை அமெரிக்கா பின்பற்றுமானால், அரபு உலகம் மிகவும் மகிழ்ச்சியடையும் என்று குறிப்பிட்டார். ❒

# புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பாடசாலைகள் கோட்டச் சம்பியன்கள்

புதுக்குடியிருப்பு,மார்ச்27

புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு றோ.க.த.க. வித்தியாலயமும் பெண்கள் பிரிவில் உடையார்கட்டு பாரதி மகா வித்தியாலயமும் இவ்வருடத்திற்கான கோட்ட மட்டச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த 23 ஆம் திகதி உடையார்கட்டு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகள் வருமாறு:-

**ஆண்கள்**

புதுக்குடியிருப்பு றோ.க.தமிழ்க்கலவன் பாடசாலை, உடையார்கட்டு பாரதி ம.வி., புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**பெண்கள்**

உடையார்கட்டு பாரதி ம.வி., புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வல்லிபுனம் கனிஷ்ட வித்தியாலயம். இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 7 பாடசாலைகளும் பெண்கள் பிரிவில் 9 பாடசாலைகளும் பங்குபற்றின.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுகின்றன. (3-353-203-202)

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்; மூன்று முக்கிய ஆட்டங்கள் இன்று!

யாழ்ப்பாணம்,மார்ச்27

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காகத் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்று முக்கிய ஆட்டங்கள் இன்று இடம்பெறவுள்ளன.

உதயன் ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இந்த ஆட்டங்கள் ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்த ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி -யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த சென்.நீக்லஸ் வி.க. எதிர் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த டயானா வி.க.

★ பிற்பகல் 4.30 மணி - வலிகாமம் லீககைச் சேர்ந்த ரெட்ரேஞ்சஸ் வி.க. எதிர் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த வளர்மதி வி.க.

★ மாலை 5.30 மணி - தென்மராட்சி வி.க. எதிர் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக வி.க. (3-86-190-203)

# கரவெட்டிப் பிரதேச விளையாட்டுப் போட்டியில் மனோகரா நான்கு போட்டிகளில் முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில நான்கு போட்டிகளில் மனோகரா விளையாட்டுக்கழகம் முதலிடம் பெற்றுள்ளது.

கழகங்களுக்கிடையே எல்லே, கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்களின் விவரம் வருமாறு:-

**எல்லே**

ஆண்கள் - மனோகரா வி.க., ஞானம்ஸ் வி.க.

பெண்கள் - மனோகரா வி.க., பொம்மஸ் வி.க.

**கிரிக்கெட்**

ஆண்கள் - வெக்ரர் வி.க., விபுலானந்தா வி.க., பெண்கள் - மனோகரா வி.க., பொம்மஸ் வி.க.

**வலைபந்தாட்டம்**

பெண்கள் - மனோகரா வி.க., பொம்மஸ் வி.க.

(3-190-203)

## யாழ்.பிரதேச செயலக விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்.பிரதேச செயலக 2005 ஆம் ஆண்டு விளையாட்டு விழாவிற்கான போட்டி ஒழுங்கமைத்தல் எதிர்வரும் 29ஆம் திகதி மாலை 3மணியளவில் யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு கழகங்களில் இருந்தும் இரண்டு பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளமாறு யாழ் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ.ரமணன் கேட்டுள்ளார்.

(3-190)

விளையாட்டு

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் யாழ். லீக்கைச் சேர்ந்த புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் இரு அணிகளும் முதல்பாதி ஆட்டத்தின் போது கோல்கள் எதனையும் பெறவில்லை. ஸ்கந்தா ஸ்ரார் அணிக்குக் கோல்களை அடிப்பதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இதனை நல்லமுறையில் பயன்படுத்த முன்னணி வீரர்கள் தவறிவிட்டார்கள். இலகுவாகவும் எதிர்ப்புகள் இன்றிக் கொண்டுவரப்பட்ட பந்துகளைக்கூட கோல்கம்பத்திற்கு வெளியாலும் கோல்காப்பாளரிடம் பிடிகொடுத்தும் அடித்தார்கள். இதேபோன்றே ஸ்ரீ விக்னேஸ்வரா அணியும் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது.

இரண்டாவது பாதி ஆட்டம் புதிய உத்வேகத்துடன் ஆரம்பமாகியது. இதிலும்கூட இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புக்களைத் தவறவிட்டபடியே இருந்தன.

ஸ்கந்தா ஸ்ரார் அணியைச் சேர்ந்த இடதுபக்க முன்னணி வீரர் சதீஸ் தட்டிக்கொடுத்த பந்தை கோல் கம்பத்திற்கு அருகில் ஓடிவந்து பெற்ற வலது பக்க முன்னணி வீரர் பிரதீபன் எதிரணியின் பின்னணி வீரர் ஒருவரை வெட்டி அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டார்.

உதயன் ஊடக அனுசரணை

இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் கோல்கள் பெறப் பல்வேறு யுத்திகளையும் பயன்படுத்த முயன்ற போதிலும் கோல்கள் பெறும் வாய்ப்புக்களைப் பெறமுடியவில்லை. ஆட்ட முடிவில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அராலி கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

மனோகரா விளையாட்டுக் கழகம் பல கோல்கள் பெறும் சந்தர்ப்பங்களைக் கைநழுவவிட்டது. முதல்பாதி ஆட்டத்தில் 3 கோல்களைப் பெற்ற நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது. முதல்கோலை வலதுபக்கப் பின்னணி வீரர்(Right Half) பிரேந்திரா முன்னணி வீரர் சசிகாந் தட்டிக்கொடுத்த பந்தை அடித்துத் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது கோலை முன்னணி வீரர் ராஜேஸ் தட்டி முன்நகர்த்திச் சென்று மத்தி முன்னணி வீரரிடம் எதிரணியைத் தவிர்த்துகொடுத்த பந்தை சசிகாந் அடித்து கோலாக்கிக் கொண்டார்.

முதலாவது கோலை இடதுபக்க முன்னணி வீரர் அனோஜன் கோல் கம்பத்திற்கு முன்னால் தூக்கி அடிக்க அதனைப் பெற்றுக்கொண்ட மத்தி முன்னணி வீரன் ராஜேஸ் கோல் கம்பத்தை நோக்கி அடித்துக் கோலைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டவாது பாதி ஆட்டத்தில் கலைவாணி அணியினர் தமக்குக் கிடைத்த சில சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறியபோதிலும் எதிரணியினர் கோல்கள் பெறுவதற்கான வாய்ப்புகளையும் தடுத்து நிறுத்தி விளையாடினார்கள். ஆனாலும், மனோகரா அணியினர் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் இரண்டு கோல்களைப் பெற்றுக்கொண்டனர்.

நான்காவது கோலை மனோகரா அணியினர் தமக்குக் கிடைத்த மூலை உதையொன்றை ராஜேஸ் கோல் கம்பத்துடன் அடிக்க இதனை சசிகாந் கோல் கம்பத்திற்கு முன்னால் நின்று பெற்றுக்கொண்டார்.

ஐந்தாவது கோலைப் பின்னணி வீரர் பவதரன் முன்னோக்கி அடித்த பந்தைப் பெற்றுக்கொண்ட ராஜேஸ் முன்நகர்த்திச் சென்று கோலை அடித்தார். ஆட்ட முடிவில் மனோகரா விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது. (ஐ-86)

# நல்லூர்ப் பிரதேச கரபந்தாட்டத்தில் அரியாலைக் கழகம் சம்பியனானது

யாழ்ப்பாணம்,மார்ச்27

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய வி.க. அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் சிவன்கோவில் மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய வி.க. அணியை எதிர்த்து ஜெட்லையினஸ் வி.க. மோதியது.

விறுவிறுப்பாக அமைந்த இந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய வி.க. அணியினர் இரு நேர் செற் கணக்கில் 25:10, 25:15 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்றனர்.

இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக அரியாலை ஐக்கிய வி.க. வீரர் துஷெந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தராக என்சாந்திகுமார், ரி.தயாளபவான் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டியை நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். விஜிதரன் நெறிப்படுத்தினார். (3-190)

## நல்லூர்ப் பிரதேச உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது என விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.விஜிதரன் தெரிவித்தார்.

(3-190)

# யாழ்.வலய மெய்வன்மை போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்.மார்ச்27

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப்போட்டிகளில் 11வயது, 13வயது, 15வயதுப் பிரிவுகளின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன.

17வயது, 19வயது (ஆண்கள்) பிரிவுகளின் முடிவுகள் வருமாறு:-

### 17வயதுப்பிரிவு

**ஆண்கள்**

100மீற்றர் - ரி.தர்ஷன் (சென்.ஜோண்ஸ்), ரி.பிறிஜேஸ் (சென்.பற்றிக்ஸ்), பீடயான் (யாழ். மத்தியகல்லூரி)

200மீற்றர் - ரி.பிறிஜேஸ் (சென்.பற்றிக்ஸ்), பீடயான் (யாழ்.மத்திய கல்லூரி), பி.லோகனாத் (சென்.பற்றிக்ஸ்).

400மீற்றர் - பீடயான் (யாழ்.மத்திய கல்லூரி), ஆர்.சேந்தன் (சென்.பற்றிக்ஸ்), கே.கஜந்தன் (சென்.ஜோன்ஸ்)

800மீற்றர்- ஜே.ஜெனோவிராஜ் (சென்.பற்றிக்ஸ்), ஜே.வியாசன் (யாழ். மத்திய கல்லூரி), அ.மைக்கல் அமல்சன் (நாவாந்துறை றோ.க)

1500 மீற்றர் - அ.மைக்கல் அமல்சன் (நாவாந்துறை றோ.க.ம.வி), எஸ்.டானியென்சன் (சென்.பற்றிக்ஸ்), ஜெ.வியாசன் (யாழ். மத்திய கல்லூரி)

குண்டெறிதல் - எஸ்.துஷியந்தன் (சென். ஜோன்ஸ்), எம்.மனோஜ் (சென்.பற்றிக்ஸ்), கே.கவின்தன் (யாழ்.மத்திய கல்லூரி)

தட்டெறிதல்- வி.சுரேந்திரன் (சென். பற்றிக்ஸ்), எம்.மயூரன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ். டானியன்ஷன் (சென்.பற்றிக்ஸ்)

ஈட்டியெறிதல் - வி.சுரேந்திரன் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.டானியன்ஷன் (சென்.பற்றிக்ஸ்), கே.பார்த்தீபன் (சென்.சாள்ஸ் ம.வி)

நீளம்பாய்தல் - ரி.தர்ஷன் (சென்.ஜோன்ஸ்), சு.பிருந்தாபன் (யாழ். வண்ணை நாவலர்), யூ. துவாரகன் (யாழ். மத்திய கல்லூரி)

உயரம்பாய்தல் - எம். மயூரன் (யாழ். மத்திய கல்லூரி, பீ.மயூரன் (சென்.பற்றிக்ஸ்), கே. திஷாந்தன் (சென்.பற்றிக்ஸ்).

முப்பாய்ச்சல் - கே.சாமிலன் (சென்.ஜோன்ஸ), கே.சுஜந்தன் (சென்.ஜோன்ஸ்), எம்.மக்ஸன் அருண் (சென்.பற்றிக்ஸ்).

4x100 அஞ்சல் - சென்.ஜோண்ஸ், சென். பற்றிக்ஸ், யாழ்.மத்திய கல்லூரி

4x400அஞ்சல்- சென்.ஜோன்ஸ், யாழ்.மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ்.

**பெண்கள்**

100 மீற்றர் - இ.வாகினி (வேம்படி), யோ. வினோதினி (வேம்படி), எப்.யூஜின் ஒஸ்ரீனா (திருக்குடும்ப கன்னியர் மடம்)

200மீற்றர் - இ.வாகினி (வேம்படி), யோ. வினோதா (வேம்படி), ஆர்.விக்ரோறியா (திருக்குடும்ப கன்னியர் மடம்)

400மீற்றர் - ரி.மதுரந்தி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எ.ஜனுஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எ.ஜெனிற் டிலானி (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி)

800மீற்றர் - வி.தயாளினி (சென்.சாள்ஸ் ம.வி), கி.நிரோஷா (சுண்டுக்குளி மகளிர்), எ.ஜெயதர்சினி (திருக்குடும்ப கன்னியர் மடம்)

1500மீற்றர் - ஜெ.சாளினி (வேம்படி), பி. மயூரதி (வேம்படி), எ.ஜெயதர்சினி (திருக்குடும்ப கன்னியர் மடம்)

நீளம் பாய்தல் - வி.கஜீத்தா (சுண்டுக்குளி மகளிர்), டே.நிலோஜினி (சென்.ஜேம்ஸ் ம.வி), எஸ்.சுதர்ஷினி (வேம்படி).

உயரம்பாய்தல் - வி.கஜித்தா (சுண்டுக்குளி மகளிர்), ஆர்.சனுஜா (திருக்குடும்ப கன்னியர் மடம்), அ.டிலானி சர்மிகா (வேம்படி).

தட்டெறிதல் - சி.காயத்திரி (சுண்டிக்குளி மகளிர்), தி.நஜனி (வேம்படி), தே.மதுரந்தி (சுண்டுக்குளி மகளிர்)

குண்டெறிதல் - தே.மதுரந்தி (சுண்டுக்குளி மகளிர்), மோ.மயூரி (சுண்டுக்குளி மகளிர்), கி.கிறிஸ்ரின்குருஸ் (நாவாந்துறை றோ.க.ம.வி), அ.நிரோஜா (புனித மரியாள் றோ.க).

ஈட்டியெறிதல் - தி.நஜனி (வேம்படி), ரி.சயந்திகா (சுண்டுக்குளி மகளிர்), எஸ்.காயத்திரி (சுண்டுக்குளி மகளிர்).

4x100 மீற்றர் அஞ்சல் - வேம்படி, சுண்டுக்குளி மகளிர், திருக்குடும்ப கன்னியர் மடம்.

4x400 மீற்றர் அஞ்சல் - வேம்படி, சுண்டுக்குளி மகளிர், திருக்குடும்ப கன்னியர்மடம்.

### 19வயதுப்பிரிவு

**ஆண்கள்**

100மீற்றர் - எஸ்.பிரசாத் (சென்.ஜோன்ஸ்), ஜீ.வாகீசன் (சென்.ஜோன்ஸ்), ரி.டிஷான் (சென். பற்றிக்ஸ்).

200மீற்றர் - எஸ்.பிரசாத் (சென்.ஜோன்ஸ்), ஜீ.வாகீசன் (சென்.ஜோன்ஸ்), எம்.அன்ரன் (சென்.சாள்ஸ் ம.வி).

400மீற்றர் - சி.விக்ரர் (சென்.பற்றிக்ஸ்), எம்.அன்ரனஸ் (சென்.சாள்ஸ் ம.வி), ரி.சிறிவரதராஜன் (யாழ். மத்திய கல்லூரி)

800மீற்றர் - சி.விக்ரர் (சென்.பற்றிக்ஸ்), எ.ஜெந்திரன் (சென்.பற்றிக்ஸ்), ரி.கவிராஜ் (யாழ். மத்திய கல்லூரி)

1500மீற்றர் - ரி.கவிராஜ் (யாழ். மத்திய கல்லூரி), சி.விக்ரர் (சென்.பற்றிக்ஸ்), ரி.பிரதீப் (சென்.பற்றிக்ஸ்).

குண்டெறிதல் - சி.அன்ரியோசாம்சன் (சென்.பற்றிக்ஸ்), ஜே.வி.ஜீவராஜ் (சென்.பற்றிக்ஸ்), எ.ராகவன் (சென்.ஜோன்ஸ்).

தட்டெறிதல்- சி.அன்ரியோ சாம்சன் (சென். பற்றிக்ஸ்), எ.கரேஸ் (சென்.ஜோன்ஸ்), ஜி. தினேசன் (சென்.ஜோன்ஸ்).

ஈட்டியெறிதல் - சி.அன்ரியோ சாம்சன் (சென்.பற்றிக்ஸ்), ஏ.ஜே.ஷயாளன் (சென்.சாள்ஸ் ம.வி), பி.பிமன்ஸ் (சென்.பற்றிக்ஸ்).

நீளம்பாய்தல் - டபிள்யூ.ஐ.ஐக்சன் (சென். பற்றிக்ஸ்), எ.கிருஸ்ணன் (சென்.ஜோன்ஸ்), ஜி.சஞ்ஜீவன் (சென்.ஜோன்ஸ்).

உயரம்பாய்தல் - ரி.ஞானகணேசன் (சென். ஜோனஸ்), எஸ்பிரசாத் (யாழ்.மத்திய கல்லூரி), எஸ்.சுகிர்தன் (யாழ். மத்திய கல்லூரி).

முப்பாய்ச்சல் - டபிள்யூ.ஐ.ஐக்சன் சென். பற்றிக்ஸ்), பி.ஆதவன் (சென்.பற்றிக்ஸ்), எ.கிரிஷாந் (சென்.ஜோன்ஸ்).

4x100 மீற்றர் அஞ்சல் - சென்.ஜோன்ஸ், சென்.பற்றிக்ஸ், யாழ்.மத்திய கல்லூரி

4x400 மீற்றர் அஞ்சல் - சென்.பற்றிக்ஸ் சென்.ஜோன்ஸ், யாழ்.மத்திய கல்லூரி.

(தொடரும்)

சிவமயம்

# மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில்
# வருடாந்த மஹோற்சவ கால
# அபிஷேக ஆராதனை விஞ்ஞாபனம்






விநாயகர் அடியார்களே!

வரலாற்றுப்பெருமைமிக்க மருதடி விநாயகர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனர்நிர்மாண வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் பங்குனி 16 ஆம் நாள் (29.03. 2005) செவ்வாய்க்கிழமை முதலாக விநாயகப்பெருமானுடைய மஹோற்சவ கால தினங்களை முன்னிட்டு எம்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் அனைவரும் இந்தத் தினங்களில் விநாயகப் பெருமானை வந்தித்து வணங்கிச் சிந்தித்து வழிபாடியற்றும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

29.03.2005 (பங்குனி 16) செவ்வாய்க்கிழமை முதல் தினமும் முற்பகல் 11.00 மணிக்கு விநாயகருக்கு விசேட அபிஷேகம் பகல் 12.00 மணிக்குப் பூஜை. மாலை 5.00 மணிக்குப் பூஜை.

13.04.2005 (பங்குனி 31) புதன்கிழமை முன்னிரவு 10.00 மணிக்கு வருடப்பிறப்பு சங்கிராந்தி அபிஷேகம். தொடர்ந்து 10.37 மணிக்கு பார்த்திப புதுவருடப் பிறப்பு விசேஷ பூஜை

**இந்த விழா நாள்களில்**

தினமும் மாலை 5.00 மணிக்கு நடைபெறும் பூஜையைத் தொடர்ந்து சர்வாலங்கார பூஜிதராக அலங்கரிக்கப் பெற்ற ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு வசந்த மண்டப பூஜையாகி–தொடர்ந்து

**செஞ்சொற்செல்வர்**
**ஆறு. திருமுருகன் அவர்களின்**
(உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
**'விநாயக புராணம்'**
**தெய்வீக சொற்பொழிவு**
**இடம்பெறும்.**

**தர்மகர்த்தா சபை,**
**மருதடி விநாயகர் ஆலயம்,**
**மானிப்பாய்.**



(43548)(52-14)


# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் கனகராஜா

(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர், காணி அபிவிருத்தித் திணைக்களம், கொக்குவில் கிராமசபை முன்னாள் உறுப்பினர்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு பொன்னையா லேனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகராஜா 24.03.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் (பூமணி) அன்புக் கணவரும் மஞ்சுளா(குஞ்சு), வசந்தி (ஆசிரியை, வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), சண்முகாதேவி, ஆனந்தகுமாரராசா (சுவிஸ்), சாந்தினி (சுவிஸ்), மாலினி (ஆசிரியை, வ/சீ.சீ.ரீ.எம். பாடசாலை), முகுந்தன் (சுவிஸ்), இராகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, கனகம்மா, பூரணம், சரஸ்வதி மற்றும் நடராசா (ஜேர்மனி), செல்லம்மா (ஜேர்மனி), ஐயாத்துரை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நவரட்ணராஜா, காந்தராஜா (ரெலிகொம், வவுனியா), பரமானந்தம் (இணுவில்), சூரியகலா (சுவிஸ்), பாலகுமார் (சுவிஸ்), தர்மானந்தசிவம் (I.S.A வவுனியா தெற்கு கல்விவலயம்), சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகந்தன், மயூரன் (ஜெனந்தன்), சுகிர்தா (இந்தியா), சுஜாதா, ஆதித்தன், திவாகர், சுதர்சன், பிரணவதாசன், சங்கீர்த்தன், கானப்பிரியா, நந்தகோபன், நிதர்சன் (சுவிஸ்), அனந்தா (சுவிஸ்), கார்மிகா (சுவிஸ்), ஞானப்பிரியா (சுவிஸ்), யதார்த்தன், நவீனன், நித்திலன், சுஜானி (சுவிஸ்) ஆகியோரின் ஆசைப் பேரனும் நிரோஜன் (இந்தியா), நிலக்ஷன் (இந்தியா), நிதுஜன் (இந்தியா) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2005) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பொன்னையா லேன்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
*T.P.077- 6156029*

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**செ.நவரத்தினராசா (மருமகன்).**

(சி.41839) (39-14-15)

## முன்னாள் அரச அதிபருக்கு இன்று பாராட்டுவிழா

வலி.மேற்கு,மார்ச்27

வலி.மேற்குப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கததின் ஏற்பாட்டில், முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபததில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது. (எ-175-202)

## சிறந்த பாடகர் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்27

அரியாலை 86ஆவது சுதேசிய விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தின் சிறந்த பாடகர், பாடகியைத் தெரிவுசெய்யும் திறந்த போட்டி நடைபெறவுள்ளது.

வயதுக் கட்டுப்பாடின்றி எவரும் பங்குபற்றக் கூடிய இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-202)

## அடையாள அட்டைகள் வந்தன

தென்மராட்சி, மார்ச் 27

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினருக்கான அடையாள அட்டைகள் தென்மராட்சிப் பிரதேச செயல[illegible]த்திற்கு வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(எ- 117)


## தவறி வீழ்ந்துவிட்டது

**மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு (இல. WPJQ 9421) அச்சுவேலிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பயணத்தின் போது தவறி வீழ்ந்துவிட்டது.**

**கண்டெடுத்தவர்கள் 021 2226139 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.**

(43555) (39-14-15)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல விடுதிக்கு உதவியாளர் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவராகவும் 40 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தொடர்பு: **யாழ் பயணிகள் விடுதி,**
**54, மணிக்கூண்டு வீதி,**
**(வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.**

## ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்குப் பின்வருவோர் தேவை
- விற்பனைப் பிரதிநிதி
- கணக்காளர்
- கூலியாள்கள்

உடனே நேரில் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
ஒஸ்மானியாக் கல்லூரி வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
T.P.: 4590008.

(43544)(42-14-15)

## பதவி வெற்றிடம்

பிரபல கம்பனி ஒன்றின் வர்த்தகப் பொருள்களை யாழ்.நகரில் இயங்கும பிரபல வர்த்தக நிறுவனமொன்றினூடாக முச்சக்கரவண்டியில் (3 Wheel Auto) சென்று விற்பனை செய்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமை: ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

வயது: **25-30**

உங்கள் விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு 01. 04. 2005 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. **2541**
**C/o. Uthayan**
யாழ்ப்பாணம்.

(43552)(42-14-15)

## அன்பு அதிபருக்கு நல்வாழ்த்துக்கள்

எமது அன்பிற்கும் பெரும் மதிப்பிற்கும்
உரியவரும் பாடசாலை
வளர்ச்சியையே தமது முழுநேரப்
பணியாகக் கொண்டு
செயற்படுபவருமாகிய



**செல்வி. பாக்கியலட்சுமி மார்க்கண்டு**
(அதிபர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)

அவர்கள் அகவை அறுபதை அடைந்ததையிட்டு அவரை மனமுவந்து வாழ்த்துவதுடன், அவர் மேலும் சிறப்புற்றுத் திகழ வாழ்த்தி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**குமரகோட்டம்,**
**கோண்டாவில்.**

வாழ்த்துவோர்:
**இ.சிவசுப்பிரமணியம், ந.சிவராசா, இ.இரத்தினதாசன், இ.தங்கவேல், இ.கணேசதாஸ், கு.ஜெயஈஸ்வரன், செ.தர்மலிங்கம், மு.அமிர்தலிங்கம், க.தளையசிங்கம், பொ.புஸ்பராஜா.**

(43549) (39-14-15)

## வேலை ஆள்கள் தேவை

முன்னணியில் திகழும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கீழ்க் காணும் பதவி நிலைகளுக்கு ஆள்கள் தேவை.

★ மின்சார இணைப்புப் பொருள்கள், PVC பைப் மற்றும் பொருத்திகள் விற்பனையாளர்.

★ T.V., றேடியோ பழுதுபார்ப்பவர்

☞ முன் அனுபவமுள்ளவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமையுள்ளவர்கள் நாளை (28.03.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நற்சான்றுப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

*தொடர்புகளுக்கு:*

**JAFFNA ELECTRICALS ABANS**

141, Power House Road, Jaffna.

T.P.: 222 5766.

(சி-41853)(16-18-30)


## நினைவுப்பேருரை அழைப்பு



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபரும் பேரறிஞருமாகிய அமரர் உயர்திரு. வி.சிவசுப்பிரமணியம் B.A., B.Sc., PGT, FRGS, J.P. அவர்களின்

### ஞாபகார்த்த நினைவுப் பேருரை

காலம்: நாளை (28.03.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி

இடம்: நூலக மண்டபம்

தலைவர்: திரு.க.சிவாஜி அவர்கள் (முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நிகழ்ச்சிகள்

மங்கள விளக்கேற்றல்: அமரரின் மைந்தன் Dr.எஸ். சிவானந்தராஜா அவர்கள் (பேரவை உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழகம்)

ஆசியுரை: கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A., P.R.D.

நினைவுப்பாமாலை: திரு.சி.சிவஞானராஜா (இசை ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நினைவுப்பேருரை: திரு.கே.கனகரட்ணம் B.Com. (Spl.), Dip. in Accy, M.Phil (Com.) S.A.T. (Srilanka) M.I.L.T (U.K.) Bursar, University of Jaffna.

விடயம் : மனித வாழ்வில் எண்ணங்களின் தாக்கம்.

நன்றியுரை : திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் (அதிபர், இராமநாதன் கல்லூரி, அமரரின் குடும்ப உறுப்பினர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம். (43568)(16-18-30)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பணி செய்துவரும் திரு.நாகலிங்கம தேவானந்தன் அவர்களின் பாசமிகு தந்தையாரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும் அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான

### அமரர் கிருஷ்ணா நாகலிங்கம்

அவர்கள் 23.02.2005 அன்று சிவபதமடைந்து, அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் 25.03.2005 அன்று அவரது வதிவிடமான தட்டாதெருச் சந்தியடி, யாழ்ப்பாணத்தில் பக்திபூர்வமாக நிகழ்வுற்றது.

*அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், கரவெட்டி.

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும். (சி41849)(16-18-30)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லதம்பி இரத்தினம்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி நல்லதம்பி இரத்தினம் அவர்கள் நேற்று (26.03.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, கருணாதேவி, யோகராசா (மணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சாந்தலிங்கம் மற்றும் இந்துமதியினதும் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2005) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைககாக சரவணை புன்னங்கண்டி மயானத்திற்கு பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சரவணை கிழக்கு, வேலணை.* (43557)(16-18-30)

தகவல்: ந.யோகராசா (மணி - மகன்).

### கதிர்காமு சந்திரலிங்கம்



கட்டப்பிராய், கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இல. 8/22, கற்குள ஒழுங்கை, கொட்டடி, யாழ்பபாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சந்திரலிங்கம் அவர்கள் நேற்று (26.03.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - சின்னாசசி தம்பதிகளின் புதல்வரும் முருகேசு - வரதநாயகியின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் (பத்மினி) அன்புக் கணவரும், சலூஜா, சைலஜா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மகாலிங்கம், மகேந்திரன், சின்னக்கிளி, சந்திரதேவி, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும இராஜநாயகம், ரவி, ரவிஞ்சன், ஜீவன், பிறேமசாந்தி, பிறேம ஜெயந்தி, றோகினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 8/22, கற்குள ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம்.* (43565)(16-18-30)

தகவல்: ஜெயச்சந்திரன் (சாரங்கா படமாடம்).


## விற்பனைக்கு

நல்ல விலையில் உள்ள வெஸ்பா Slect மொடல் 143 ஸ்ரீ ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட மோட்டார் சைககிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: M.கணேஸ்வாமி

இல.91, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (43570)(16-18-30)


## துயர் பகிர்கிறோம்

எமது நிறுவன ஆசிரியர் திரு.த.விக்கினேஸ்வரன் அவர்களின் பேர்த்தியார

திருமதி

### கணபதி தெய்வானை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், ஆளணியினர்.*

The Express Institute

(43564)(16-18-30) Irupalai, Kopay.


## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் (750) பிரதான வீதியில் சிறந்த சூழலில் மாலி சந்திக்கு அண்மையாக நல்ல தண்ணீருடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: T.P.: 0776629498. (43561)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: இல.396. கையிலாயபிள்ளையார் கோயிலடி. உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை. நாவலர் வீதி. யாழ்ப்பாணம். T.P.:0777 283795. (சி-41680)(29-16-17)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 - 747095 0776 - 258204

(சி-41585)(29-16-17)

## நிரஞ்சனாஸ் சங்கானை

சிம்பு (சிலம்பரசன்), ஜோதிகா நடித்த

### மன்மதன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

## நாதன்ஸ் சினிமா குளிரூட்டப்பட்டது — ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

விஜயகாந்த், சூசன், செந்தில் நடித்த

### நெறஞ்ச மனசு

கா.நேரம். 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

### லண்டன்

இயக்கம்: சுந்தர் C (ரீல்ஸ்)

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சூர்யா, ஜோதிகா நடித்த

### மாயாவி

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே.) (ரீல்ஸ்)

## மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்திபன, காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த

### கண்ணாடி பூக்கள்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (ரீல்ஸ்)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிதம்பரம்

(மூத்த உறுப்பினர், புதிய ஜனநாயகக்கட்சி)

காங்கேசன்துறை பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரம் நேற்று (26.03.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும் சரஸ்வதி, செல்வராசா (முன்னாள் அலுவலர், கா.ச.கூ), கலாவதி, பூலோகநாதன் (கனடா), சுமதிதேவி, காலஞ்சென்ற வரதராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகேசு (ஓய்வுபெற்ற ஆசிரியஆலோசகர்), செலவராணி, காலஞ்சென்ற கருணாநந்தசிவம் (ஆசிரியர்), இரங்கநாயகி (கனடா), விஜயகுமார் (பளை, காவல்துறைப் பொறுப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2005) ஞாயிற்றுக் கிழமை நண்பகலளவில் 20, துர்க்கா வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைககாக ஆனந்தபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில்வீதி, மானிப்பாய்.* (43564)(16-18-30)

தகவல்: வ.முருகேசு (மருமகன்).

### பத்மநாதன் மனைப்புலி இராமலிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் மனைப்புலி இராமலிங்கம் அவர்கள் 25.03.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசலக்ஷ்மியின் அன்புக் கணவரும் மகிந்தா (கனடா), றம்யா (கனடா), கபிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவாஜினி, நாகேந்திரன், ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன், கிருஷார், திரிசால ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி (பாட்டி) தம்பதியினரின் அன்பு மகனும் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை - பூரணம் தம்பதியினரின் மருமகனும் செந்திநாதன் (அமெரிக்கா), நல்லநாதன் (கனடா), காலஞ்சென்ற இராணிபத்மாவதியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று மாலை 5 மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: திருமதி இராஜேஸ்வரி இராமலிங்கம் (தாயார்)

651, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

***205, A/A1, Allen Avenue, Dehiwala. T.P.: 0785668293.*** (43563)(16-18-30)

### திருமதி இந்திராணி இரத்தினசபாபதி (மானிப்பாய்)

தாவடி வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 23 1/1, ரட்ணாகர பிளேஸ், தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி இந்திராணி இரத்தினசபாபதி நேற்று (26.03.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பையா - பொன்னு தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற பாலவிநாயகம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் ஜெயசீலன், புனிதவதி, இரத்தினசீலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணகுமார், சசிலேகா, கீதாஞ்சலி ஆகியோரின் மாமியாரும் ஜனகன், பிரணவன், உமா, காயத்திரி, சிவாஞ்சலி, துவாகினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மகிழ்மலர், ஜெயராஜா, பத்மராணி, ராஜேஸ்வரி மற்றும் நவரத்தினம், அரியமணி (பேபி), தவராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கனகசபாபதி, காலஞ்சென்ற மாணிக்கசபாபதி மற்றும் செல்வராணி, யோகராசா, நாகேந்திரம், கனகசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.03.2005) ஞாயிற்றுக்கிழமை 591, காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை பொதுமாயனத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: கிருஷ்ணகுமார் (மருமகன்), இரத்தினசீலன் (கண்ணன் - மகன்), தொலைபேசி இல. 2734471

(சி418434)(16-18-30)

### திருமதி கனகசபாபதி குணபூஷனி அம்மாள்



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி குணபூஷனி அம்மாள் அவர்கள் 25.03.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இணுவிலைச் சேர்ந்த சிவசம்பு - சின்னத்தங்கம் தம்பதிகளின மருமகளும் சிவசம்பு கனகசபாபதி (இளைப்பாறிய சுங்கத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும் கௌரி (லண்டன்), அருந்ததி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணேசு, செல்லையா, செல்லாபரணம், சரஸ்வதி மற்றும் சோதிப்பெருமாள், பராசத்தி ஆகியோரின் மைத்துனியும் ஆனந்தீஸ்வரன் (லண்டன்), கைலாயநாதன் (சிவசம்பு களஞ்சியம்), இலட்சுமணநாதன் (சிவசம்பு களஞ்சியம்), கார்த்திகேசு - புவனேஸ்வரி, கணேசநாதன் - தனலஷ்சுமி, சண்முகநாதன் - பூலோகநாயகி, தேவபாலன் - மகேஸ்வரி (லண்டன்), சச்சிதானந்தன் - தேவி, நித்தியானந்தன் - உலகநாயகி, காசிநாதன - மனோன்மணி, விவேகானந்தன் - றஞ்சிதமலர் (சுவிஸ்), செல்வராஜா - கௌசலாதேவி, கணேஸ், லோகநாதன், சோமநாதன், பரமானந்தராசா - புவனேஸ்வரி, புவிராஜசிங்கம் - ஜெயந்தி, சதானந்தன் - மீனலோஜினி, தபானந்தன் - சந்திரலோஜினி, ஸ்ரீஸ்கந்தராசா - சுகந்தி ஆகியோரின் மாமியாரும் ஜெயந்தன் (லண்டன்), நிஷாந்தன் கனகசபாபதி (லண்டன்), பிரியதர்சினி, சிவதர்சன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2005) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 23, சாந்தி நிகேதன், அம்மன் வீதி, கந்தர்மடம்.*

தகவல்: சிவசம்பு - கனகசபாபதி. (43572)(16-18-30)

# மே மாதம் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யத் திட்டம்

வரும் மே மாதத்தில் அமைச்சரவையில் பாரிய மாற்றங்களைச் செய்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த மாற்றங்களின் போது, ஊடகத்துறை அமைச்சை ஜனாதிபதி தன்வசம் எடுக்கவிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர்கள் சிலருக்கு அமைச்சர் பதவிகளை வழங்கவும் அவர் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு முக்கிய அமைச்சு ஒன்றை வழங்கும் வகையில் இந்த அமைச்சரவை மாற்றம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜே.வி.பியின் பொறுப்பிலுள்ள நான்கு அமைச்சுகளிலும் ஜனாதிபதி கைவைக்க மாட்டார் என்றும் தெரியவருகின்றது. (ஐ-3)

# குடாநாட்டில் நேற்றிரவு மூன்று தாக்குதல்கள்!

யாழ்ப்பாணம், மார்ச்27

யாழ். குடாநாட்டில் நேற்று இரவு பரவலாக இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

குருநகர் டேவிட்றோட் சந்திப் பகுயில் இரவு 8.30 மணியளவில் வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கத்திகளாலும், கொட்டன்களாலும் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த டேவிட் சந்தியாப்பிள்ளை (வயது-40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

அராலி வடக்கில் இரவு 9 மணிக்கு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கையில் படுகாயமடைந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த இரத்தினம் இராசேந்திரம் (வயது-32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஓட்டோவில் வந்து தாக்கியதாகக் கூறப்படும் இனந்தெரியாத கும்பல் தப்பிச்சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

கட்டைப்பிராய், குளத்தடிப் பகுதியில் நேற்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் வேலும்மயிலும் வினோத்குமார் (வயது-19) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

வீட்டிற்கு வந்த கும்பல் ஒன்று பொல்லுகளால் வீட்டில் இருந்தோர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டது. ஏனையோர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். (3-12)

# மினிபஸ்-ராணுவ டிரக் நகரில் விபத்து!

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதிப்பகுதியில் நேற்றுமாலை மினிபஸ் ஒன்று, இராணுவ டிரக் வண்டியுடன் மோதியது. இதனால் இரண்டு வாகனங்களும் சிறு சேதங்களுக்கு உள்ளாகின.

இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த பொலீஸார், இராணுவ டிரக்கையும் மினிபஸ்ஸையும் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இந்த விபத்தையடுத்து யாழ். நகரப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. ஆயினும், அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஐ-12)

# சஞ்சிகைக்கு ஆக்கங்கள் அனுப்பக் கோரிக்கை

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படவிருக்கும் 'தூறல்' மாதாந்த சஞ்சிகைக்கான தரமான ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

அறிவியல் தகவல்கள், தமிழ் பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கக்கூடிய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் விளையாட்டுத் தகவல்கள் ஏனைய அருமையான, புதுமையான தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்களை வகுப்பு மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஊடாகவோ அல்லது தமிழ் மாணவர் ஒன்றியத் தலைமை செயலகத்தின் ஊடாகவோ ஒப்படைக்குமாறு தமிழ் மாணவர் ஒன்றிய யாழ். மாவட்டப் பிரிவு கோருகின்றது. (3)

## தமிழீழத் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சேவை நேரத்தை அதிகரிப்பதற்கும் விரைவில் தாயகம் உட்பட உலகம் முழுவதற்குமான ஒளிபரப்பாக அதனை விஸ்தரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாக தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி இயக்குநர் தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் என்.ரி.ரி. என்ற எழுத்துடன் தமிழீழத் தேசிய மலரான கார்த்திகைப் பூவை மையமாகக் கொண்டதாக தொலைக்காட்சிச் சேவையின் இலட்சினை அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர் மாலை அணிவித்தார்.

அன்னைபூபதியின் உருவப்படத்திற்கும் கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

நினைவுக் கல்லினைத் தமிழீழ அரசியல் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வட முனைத் தளபதிகளில் ஒருவரான லெப்ரினன்ட் கேணல் ஜெரி ஆகியோர் திரைநீக்கம் செய்தனர். அரும்பொருள் காப்பகத்தைக் கேணல் தீபன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து தமிழீழ அரும்பொருள் காப்பகப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

கருத்துரைகளை யாழ்.மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அருண், பளைக் கோட்டக் கல்வி அலுவலர் இராமலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் நிகழ்த்தினார். அரும்பொருள் காப்பக உருவாக்கத்தில் பங்களித்த கலைஞர்களுக்கு கேணல் தீபன், லெப். கேணல் ஜெரி ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (ஐ-12)

# செனட். அன்ரனீஸ், செனட் பீற்றர்ஸ் அணிகள் நேற்றைய ஆட்டங்களில் வென்றன

வலி. வடக்கு, மார்ச் 27

எல்லைப் படைமாவீரர் நினைவாகவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் செனட்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், செனட். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன. செனட். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேயான முதலாவது ஆட்டத்தில் செனட். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் நவாலி செனட். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும், வீனஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் செனட். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (3-86)

## கதிர்காமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவே இந்த உறுதிமொழியை வழங்கியதாக லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளதால் சோமவன்ஸ அக்கருத்தை வாபஸ் பெறவேண்டும் என்று ஜே.வி.பி. கட்சிக்குள் ஒரு சாரார் அவரை வலியுறுத்திவருகின்றனர்.

இந்நிலையில் ஜே.வி.பியின் அரசியல் குழு நாளை கூடுகின்றது. (ஐ-3)

## பேராயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட மக்களின் துயர்துடைப்புப் பணிகளுக்கு முதலிடம் அளித்துச் செயற்பட்டதுடன் போர்க்கால அநீதிகளுக்கு எதிராகவும் குரல் எழுப்பிவந்தார்.

சிறந்த பேச்சாளரான ஜெபநேசன், வெளிநாடுகள் பலவற்றில் தமிழ் மக்களின் இன்னல்களை அம்பலப்படுத்தியவர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபராகவும், அதிபராகவும் பதவி வகித்த ஜெபநேசன், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் உள்ளார். (ஐ-3)

## ஆயிரக்கணக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கான தீபங்கள் அங்கு ஏற்றப்பட்டன.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அதி வண. தோமஸ்சவுந்தரநாயகம், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண. எஸ்.ஜெபநேசன், யாழ். நாகவிகாரையின் விகாராதிபதி தங்காவெல ஞானாந்ததேரோ, நாவாந்துறை பள்ளிவாசலைச் சேர்ந்த மௌலவி அவ்லதீன், இந்துமத குருபீடாதிபதி ஐ.மகேஸ்வரக் குருக்கள் மற்றும் யாழ். அரச அதிபர் கே. கணேஸ், யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆகியோர் முதலில் விளக்கேற்றினர்.

அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களுக்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிரிழந்தோரின் நினைவாக வடிவமைக்கப்பட்டிருந்த ஓர் உருவப்படத்துக்கு தாமரை மலர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியாவில் இருந்து இதற்கென ஆயிரக்கணக்கான தாமரை மலர்கள் விசேட ஹெலிக்கொப்டரில் பலாலிக்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக சர்வமதத் தலைவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்த வைபவத்தில் முப்படைகளினதும் யாழ்.மாவட்டத் தளபதிகள் உட்படப் பெரும் எண்ணிக்கையான படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ-7-190)

## கிழக்கில் புலிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பதற்கான கால அவகாசம் கடந்த 24 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. ஆனால், ஆணைக்குழு முன் சாட்சியம் அளிப்பதற்கு ஒருவர் கூட முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள், பொலீஸார், படையினர், விடுதலைப் புலிகள் ஆகிய எந்தத் தரப்புகளிடம் இருந்தும் சாட்சியங்களோ, எழுத்துமூலமான சான்றுகளோ இக்காலப் பகுதிக்குள் கிடைக்கப் பெறவில்லை என்று ஆணைக்குழுவின் செயலாளர் எம்.ஆர்.கலீல் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்க யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு - அம்பாறை அலுவலகங்களின் வதிவிடப் பிரதிநிதிகள் முன்வந்துள்ளனர்.

நாளைமுதல் வெள்ளிக்கிழமைவரை அம்பாறை மேல்நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெறவிருக்கும் விசாரணைகளில் அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக் குழு வதிவிடப் பிரதிநிதி ஜென்ஸ் வங் 30 ஆம் திகதியும் -

4ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றக் கட்டடத்தில் இடம் பெறவுள்ள விசாரணைகளின் போது மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்புக் குழு வதிவிடப்பிரதிநிதி ஸ்ரீபன் 6 ஆம் திகதியும் -

சாட்சியம் அளிக்கவிருக்கின்றனர்.

கிழக்கு, வடமத்திய மாகாணத்தில் பணிபுரியும் பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள், பொலீஸ், இராணுவப் பொறுப்பதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோரை கள நிலைவர அறிக்கைகளுடன் விசாரணைக்கு சமுகம் அளிக்கும்படி ஆணைக்குழுச் செயலாளர் கேட்டுள்ளார்.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தலைமையிலான இந்த ஆணைக்குழுவில் அம்பாறை மேல்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.சீ.எம்.பி.பி. வராவெவவும் இடம் பெறுகிறார். (ஐ-3-12)


முதலாம் தவணைக்கான பர்ட்சை வினாத்தாள்

தரம் 1 முதல் O/L வரை சகல பாடங்களையும் உள்ளடக்கியது. சொற்ப பிரதிகளே உள்ளதால் முந்துங்கள்.

★ தரம் 5 புலமைப் பரீசில் மாதிரி வினாத்தாள்களும் விற்பனைக்குண்டு.

நாவலர் (43573)(30-16-18)

இன்ஸ்ரிரியூட் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

S.S. என்ரபிறைஸ்

கொழும்பு-யாழ். புடைவை போக்குவரத்து

எம்மிடம் யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுவதற்காக புடைவை பார்சல் தந்த எமது வாடிக்கையாளர்கள் தயவுசெய்து இன்று (27.03.2005) நண்பகல் 12 மணிக்கு மேல் உடன் யாழ். ஆலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

*குறிப்பு:*

புளியங்குளம் சோதனைச் சாவடியில் நேற்று மாலை ஏற்பட்ட திடீர் காற்று, மழை காரணமாக பொருள்கள் யாவும் முற்றாக நனைந்துள்ளன.

(43574)(30-16-18) S.S. என்ரபிறைஸ்.

VACANCY

Center for Peace and Reconciliation

No.: 08, Grousseault Road, Jaffna, Sri lanka.

மேற்படி நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

1. ஆவணப்படுத்தல்
2. உதவி நிர்வாகி
3. வரவேற்பாளர்

இறுதித் திகதி 06.04.2005

குறிப்பு:-
- மேற்படி பதவிகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, எழுதத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தங்கள் சுயவிவரக் கோவையினை தபால் மூலமாக விண்ணப்பிக்கவும்.

~ இயக்குநர் ~

(C-41819) (54-16-18-30)

கலாநிதி விநாசித்தம்பி அவர்களின்

தெய்வீக அருட்புகழ் நூல் வெளியீடும் இறுவட்டு வெளியீடும்

இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபம்

காலம்: இன்று (27.03.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி

தலைவர்: க. தேவராஜா (வணிகத்துறைத் தலைவர் யாழ். பல்கலைக்கழகம்)

நூலின் விலை 150/-

இறுவட்டின் விலை 250/-

விழா ஏற்பாட்டாளர்கள்.

(C-41856) (54-16-18-30)

நிலவு .COM இன்

புதிய வெளியீடு

MAYA 6.0 தமிழ்மூலம் கற்றலுக்கான பல்லூடக குறுவட்டு

(சி-41355)(30-16-18)

Group Class

A/L 2006,2007

இணைந்த கணிதம்

ஆசிரியர்: த. கனகராசா B.Sc.

இல. 26/1, வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.

T.P: No:077-6253414

(43571) (54-16-18-30)

EXPOAIR your friend in the skies...

எக்ஸ்போ ஏயார் வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 'Formula Plus' வாகனக் காப்புறுதி Sri Lanka Insurance அறிமுகம்

Sri Lanka Insurance நிறுவனம் 'Formula Plus' என்ற புதிய வாகனக் காப்புறுதியொன்றை அறிமுகம் செய்துள்ளது. இம்மாதம் 22ஆம் திகதி இது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த Formula Plus இன் இலச்சினையின் வெள்ளை, சிகப்பு மற்றும் நீலக் கொடிகள் இப்போது கொழும்பு, கண்டி மற்றும் காலி போன்ற இடங்களில் பறக்கவிடப்பட்டுள்ளன.

இந்தப் புதிய காப்புறுதியினால் வாகனக் காப்புறுதியாளர்கள் அதிகநன்மையடைவர். இக்காப்புறுதி பின்வரும் நன்மைகளைக் கொண்டுள்ளது.

01. விபத்து இடம்பெற்ற இடத்தில் வைத்து சரியான சேத மதிப்பீடு செய்தல் மற்றும் வாகனத்தைத் திருத்துவதற்கான அங்கீகாரம் வழங்குதல்.

02. காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளை படிமுறைசெய்ய பொலிஸ் அறிக்கை தேவையில்லை.

03. காப்புறுதி உரிமைக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 24 மணிநேரத்திற்குள் 75 வீதம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

04. உரிமைக் கோரிக்கையின் முழுக்கொடுப்பனவு 3 நாட்களுக்குள் கொடுத்து முடிக்கப்படும்.

05. நாடு பூராகவும் 24 மணிநேர இலவச வீதிச் சேவை வழங்கப்படும்.

06. Formula Plus காப்புறுதியாளர்களுக்கு (011) 2357357 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக 24 மணிநேர சேவை வழங்கப்படும்.

இவ்வாறான நன்மைகள் இந்தக் காப்புறுதியில் உள்ளன.


இதுபற்றி Sri Lanka Insurance நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் பிரிவின் உதவிப் பொதுமுகாமையாளர் சஞ்ஜய சேனரத் கூறுகையில்:-

இந்தக் காப்புறுதியின் பலன்களில் ஒன்றான வீதிச்சேவை நிகழ்ச்சித் திட்டத்தில் பொறியியல் பக்கத்திலும் நாம் கவனம் செலுத்துகின்றோம். (011) 2357357 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக எமது ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் இக்காப்புறுதியாளர்களுக்கு வழங்குவோம் எனக் கூறினார்.



'ரன் தரு சவாரி' சீட்டிழுப்பின்போது செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் அமலி செனவிரட்ண, தேவன் குரே, குழந்தை நட்சத்திரங்கள் நித்யவாணி மற்றும் பிரமுதி கருணாரட்ன ஆகியோர் இடமிருந்து வலமாகக் காணப்படுகின்றனர்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



தமிழீழம் அச்சுவேலியைச் சேர்ந்த
பிரபாகரன் உதயப்பிரகாஷினி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **டிலக்ஷன்**
தனது முதலாவது பிறந்த நாளை எதிர்வரும்
02.04.2005 சனிக்கிழமை சுவிஸ் லவுசானி
லுள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாக
கொண்டாடுகின்றார் டிலக்ஷ் குட்டியை அன்பு
அப்பா, அம்மா, அப்பப்பா இரத்தினசிங்கம்,
அப்பம்மா தவமணிதேவி, அம்மம்மா செல்வ
ராணி, ரான் மாமா, பபி அத்தை( Nederland)
ஆசையப்பா சசி(Londan) சித்தப்பா துர்ஷன்,
மாமாமார் கண்ணன், பிரகாஷ், அத்தைமார் லதா,
செந்தா, பெரியம்மா பிரகாஷினி, துர்க்காச்சித்தி,
மற்றும் உற்றார், உறவினர்.நண்பர்கள்
அனைவரும் அச்சுவேலி உலவிற்குளம் சித்தி
வினாயகர் அருள் பெற்று பல்கலையும் கற்றும்
பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்

தகவல்: அப்பா(பிரபாகரன்(SWISS)
T.P:-0777 847263

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயர் திரு க. ஆனந்தராஜா

*(மக்கள் வங்கி, யாழ் உதவிப் பிராந்திய முகைமையாளர்)*

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தால் வழங்கப்படும் Fellow of the Institute of Bankers' என்ற சிறந்த வங்கியாளருக்கான விருதை அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் திரு.சுனில் மெண்டிஸ் அவர்களால் வடமாகாணத்திலேயே தொடர்ந்து 28 ஆண்டுகள் மசேவையாற்றிய திரு.க.ஆனந்தராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டதையிட்டு உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



தகவல்:
சுகுமாரன் தம்பதிகள்

மிலேனியம் ரெஸ்ரோறன்ட் & ரெஸ்ற்ஹவுஸ்
சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:


www.slt.lk

# 15 நாட்களுக்கு இலவச இன்டர்நெற்!

## 2005 மார்ச் 15 முதல் 30 வரை

இன்டர்நெற்றில் உலா வரலாம். இணையத் தளங்களை அலசிப் பார்க்கலாம். உங்களுக்கு பிடித்த பாடல்களை "டவுண் லோட்" செய்யலாம். திரைப் படங்களைப் பார்த்து மகிழலாம். மின்னஞ்சல்களை அனுப்பலாம். மார்ச் 15 ஆம் திகதியிலிருந்து 15 நாட்களுக்கு அல்லது பதிவு செய்யும் நாளிலிருந்து பொருத்தமான காலத்திற்கு இலவசமாக SLTnet ருக்குரிய எந்தவொரு இன்டர்நெற் பக்கேஜையும் பயன்படுத்தலாம். ஒன்லைனில் உள்ள விளையாட்டுகள் மற்றும் வசதிகளையும் (தெரிவு செய்யும் பக்கேஜைப் பொறுத்து) உபயோகித்து மகிழலாம்.

350 MB கொண்ட அகன்ற அலைவரிசையுடன் கூடிய இலங்கையின் மிகப் பெரிய ISP ஆக SLTnet விளங்குகின்றது. மிக வேகமானது. மலிவானது. இலகுவானது. பாவனையாளர்களுக்கென அதிக லைன்கள் இருப்பதால் 150 என்ற இலக்கத்தை அழுத்தி எங்கிருந்தும் SLTnet முடன் இணைந்து கொள்ள முடியும்.

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் அண்மையிலுள்ள "ரெலிசொப்" அல்லது SLT விற்பனை நிலையத்தை நாடுங்கள் அல்லது இன்றே அழையுங்கள் : (011) 2 555 555

**விரையுங்கள்! மார்ச் 15 ஆம் திகதியே பதிவு (Sign up) செய்யுங்கள். 15 நாட்களும் சகல இன்டர்நெற் வசதிகளையும் இலவசமாக பயன்படுத்தி மகிழுங்கள். இச் சலுகை 2005 மார்ச் 30 ஆம் திகதி வரை மட்டுமே.**

sltnet

இன்டர்நெற்றில் இணைய விரும்பும் போது...

Sri Lanka Telecom


அன்னை நாகா ஃபுட் சிட்டியின்
இரண்டாவது ஆண்டு
பூர்த்தி விழா
நல் வாழ்த்துக்கள் !
எலிஃபன்ட் ஹவுஸ்
ஐஸ் கிறீம்
10% விலை கழிவு
கோபி கிராண்டே, கோபி கேரமல்,
குக்கி கிறீம், ஜகர் நட், மிக்ஸ் ஃபுருட்,
மற்றும் கறுத்த கொழும்பான்
ஐஸ்கிறீம் வகைகள்
19 மார்ச் முதல் 19 ஏப்ரில் வரை


சுப்பிரிவிக்கி
SUPIRIVICKY
AYURVEDIC Herbal TOOTHPASTE
சுப்பிரிவிக்கி
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை
SUMUDU
சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.
ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை
சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு
An ISO 9001, ISO 14001 & GMP Certified Company


எந்நேரமும் உங்கள் கை வசம் இருக்க வேண்டியது. நாள் முழுவதும் ஆரோக்கியம் தருவது!
TRADE MARK
அக்ஸ் ஓயில்
ஜலதோஷம் • இருமல் • காய்ச்சல்
பெண்களின் மாதாந்த சுகவீன வயிற்றுவலி நிவாரணி
வாதத்தால் வரும் வலிகள் • பூச்சிக்கடி
தசை வலிகள் • பிரயாணக்களைப்பு
தலைச்சுற்று • தலைச்சுற்று
வயிற்றுவலி • மூக்கடைப்பு
உணர்ச்சியற்ற பாகங்கள்
தலைப்பாரம் • பல்வலி
காதுவலி • சுளுக்கு
AXE BRAND
UNIVERSAL OIL
A handy medicine for the home
For quick relief of cold & headache
AXE OIL
வெளிப் பாவனைக்கு மட்டும்
யாழ் ஏக விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2226291,
பக்ஸ் :- 021 2222445.

සිරිවිමන

# உங்கள் வீட்டிலிருந்து திருடப்படக்கூடிய பொருட்கள் யாவற்றையும் மீளப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் வழங்கும் *சிறிவிமன* இல்லக் காப்புறுதித் திட்டம் தீ, திருட்டு, வெடி விபத்துகள், கலவரங்கள், தாக்குதல்கள், மின் ஒழுக்குகள், மின்னல் தாக்கம், வெள்ளம் மற்றும் இன்னும் பல எதிர்பாராத அபாயங்களிலிருந்து உங்கள் இல்லத்திற்குப் பாதுகாப்பு வழங்குகின்றது. அத்துடன் ஆழிப் பேரலைகள், சுழல்காற்றுகள், சூறாவளிகள், புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் அது உங்களைப் பாதுகாக்கின்றது.

இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக AA - தரமதிப்பீட்டை பிட்ச் ரேட்டிங்ஸ் முகவரிடமிருந்து முதலில் பெற்றுக் கொண்ட இலங்கையின் ஒரே ஒரு காப்புறுதி நிறுவனமாகத் திகழ்வதும், அண்மைக் காலத்தில் நிகழ்ந்த பேரனர்த்தத்தின் போது முதலாவதாக இழப்பீடுகளை வழங்கிய காப்புறுதி நிறுவனமுமான ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் இக் காப்புறுதியை உங்களுக்கு வழங்குகின்றது. எது நடந்தாலும் இலங்கைக் காப்புறுதித் துறையில் வலிமையும், உறுதியும் கொண்ட முன்னோடியின் முழுமையான பாதுகாப்பு என்றும் உங்களுக்கே.

**சிறிவிமன இல்லக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள அழையுங்கள் : 2 357 357**
**அல்லது SLI கிளை ஒன்றுடன் அல்லது SLI காப்புறுதி ஆலோசகருடன் தொடர்பு கொள்ளவும்.**

Sri Lanka Insurance

# முற்றிலும் புதிய TVS VICTOR GX.

இப்போது, நீடித்துழைக்கும் டியூரலை.:.ப் எஞ்ஜினால் இயக்கப்படுகிறது

TVS




www.tvsvictor.com

அற்புதமான புதிய டியூராலை.:.ப் எஞ்ஜின் மிகக்குறைந்த உராய்வுக்கு உள்ளாகும் பாகங்களைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே, அது செயற்றிறன் மிக்கது. நீங்கள் நீண்டகாலத்திற்கு அதிக மைல்கள் சுமுகமாகவும் சௌகரியமாகவும் பயணம் செய்யலாம். முற்றிலும் புதிய **TVS VICTOR GX.** புன்னகை பூத்த முகத்துடன் ஓட்டிச் செல்லுங்கள்!

Victor GX
SMILES FOREVER

இக்கனோமீட்டர், பயண மைல்கள் மீதுபூரண கட்டுப்பாடு.

ரைட் ஸ்விட்ச் ஓடும் தரைக்கேற்ப சொகுசினை மாற்றலாம்

நீள்சதுர ஸ்விங் ஆர்ம், கச்சிதமான சமநிலையும் திடவுறுதியும்

110 cc.6 kw (8.1 BHP)
டியூரலை.:.ப் எஞ்ஜின், உலகின் மிகப்பெரிய சுயாதீன எஞ்ஜின் ஆய்வு நிலையமான ஏவிஎல், அவுஸ்திரேலியா உறுதிப்படுத்தப்பட்டது. Duralife எஞ்ஜின், இக்கனோமீட்டர், ரைட்ஸ்விச் ஆகியவற்றின் ஆக்கியோனுரிமை பெறப்படவுள்ளது.

முற்றிலும் புதிய விலை
ரூ. 84,900/- + VAT
2 வருடங்கள் / 30,000 கி.மீ. உத்தரவாதம்.
டிஸ்க் தெரிவுகள் உள்ளன.

TVS MOTOR CO. GENUINE PARTS

நாடளாவிய சேவை

TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
757, சிறிமாவோ பண்டாரநாயக மாவத்தை கொழும்பு-14
தொலைபேசி: 011 4614746 (10 தேடல் இணைப்பு) பாக்ஸ்: 011 4797207
நகர பார்வை நலையம்:
100, ஹயிட் பார்க் கோர்னர், கொழும்பு-2 தொலைபேசி: 011 4797250 தொலைபேசி/பாக்ஸ்: 011 4797207

United Motors Lanka Ltd.

CAMERON PALE & MEDINA



# உங்கள் இதயத்திற்கு அருகே...!

YAMAHA
Touching Your Heart







Libero



Libero LX



YAMAHA Fazer மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி, MOTOROLA C 200 கையடக்கத் தொலைபேசி ஒன்றை இலவசமாகப் பெறுங்கள். *நிபந்தனைகள் உட்பட்டது

FAZER

அழகிய சொகுசான 100% ஜப்பானிய தொழில்நுட்பம்.
உங்கள் இதயத்திற்கு அருகே,
சுலபமான இனிமையான சவாரி.

AMW 'யமஹா கோர்னர்' 14/9, ஸ்ரீ ஜினாரத்ன மாவத்தை கொழும்பு 02.
தொலைபேசி: 2304231, 2304232, 011 4718603. தொலைநகல்: 94 11 2304266

## நாடெங்கும் வியாபித்திருக்கும் எமது சக்தி

★ கிரிபத்தொ – டில்ஷாணி மோட்டோர்ஸ் தெ. பே – 011 4821181, 0714 036639 ★ நுகேகொட – மதுரங்க என்ரப்பிறைஸர்ஸ் தொ. பே – 0777 893200 ★ மவுண்ற் லெவினியா – மோட்டோர் ஜீ. ஆர் தொ. பே – 0777 722518, 078 5124597
★ அம்பலாங்கொடை – என். கே. றேடிங் லங்கா (பிரை) லிமிட் தொ. பே – 091 4382374, 077 6236338 ★ மாத்தற – மகேஸ் என்ரபிறைஸ்ஸஸ் தொ. பே – 041 2224216, 077 3054150 ★ யக்கல – சனிலா புறமோஷனல் தொ. பே – 077 3155139
★ கேகாலை – ஹீரோ மோட்டோர்ஸ் தொ. பே – 077 6159421, 078 8915615 ★ குருணாகல – இஸாதி என்ரபிறைஸர்ஸ் தொ. பே – 037 2223878, 0777 361920 ★ வவுனியா – துஸரா குருசிஷ்எவ தொ. பே – 027 2223766
★ மட்டக்களப்பு – பற்றஷன் தொ. பே – 065 2223794, 0777 941571 தொலைநகல்: 065 2226001 ★ கல்முனை – சிலோன் எம். எம். எஸ். கம்பனி (பிரைவெட்) லிமிட்டட். – 067 2222306 ★ அம்பாறை – அசிறி றேடிங் தொ. பே – 063 2222977, 0777 679757
★ கொறண ஆரிய ரட்ண றேட் சென்ரர் தொ. பே – 034 4286065 ★ ரத்னபுர – ஸ்ரீரம்யா தொ. பே – 045 2222060, 071 7158156 ★ எம்பிலிப்பிட்டிய – கீத்தா என்ர பிறைஸ்ஸஸ் தொ. பே – 047 2269424, 047 4379448
★ பதுளை – ஜோராஜ் மோட்டரஸ் – தொ. பே. – 055 2223103, 0777 642136 ★ நீர்கொழும்பு – அமிலா மோட்டோர்ஸ் தொ. பே – 031 2224013, 0777 281576 ★ நாத்தாண்டியா – எம். பி. சி. எஸ். தொ. பே – 032 2254236
★ மகாவெவ – டில்சான் றேட் சென்ரர் தொ.பே – 032 2254366, 0777 287102 ★ புத்தளம் – அல்அமனா சேவிஸ் ஹான்ட் தொ.பே – 032 2267266 ★ அனுராதபுரம் – சிங்குங் தொ. பே – 025 2221823 ★ கந்தளாய் – தரங்க மோட்டார்ஸ் – தொ. பே. – 077 6159421
★ மன்னார் – செலக்ஷன் மோட்டோர்ஸ் தொ. பே – 077 3049178 ★ வவுனியா – கபிலாஷ் மோட்டோர்ஸ் தொ. பே – 024 4589019 ★ யாழ்ப்பாணம் – யம ஹ பிளாஸா தொ. பே – 0777 563803, 021 4590200 ★ மதவாச்சி – சுகத்த மேச்சன்ட் தொ. பே – 023 2232115

இப்போதும் உங்கள் சௌகரியங்களுக்காக – 24 மணித்தியால உடனடி அழைப்புகளுக்கு 077 3047251-5

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

27.03.2005

# இறுதி அத்தியாயம் தமிழ் மக்கள் கைகளில்...

"வரலாறு அதி அற்புதமான சக்தியைக் கொண்டது. வரலாறு எத்தகைய தலைகீழ் மாற்றத்தை இப்பிராந்தியத்தில் நிகழ்த்தும் என்பதை யாவரும் காணத்தான் போகிறீர்கள்...." என்று க.வே.பாலகுமாரன் அழுத்தி உரப்பாகக் கூறினார். விடுதலைப் புலிகளின் அரசியல் தத்துவாசிரியரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'War and Peace'(போரும் சமாதானமும்) நூல் அறிமுக விழாவில் அவ்வமைப்பின் அனுபவம் மிக்க முதிர் நிலையிலுள்ள உறுப்பினர்களில் ஒருவரான பாலகுமாரன் தனது சிறப்புரையில் அவ்வாறு கூறியபோது சபையிலிருந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், யாழ். சமூகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைவரும் புருவம் உயர்த்தி அவரையே பார்த்த படியிருந்தனர்.

"புலி பதுங்குமா அல்லது பாயுமா? சந்திரிகா கலையப்போகிறாவா? கலைக்கப் போகிறாவா? ஜே.வி.பி. அடைகாத்துக் கொண்டிருப்பது கூழ்முட்டையா? கோழிக்குஞ்சு பொரிக்குமா?" இக்கேள்விகள் எல்லாம் மக்கள் மனங்களில் ஊசலாடிக்கொண்டிருக்கும் கேள்விகள் என்பதைப் பாலகுமாரன் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ஊசலாட்டங்கள், தெளிவற்ற ,சீரற்ற நிலைமைகள் தொடர்பாக 'அறிவுசார் தொகுதிக் களமாக' உள்ள 'மெத்தப்படித்த' யாழ்ப்பாணப் புத்திஜீவிகள் சமூகம் என்ன செய்யவேண்டும் என்பதை அவர் தனது உரைமுழுவதும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

"தமிழ்ச் சமூகம் ஒரு நெருக்கடியை (Crisis) நோக்கி நகர்கிறது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம் நேற்றைய சமூகமாக மாறக்கூடாது. அறிவைப் புதுப்பிக்கவேண்டும். அறிவுசார் தொகுதியாக இருப்பவர்கள் சமூகத்தை விரட்டாமல், சமூகத்திலிருந்து அந்நியப்படாமல், பிரிந்துபோகாமல் சமூகத்தின் ஊசலாட்டங்களுக்கும் கேள்விகளுக்கும் தெளிவை ஏற்படுத்தவேண்டும்" என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டார் பாலகுமாரன்.

"வரலாறு திரும்பத் திரும்ப நிகழும். இறந்த காலத்திலிருந்து எதையும் கற்காவிட்டால், அதை நீ திரும்பி வாழச் சபிக்கப்படுவாய்...." என்பதைச் சுட்டிக்காட்டிய பாலகுமாரன் ஜே.வி.பி. யின் சமகால அணுகுமுறைகளின் தோல்விகரமான சூழ்நிலைகளை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

"ஏற்கனவே இரண்டு புரட்சிகளில் தோற்றுப்போன ஜே.வி.பி. இப்பொழுது மூன்றாவது புரட்சியைச் செய்வதற்கு ஆயத்தமாகிறது. கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாகத் தமிழ் இளைஞர்கள் போராடுகின்றனர். தமிழ் இளைஞர்களின் இந்தப் புரட்சியை விளங்கிக் கொள்ளமுடியாத அகக் குருடர்களாகவுள்ள ஜே.வி.பி. இலங்கைத் தீவின் நவீன வரலாற்றுக்குப் பெரும் தவறிழைத்த அமைப்பாக மாறப்போகிறது...." என்று பாலகுமாரன் வேதனை பொங்கக் கூறினார்.

"விடுதலைப் புலிகள் இயக்கம் உடைந்து தூர்ந்து போகிறது என்று வழமைபோலக் கொழும்பு கருதுகிறது. இது ஒரு தவறான மதிப்பீடு என்பதைக் கொழும்பு விரைவில் உணர்ந்து கொள்ளும்....." என்று ஆணித்தரமாகக் கூறினார் பாலகுமாரன்.

உரையின் தொடக்கத்தில் வரலாறு அதி அற்புதமான சக்தியைக் கொண்டது என்றும் வரலாறு தலைகீழ் மாற்றத்தை நிகழ்த்தும் என்றும் சபையிலிருந்தவர்களுக்கு உரமும் உற்சாகமும் அளித்திருந்த பாலகுமாரன் மிகச் சுவாரஸ்யமாக அதற்காகப் பல உதாரணங்களை வழங்கிக் கொண்டிருந்தார். தனக்கே உரித்தான நளினமும் நையாண்டியும் நகைச்சுவையும் மிக்க வடிவங்களில் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்காகப் பிரேமதாஸா - புலிகள், பேச்சுவார்த்தை நிகழ்ந்துகொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் இலங்கை இராணுவத்தின் தளபதியாக வருவதற்கு மிகப் பொருத்தமானவராக விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உள்ளார் என்றும் பிரபாகரனுக்குள்ள தேசபக்தி அந்நியர்களை வெளியேற்றும் என்றும் அதேவேளை அன்றைய காலகட்டத்தில் ஜே.வி.பி. செய்த கிளர்ச்சியைச் சமாளித்து அடக்கும் வல்லமையும் அவருக்கு இருப்பதாகப் பிரேமதாஸா கூறியதைப் புன்னகைத்தபடியே கூறிய பாலகுமாரன் - பிரேமதாஸா மாதா என்றால் விடுதலைப் புலிகள் மாதாவின் மணிமுடி என்ற பாணியில் சொல்லாடினார்.


"புலி பிரேமாவிடம் ஆயுதங்களை வாங்கி இந்தியப் படைகளுக்கும் துரோகக் கூட்டங்களுக்கும் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் அடிகொடுத்தது....." என்ற போது சபையிலிருந்தோர் சிரிப்பொலி எழுப்பிக் கரகோஷம் செய்தனர்.

இந்த உதாரணத்தின் மூலம் விடுதலைப் புலிகள் அன்று நிகழ்த்திய தலைகீழ் மாற்றத்தைச் சுட்டிக் காட்டிய பாலகுமாரன், விடுதலைப் புலிகள் இன்று நிகழ்த்திக் கொண்டிருக்கும் தலைகீழ் மாற்றத்தின் சில அறிகுறிகளைச் சுட்டிக்காட்டினார்.

" காட்டுக்குள் இருந்த தமிழ்ச் செல்வனும் ஏனைய பிரதிநிதிகளும் ஸ்ரீலங்காவின் ஹெலிகொப்டரில் ஏறிப்போய் ஸ்ரீலங்காவின் சர்வதேச விமானநிலையத்தில் இறங்கி ஸ்ரீலங்காவின் விமானத்தில் ஏறிப்போய் ஐரோப்பாவில் இறங்கி நின்று, அதே ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வாங்கு வாங்கென வாங்குகின்றனர்......" என்று கூறிய பாலகுமாரன், சபையிலிருந்தவர்களை நோக்கி இதைவிட வேறு என்ன என்ன தலைகீழ் மாற்றங்களை எல்லாம் நீங்கள் காணவேண்டுமோ...... அதையெல்லாம் பொறுத்திருந்து. இப்புதிய உலக ஒழுங்கில், அறிவியல், இராஜதந்திரக் கண்கள் கொண்டு பாருங்கள் என்று கோரிய தொனியை அவதானிக்க முடிந்தது. விடுதலைப்புலிகளின் இராஜதந்திரத்தின் முன் கதிர்காமரின் இராஜதந்திரம் ஈடாடிப் போனதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

அன்ரன் பாலசிங்கம் அவர்களின் நூலையும் அதிலுள்ள பகுதிகளையும் இடையிடையே வாசித்து வாசித்து விளக்கிய பாலகுமாரன் "புலிகளுக்கு வக்காலத்து வாங்காமல் நடுவுநிலைமையுடன் நின்று எளிமையான மொழியில் பாலசிங்கம் இந்த நூலாக்கத்தைச் செய்துள்ளார்" என்று கூறினார்.

"அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நடந்து முடிந்த, நடக்கின்ற அத்தனை




அத்தியாயங்களையும் இந்த நூலில் சேர்த்து விட்டார். இன்னும் ஓர் அத்தியாயம் மட்டும்தான் சேர்க்கப்படவேண்டும். இந்தப்போராட்டத்தின் வெற்றி அல்லது தோல்விதான் அந்த அத்தியாயம். இந்த இறுதி அத்தியாயத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் எமது மக்கள் தான்" என்று முடித்துக் கொண்டார் பாலகுமாரன்.

# யாரோடு நோவோம்...?

[illegible]ற்போதுள்ள சுபீட்சம் செயற்கையானது. டொலர், டினார் பொருளாதாரமாக உள்ள இந்நிலை சில காலங்கள் தான் நீடிக்கும். இவ்வாறு மூத்த படைப்பாளி பேராசிரியர் நந்தி 'சூரியகாந்தி' செவ்வியில் கடந்த வாரம் கூறியிருந்தார்.

அதே போல, கல்லூரியொன்றின் உயர்தர மாணவர் ஒன்றுகூடலில் கல்வி அதிகாரி ஒருவர் கூறிய கருத்தும் முக்கியமானது. 'இலங்கை அரசில் வேலை வழங்கும் வீதம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. எனவே, அரச வேலைகளை எதிர்பார்ப்பதைக் காட்டிலும் சுயமாகத் தொழில்களைக் கண்டு பிடித்து அவற்றில் தேர்ச்சி பெற்றுச் சொந்தக் காலில் நிற்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும்' என அவர் மாணவர்களுக்கு அறிவுரை கூறியிருந்தார். அப்போது அவர், புதிதாக அங்கிங்கெனாதபடி வர்த்தக நிலையங்கள் கட்டப்பட்டு வருவதையும் தனது பேச்சில சுட்டிக்காட்டினார்.

உண்மையில் போர் அச்சம் காரணமாகவோ, போர் சார்ந்த நன்மைகளைப் பயன்படுத்தித் தப்பித்தல் மனோபாவத்தோடோ மேற்கு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களால், அவர்கள் தமது குடும்பத்தையும், தம்மையும் மையப்படுத்தி மேற்கொள்ளும் செயற்பாடுகளால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழ்ப்பகுதிகள் புதிய மாற்றங்களைக் காண்கின்றன.இது ஒரு வகையில் நாட்டின் சுபீட்சத்தைப் பறை சாற்றினாலும், மறுபுறத்தே பாதகமான அம்சங்களையும் கொண்டுள்ளது.

'நந்தி' அவர்கள் கூறியது போல இது ஒரு குறுகிய காலப்பகுதிக்கான செயற்கையான செழிப்பே. ஐரோப்பிய நாடுகளில் குடி யுரிமை கோரி விண்ணப்பங்கள் சமர்ப்பிக் கப்பட்டு அவை நிராகரிக்கப்பட்ட நிலையில் திருப்பியனுப்பப்படுவோரில் கணிசமானோர் இலங்கையர். அதுவும் நாளாந்தம் என்று கூறக் கூடிய வகையில் மேற்குலக அரசுகள் இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கின் றன. இவ்வாறு வருபவர்களும், திருப்பியனுப்பப் படும் நாளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களும் தாம் இங்கு வந்து செய்யக்கூடிய தொழிலாக வியாபாரத்தையே கருகின்றனர். அதே வேளை, இங்குள்ள இரத்த உறவுகள் 'கெட்டுப்' போகாமல் இருக்கக் கடைகளைப் போட்டுக் கொடுத்தும், வாகனங்களைப் பெற்றுக் கொடுத்தும் அங்குள்ளவர்கள் திருப்தியடைகின்றனர்.

சொந்த உழைப்பில் - முயற்சியில் - வலிகள்பட்டு - பெறாத இந்தச் சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்தாது போட்டுடைக்கும் கைங்கரியத்தையே இங்குள்ளவர்கள் பலரும் மேற்கொள்ளுகின்றனர்.

அதேவேளை அங்கிங்கெனாதபடி புதிது புதிதாக முளைக்கும் கடைத்தொகுதிகள் மக்கள் தொகையை மிஞ்சி விடுமோ என்ற அளவுக்கு அதிகரித்துக் கொண்டு போகின்றன.

இது ஓர் ஆரோக்கியமான வணிகக் கட்டமைப்பை உருவாக்குமெனில், அது சுபீட்சத்துக்கு வழி கோலக் கூடும். ஆனால் அவ்வாறு நடக்கப் போவதில்லை. எல்லோரும் கடைகளைத் திறந்து விட்டுக் காத்திருக்கப் போகிறார்கள். செய்த செலவுக்குக் கூட வருமானம் பெற முடியாமல் ஈ கலைக்கப் போகிறார்கள் என்று முணு முணுக்கிறார் விவரம் தெரிந்த ஆளொருவர்.

பல்தேசியக் கம்பனிகள் இப்போது எல்லாக் கிராமங்களிலும் மூலை முடுக்குகளில் கூட நுழைந்து விட்டன. கூடவே தென்னிலங்கையை மையப்படுத்திய தேசியக்கம்பனிகளும் இங்கு எல்லா இடங்களிலும், எல்லா மார்க்கங்களிலும் நுழைந்து விட்டன. இது உலகமய மாக்கத்தின் தவிர்க்க முடியாத கட்டுப்படுத்த முடி யாத உள்நுழைவு.


இப்போது சிறு வணிக நிலையங்கள் செயலற்றுப் போகக் கூடிய வகையில் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் சிறப்புச் சந்தைக் கடைத் தொகுதிகள் (Super Market Complex) ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டன. நேர முகாமைத்துவம் பேணும் வகையில் அவசர உலகின் யதார்த்தத் துக்குள் சிறைப்பட்டிருக்கும் கொழும்பு வாழ்க்கைக்கு இத்தகைய சிறப்புச் சந்தைகள் அதிகம் பயன்தரும் என்பது அவர்களது எண்ணமாயிருக்கலாம். இந்திய எண்ணெய் நிறுவனம் (IOC) எரிபொருள் நிரப்பு நிலையத்தோடு சிறப்புச் சந்தையையும் கட்டமைத்துள்ளது. எரிபொருளை நிரப்புபவர் வாகனத்தை விட்டிறங்கி, சிறப்புச் சந்தைக்குள் பிரவேசிப்பார். அவர் பொருள்களுடன் திரும்பி வரும் போது, எரிபொருள் நிரப்பப்பட்டு வாகனம் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும். களைத்து விழுந்து வீடு செல்பவருக்கு இது தெம்பளிக்கும் வியாபார உத்தியாகும்.

இங்கும் சிறப்புச் சந்தைகளின் தோற்றமும், பெருவணிக நிறுவனங்களின் செயற்பாடும் வலுவாக உள்நுழைந்துள்ளன. மிக விரைவாகவே இவற்றின் சௌகரியத்துக்குள் பலரும் மையப்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் சிறு வியாபார நிலையங்கள் பெருஞ்சவால்களை எதிர் காலத்தில் எதிர்கொள்ள நேரிடலாம். யார் கண்டார்.


வெளிநாட்டுப் பணமானது இங்கே தொழில்சார் கட்டமைப்புக்களை உருவாக்கப் பயன்படுமாயின் அது சுபீட்சத்துக்கு வழிகோலும். நமது வளங்களைப் பயன்படுத்தி,நமது சூழலுக்குப் பொருந்தக் கூடிய, நமது தொழிலாளர் படைக்கு வேலை வழங்கக் கூடிய தொழிற் கூடங்களையோ ஏனைய கட்டமைப்புக்களையோ உருவாக்குவதே சாலப்பொருத்தமான பணியாகும்.



தீவுச்சேனை கிராம நுழைவாயிலில் கருணா அணியின் சென்ரி. 'சண்டே லீடர்' வெளியிட்ட புகைப்படம்


தீவுச்சேனையில் இயங்கிய கருணா அணி முகாமின் பொறுப்பாளர் மாங்களம் மாஸ்டர்

# கிழக்கில் தாக்குதல்களுக்கான பின்தளப் பிரதேசமாக வெலிகந்த!



கிழக்கில் வெலிகந்த பிரதேசத்தில் இடம்பெறும் சம்பவங்களும் அவற்றின் பின்னணித் தகவல்களும் அச்சமூட்டுவனவாக உள்ளன.

வெலிகந்தவில் உள்ள தீவுச்சேனை என்னும் தமிழ்க் கிராமத்தின் நிலைமை தொடர்பாக 'சண்டே லீடர்' ஆங்கில வார இதழ் படங்களுடன் வெளியிட்டிருக்கும் தகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

கிழக்கில் இருந்து கருணா அணியினர் தப்பிஓடி கிட்டத்தட்ட ஒரு வருடம் எட்டுகின்றது.

இந்தக் காலப்பகுதியில் கருணா அணியில் இருந்து தப்பி ஓடிய எஞ்சிய ஒரு சிலரைப் பயன்படுத்திக் கொண்டு ஓர் எதிர் அணியை உருவாக்கி, புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை முடுக்கி, கிழக்கில் ஒரு நிழல் யுத்த சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் கருணாவின் சகோதரர் ரெஜி முதல், கடைசியாக மங்களம் மாஸ்டர் வரை பலரது பொறுப்பில் ஒரு துணைப் படையை இயக்குவதற்கு ஒத்தாசை புரிந்தது இராணுவம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கருணா அணியினர் தங்கித் தளம் அமைத்துச் செயற்பட இராணுவம் உதவி வருவதாகப் புலிகள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்தனர். இந்தக் குற்றச் சாட்டுகளை எல்லாம் நிராகரித்து வந்த அரசும் படைத்தரப்பும், இப்போது வெலிகந்த நிலைமை கையை மீறிப் போவதை உணர்ந்திருப்பது போலத் தெரிகின்றது.

கிழக்கைத் தொடர்ந்து ஒரு கொந்தளிப்பான பிரதேசமாக வைத்திருக்கவும், அங்கு விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை முடக்கவும், புலிகளுக்கு எதிரான அணி ஒன்று அங்கு செயற்படுவதாகச் சர்வதேசத்துக்குக் காட்டவும், மறை முகமாக எடுக்கப்படும் சதி முயற்சிகள் பற்றிப் புலிகள் கடும் சீற்றம் அடைந்திருக்கின்றனர்.

கிழக்கில் அண்மையில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவங்களில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கிழக்கில் மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதிக் கிராமங்களில் கருணா அணியினர் மறைந்திருந்து செயற்படுவதாக முதலில் பல தகவல்கள் வெளியாகி இருந்தன. பின்னர் அந்தக் கிராமங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அடிக்கடி ஏற்பட்டபோது கிராமங்களின் அமைதி குலைந்தது.

'கருணா அணி' என்ற பெயர் எல்லைக் கிராமங்களில் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி வந்தது. தமிழ் மற்றும் சிங்களக் கிராமங்களில் இந்தப் பீதி இப்போதும் காணப்படுகின்றது.

கிழக்கில் தாக்குதல்களை நடத்துவதற்கும் கருணா அணியைச் சேர்ந்தவர்களை எங்காவது ஓர் இடத்தில் பாதுகாப்பாகத் தங்கி வாழ வைப்பதற்கும் ஒரு தளப் பிரதேசம் அவசியமாகியது.

அத்தகைய ஒரு பின்தளப் பிரதேசமாகவே தீவுச்சேனை கிராமம் மாற்றப்பட்டிருக்கின்றது.

இது ஒரு பாரம்பரியத் தமிழ்க் கிராமம். மட்டக்களப்பு - பொலன்னறுவை வீதியில் செவணப்பிட்டி சந்தியில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் இந்தக் கிராமம் அமைந்திருக்கிறது.

நூற்றுக்கும் குறைவான தமிழ்க் குடும்பங்கள் வசிக்கின்ற இந்தக் கிராமத்தை வெளித் தொடர்புகளைக் கண்காணித்துத் தனிமைப் படுத்தும் முயற்சி சில மாதங்களுக்கு முன்பிருந்தே தொடங்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

23 ஆவது 'டிவிஷன்' இராணுவப் படையணியின் கீழ் உள்ள இந்தப் பிரதேசத்தில் கருணா அணியின்ருக்கான தளத்தை அமைத்துக் கொடுப்பதில் இராணுவம் முழுப்பங்கு வகித்திருக்கின்றது.

அங்குள்ள இராணுவக் காவல் நிலைகளில் படையினரோடு கருணா அணியினர் சிலரும் ஆயுதங்களோடு காவல் கடமைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அங்கு கருணா அணியின் உறுப்பினர்கள் உட்பட துணைப் படையைச் சேர்ந்தவர்கள் கிராம மக்களோடு கலந்து, மறைந்து தங்கியிருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிராமத்துக்குச் சென்றுவருவோர் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டனர்; தொடர்புகள் துண்டிக்கப்பட்டன; எதிர்ப்புக் காட்ட முடியாத நிர்ப்பந்தச் சூழலுக்குள் கிராம மக்கள் சிக்கினர்.

வெலிகந்த பகுதியில் கருணா அணியின் செயற்பாடு பற்றிப் பல தகவல்கள் வெளிவந்த போதிலும் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்கும் வகையில் 'சண்டே லீடர்' வெளியிட்ட தகவல் அரசுக்கு சிக்கலை உருவாக்கி விட்டது. அதேவேளை, கருணா அணியின் தளப் பிரதேசத்துக்கான நுழைவாயில் என்றும், அங்கு அமைந்துள்ள சோதனை நிலையத்தில் பணியில் இருக்கும் ஆயுதபாணியான தமிழ்ச் சிறுவன் ஒருவனுடையது என்றும் தெரிவித்து படங்களையும் 'சண்டே லீடர்' பிரசுரித்திருந்தது.

இந்தப் பத்திரிகைச் செய்தி வெளியான கையோடு அந்தப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சண்டை இந்த விவகாரத்தின் மீது அனைத்துத் தரப்புகளின் கவனத்தையும் ஈர்த்து விட்டது.

தீவுச்சேனைக் கிராமத்தில் சுமார் இரண்டு மணிநேரம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்த - கருணா அணியை வழிநடத்தும் பொறுப்பாளர் என்று கூறப்படும் -மாங்களம் மாஸ்டர் சிகிச்சைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டபோது சம்பவத்தின் பாரதூர நிலைமையை மூடிமறைக்க முடியாமற்போனது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா குழுவின் தளம் இயங்குவதான செய்தியை உடனடியாகவே படைத்தரப்பு மறுதலித்தது. இது வழமையான மறுப்புத்தான் என்றாலும், வெலிகந்த நிலைமை விபரீதமாக மாறிவருகின்றது என்ற அச்சம் அரச உயர்மட்டத்துக்கு உறைத்திருக்கின்றது.

இப்போது கிழக்கில் வெலிகந்த பகுதியில் நிலைகொண்டுள்ள 23 ஆவது 'டிவிஷன்' படையணித் தளபதியின் தனிப்பட்ட ஆதரவில்தான் கருணா அணியினர் அங்கு செயற்பட முடிந்தது என்றவாறு கதையை மாற்றிவிட எத்தனங்கள் எடுக்கின்றது அரசு.

வெலிகந்த பிரிவு இராணுவ 'டிவிஷனின்' தளபதியை இடமாற்றுவதன் மூலம் இந்த விவகாரத்தில் தனக்குப் பங்கில்லை என்று காட்ட அரசு தயாராகிவிட்டது.

23 ஆவது 'டிவிஷனின்' கட்டளைத் தளபதியாக இருப்பவர் மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன.

பிரிகேடியர் தரத்தில் இருந்த இவர், மிக அண்மையில் தான் மேஜர் ஜெனரல் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டார்.

அந்தப் பதவி உயர்வு கூட புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொல்லப்பட்ட கையோடுதான் வழங்கப்பட்டது என்ற தகவலும் இராணுவ வட்டாரங்களில் அடிபடுகின்றது.

கருணாவுடன் நீண்ட காலமாகவே இவர் நெருக்கமான உறவு வைத்திருந்தார் என்றும் ஒரு தகவல் உள்ளது. இந்தப் பின்னணியில் தனிப்பட்ட படை அதிகாரி ஒருவரின் ஒத்தாசையுடன் மட்டும் தான் கருணா அணி செயற்படுவதாகக் காட்ட முயற்சிப்பது அரசின் வழமையான மூடி மறைக்கும் பாணியாகவே நோக்கப்படலாம். கருணா அணிக்கு அபயமளித்து அடைக்கலம் கொடுத்துப் பாரமரிப்பதற்காக இராணுவத்தின் ஒரு பிரிவு இரகசியமாக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துமே தோல்வியில் முடிந்திருக்கின்றன.

மட்டக்களப்பில் இருந்து தப்பிஓடிய கருணாவுக்கும் அவரது சகாக்களுக்கும் முதலில் கொழும்பில் தளம் கொடுத்து செயற்பட முனைத்தனர். ஆனால் அவர்கள் அங்கு மறைந்து ஒளித்த அத்தனை இடங்களிலும் மரண அடி வீழ்ந்தது. பலர் ஒன்றாகப் படுக்கைப் பாயிலேயே கொல்லப்பட்டனர். பின்னர் கருணா அணியினர் தங்கள் செயற்பாடுகளை பொலனன்றுவைப் பகுதிக்கு மாற்றினர். அங்கும் அவர்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

பொலன்னறுவையின் மூலைமுடுக்குக் கிராமங்களில் அவர்களைத் தேடி அழிக்கும் தாக்குதல்கள் தீவிரமடையவே தங்கள் கூடாரத்தைத் தீவுச்சேனைப் பகுதிக்கு மாற்றிக் கொண்டு அங்கு ஒதுங்கினர்.

இப்போது தீவுச்சேனை இரகசிய முகாமும் அம்பலமாகிவிட்டது. கருணா அணியை வழிநடத்திய கடைசி பொறுப்பாளர் என்று கூறப்படும் மங்களம் மாஸ்டர் பலத்த காயங்களோடு அங்கிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்.

வெலிகந்த பகுதியில் இனி அவர்களின் செயற்பாடு எப்படி இருக்கும் என்பது தெரியாது. அங்கு மறைந்து வாழும் ஒரு சில உறுப்பினர்களைக் கொண்டு இராணுவம் ஒரு தளப்பிரதேசத்தைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால் அங்கு புலிகளின் புனாய்வு தீவிரமாக விரிவடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் இந்தத் தளப்பிரதேசத்தில் இருந்தவாறு புலிகளுக்குத் தொல்லை கொடுக்கும் தாக்குதல்களை நடத்தும் இராணுவத்தின் திட்டத்துக்குப் பின்னடைவான நிலையே ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் கருணா அணியினர், மற்றும் இராணுவத் துணைப்படைகளைச் சேர்ந்தோரால் பயிற்றுவிக்கப்பட்ட சிறுவர்கள் உட்படப் பல இளைஞர்கள் இன்னமும் ஆயுத பாணிகளாக வெலிகந்த பகுதியில் மறைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. இவர்களை வைத்துக் கொண்டு தொடர்ந்து புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க இராணுவப் புலனாய்வாளர்கள் முயற்சிக்கலாம்.

இதேவேளை,

வெலிகந்தவுக்குப் பொறுப்பான 23ஆவது டிவிஷன் படையணித் தளபதி மாற்றப்பட்டால் நிலைமை மாறிவிடும் என்று இராணுவத்தரப்பில் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

கிழக்கில் அரசுப்படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவுநிலை சீர்குலையக் காரணமானவர் என்று கருதப்படும் மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தனவை கொழும்புக்கு அழைத்துக் கொண்டு அவரது இடத்துக்கு பிரிகேடியர் சனத் கருணாரத்னவை 23 ஆவது 'டிவிஷனின்' பொதுக் கட்டளை அதிகாரியாக நியமிப்பது பற்றி இராணுவ உயர்பீடம் சிந்தித்து வருவதாகச் செய்திகள் கசிந்துள்ளன.

அரச சமாதான செயலகத்துடன் இணைக்கப்பட்டு அதில் பணியாற்றி வரும் பிரிகேடியர் சனத் கருணாரத்ன புலிகளோடு சமூகமான உறவு நிலையைப் பேணும் வகையில் செயற்படுவார் என்றும் கருதப்படுபவர்.

அவருக்கு மேஜர். ஜெனரல் தரப்பதவியை வழங்கி 23ஆவது டிவிஷனுக்குப் பொறுப்பான பொதுக் கட்டளைத் தளபதியாக நியமிக்கும் முடிவு புலிகளைத் திருப்திப்படுத்தும் என்று அரசுத் தரப்பில் கருதப்படலாம். ஆயினும் கிழக்கில் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தம் என்பது இவ்வாறான படைத் தளபதிகளுடன் மட்டும் சம்பந்தப்பட்ட விடயமா என்பதுதான் முக்கியமானது. மாற்றங்களைப் பொறுத்திருந்தே பார்க்க முடியும்.


வெலிகந்த இராணுவப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன அங்குள்ள அதிகாரிகளுடன்.....

— குமரன் —

# உத்தியோகத்துக்கான கல்வியாகவே தமிழையும் கற்கின்ற அவலம் இன்று!



இலக்கியம், அரசியல், கூட்டுறவு, சமூகப்பணி என்று விரிந்த தளத்தில் செயற்பட்டு ஓய்ந்தவர் மூதறிஞர் க.பண்டிதர் நாகலிங்கம். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரான இவர் தமிழ் இலக்கணத்தில் ஆழ்ந்த புலமை உடையவர். அவரது 85 வருட கால வாழ்வனுபவங்கள் இங்கே முத்தான மூத்தவர்கள் பகுதியினூடாக இளம்தலைமுறை முன் விரிகின்றன.

❑ *கேள்வி :-* உங்களைப் பற்றி ......

◆ *பதில் :-* அளவெட்டி எனும் கிராமத்தில் 1920 ஆம் ஆண்டு கனகன் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தேன். என்னுடைய கல்வியினை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கற்றேன். 1950 ஆம் ஆண்டு திருமணம் முடித்தேன். இரண்டு ஆண் பிள்ளைகளும், ஆறு பெண்பிள்ளைகளும் உள்ளனர்.

❑ *கேள்வி :-* தங்களின் ஆசிரியப் பணி பற்றிக் கூறுங்களேன்?

◆ *பதில்:-* நான் சிறிய வயதில் படிக்கின்றபோது என்னுடைய இலட்சியம் ஆசிரியர் தொழிலே. என்னுடைய விருப்பின்படி அத்தொழிலே கிடைத்தது. மன நிறைவுடன் 1942 ஆம் ஆண்டு அளவெட்டி சதானந்த பாடசாலையில் எனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தேன். அங்கு 7 வருடங்கள் என் சேவை தொடர்ந்தது. பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 1949 ஆம் ஆண்டிலிருந்து 26 வருட காலம் சேவையாற்றினேன்.

❑ *கேள்வி:-* தாங்கள் ஆசிரியத் துறையினை தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?

◆ *பதில்:-* ஆசிரியப்பணி என்பது தெய்வீகப் பணி என்று தான் கூற வேண்டும். ஏனெனில், அதன் மூலம் தான் ஒரு சமூகத்தினுடைய மாற்றம் தங்கியுள்ளது. அந்தப் புனித பணியினை 33 வருட காலமாகச் செய்தேன் என்ற ஆத்ம திருப்தியில் இன்று நான் உள்ளேன்.

❑ *கேள்வி :-* தாங்கள் இலக்கணத்துறையில் தேர்ச்சி பெறுவதற்கு பரம்பரையின் பின்னணி காரணமாக அல்லது யாராவது தூண்டுதலாக இருந்தார்களா?

◆ *பதில்:-* பரம்பரைப் பின்னணி என்று கூற முடியாது. ஏனெனில், என்னுடைய தந்தையார் பெரும் விவசாயி. அவருக்கு இத்துறையில் நாட்டமிருக்கவில்லை. நான் சிறியவனாகப் படிக்கின்ற காலத்தில் தமிழ்மொழி மீது அளவு கடந்த ஈடுபாடு இருந்தது. அத்துடன், என்னுடைய ஆரம்பக் கல்வியின் ஞான குரு பன்னாலையைச் சேர்ந்த அமரர் இரத்தின சபாபதி ஐயர். அவரே என்னை இத்துறைக்கு கொண்டுவரத் தூண்டுதலாக இருந்தார்.

அதன் பின்னர் 'உலகியல் கண்ட மாவைக் கௌனியர் வெள்ளைக் கந்தன்' என அழைக்கப்படும் நவநீத கிருஷ்ண பாரதியாரிடம் குருகுலக்கல்வி முறையில் தமிழ் இலக்கணத்தைக் கற்றேன்.

1942 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ் சங்கத்தின் 'பண்டிதர்' பட்டம் பெற்றேன். அதன் பின்னர் தமிழ்ச் மொழியினை வளர்க்க வேண்டும் என்ற அவாவில் கட்டுவனைச் சேர்ந்த நமசிவாய தேசிகர், ஏழாலை இலக்கிய கலாநிதி மு.கந்தையா மற்றும் தும்பளையைச் சேர்ந்த கலாநிதி க.சச்சிதானந்தன் ஆகியோருடன் இணைந்து பல பகுதிகளிலுள்ள மாணவர்களை இணைத்து பிரவேச பண்டிதர், பால பண்டிதர் வகுப்புக்களை நடத்தினோம்.

## முத்தான மூத்தவர்கள் 12

❑ *கேள்வி :-* அந்தக் கால மாணவர்கள் எப்படி தமிழில் ஈடுபாடு உடையவர்களா?

◆ *பதில்:-* உண்மையில் அன்றைய மாணவர்கள் தமிழ் மொழியில் பற்று வைத்திருந்தார்கள் அத்துடன் அதனைத் துறைபோகக் கற்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்கள். நான் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கற்பிக்கின்ற காலத்தில் அங்கு படித்த மாணவர்களின் தமிழ்மொழிப் பற்றை உணர்ந்து கொண்டு 1952 இல் இருந்து 1955 வரை பிரவேச பண்டிதர் பாடத்தினை நடத்தினேன். பாடசாலை நேரம் தவிர்ந்த சனி, ஞாயிறுகளில் தான் வகுப்புகள் நடக்கும். அனைத்து மாணவர்களும் (உயர்தர) ஆர்வத்துடன் பங்குபற்றுவார்கள். அவ்வாறு பங்கு பற்றியவர்களில் பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

❑ *கேள்வி:-* இப்போதைய மாணவர்களின் தமிழ் மொழிப்பற்று - எவ்வாறு இருக்கிறது?

◆ *பதில்:-* இன்றைய காலத்து மாணவர்கள் தமிழ்மொழியினையும் அது சார்ந்த இலக்கணத் துறைகளையும் புறந்தள்ளி ஏதோ ஒரு மாயைக்குள் இருக்கின்றார்கள். அதாவது உத்தியோகத்திற்கான கல்விமுறையையே இன்று மாணவர்கள் பின்பற்றுகிறார்கள். உதாரணமாக பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்கள் தமித்துறையை விசேடமாக் கற்றாலும் அதனைக் துறைபோக கற்க வேண்டும் என்று நினைப்பதில்லை. இதனால், எங்கள் தமிழ்மொழியின் தனித்துவம் அருகி வருவது மனதிற்குக் கவலையளிக்கின்றது. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

❑ *கேள்வி:-* நீங்கள் வெளியிட்டுள்ள நூல்கள் பற்றி....

◆ *பதில்:-* எனக்கு அதிகளவில் நூல்களை வெளியிட விருப்பமில்லை. இருப்பினும் இன்றைய மாணவர்கள் தமிழ் மொழியினை இலகுவாகக் கற்கக் கூடிய வகையில் எனது 80 ஆவது வயதில் 'செந்தமிழ் இலக்கண விளக்கம்' எனும் நூலினை பாகம் இரண்டு வரை வெளியிட்டுள்ளேன். பாகம் மூன்றை இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையிலுள்ளன.

❑ *கேள்வி :-* அரசியலிலும் தங்களின் பங்களிப்பு உள்ளதாக அறிந்தோம். அது பற்றி...

◆ *பதில்:-* ஆம் நீண்ட காலமாக அரசியலில் எனக்கு ஈடுபாடு உள்ளது. 1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இணைந்து கொண்டு அதில் இன்றுவரை அங்கம் வகிக்கிறேன்.

ஆரம்பகாலத்தில் தந்தை செல்வாவுடன் எனக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. அவர் மீது கொண்ட விசுவாசத்தினால் தான் நான் இன்றும் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய அரசியல் பணியினைப் பாராட்டி அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து தந்தை செல்வாவினுடைய விருதினை வழங்கினார்கள்.

❑ *கேள்வி:-* நீண்டகாலமாகக் கட்சி உறுப்பினராக உள்ளீர்களே தேர்தலில் நின்று எம்.பியாக வர முயற்சிக்கவில்லையா?

◆ *பதில்:-* அரசியல் கட்சியிலிருந்து சமூகத்துக்குச் சேவையாற்ற வேண்டுமென நினைத்தேனே தவிர என்னை ஓர் அரசியல்வாதியாக அடையாளம் காட்டவிரும்பவில்லை.

❑ *கேள்வி:-* தாங்கள் ஒரு கூட்டுறவாளரெனவும் அறிந்தோம் அது பற்றிச் சொல்லுங்களேன்...

◆ *பதில்:-* அது ஒரு தற்செயலாக நடந்தது என்று தான் சொல்லலாம். அளவெட்டி மேற்கில் இருந்த பண்டகசாலை ஒன்றில் ஆரம்பத்தில் உறுப்பினராக இணைந்தேன். 1963ஆம் ஆண்டு வலி.வடக்கு பண்டகசாலைகளின் சங்கங்களின் சமாசத்தில் உறுப்பினராக இணைத்துக்கொண்டார்கள்.

அதில் 1966இல் இருந்து 1971வரை தலைவராகப் பணிபுரிந்தேன். பின்னர் 1971 இல் இருந்து உபதலைவராகப் பணியாற்றினேன்.

வலி.வடக்கு பண்டக சாலை அளவெட்டி-மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றியபின் மீண்டும் 1978ஆம் ஆண்டு தொடக்கம் 1990வரை தலைவராக பணிபுரிந்தேன்.

சுமார் 12வருடகாலமாக என்னுடைய கூட்டுறவுப்பணி அமைந்தது.



## இந்த நிலைமை மாற வேண்டும் என்கிறார் மூதறிஞர் நாகலிங்கம்

❑ *கேள்வி:-* சமூகப்பணியில் தங்கள் ஈடுபாடுபற்றி...

◆ *பதில்:-* அளவெட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தில் தலைவராக 1956ஆம் ஆண்டிலிருந்து 1992வரை சேவையாற்றி அளவெட்டி கிராமத்தில் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளேன். பல புதிய வீதிகளைத் தார்போட்டு றோட்டாக்கினேன். இன்று கூட இளம் பெடியங்கள் அளவெட்டியில் கிடக்கிற தார் றோட்டெல்லாம் பண்டிதர் போட்டதுதானே என்று நகைச்சுவையாகச் சொல்லிக்கொள்வார்கள்.

அத்துடன், மட்டும் நின்று விடாமல் அளவெட்டியில் இரு நெசவுசாலைகளைக் கட்டினேன். அளவெட்டி கும்பனாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் 1999 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை திருப்பணிச் சபைத் தலைவராகப் பணிபுரிந்து 2002 ஆம் ஆண்டு ஆலயம் புதுப்பொலிவு பெற்றதுடன் கும்பாபிஷேகத்தை நடத்தினேன் .

ஆலய நிர்வாக சபையைச் சேர்ந்த மா.மயில்வாகனம், செ.செல்வநேசன் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் அத்துடன் 1980ஆம் ஆண்டு தொடக்கம் 1990வரை அளவெட்டி சமாதான சபையின் தலைவராகச் சேவையாற்றினேன்.

ஆனால் இன்று என்னுடைய உடல் நிலைமை காரணமாக இவற்றிலெல்லாம் இருந்து ஒதுங்கியிருக்கிறேன்.

❑ *கேள்வி:-* 85 வயதிலும் திடகாத்திரமாக உள்ளீர்களே! இதற்கு என்ன காரணம்?

◆ *பதில்:-* என்னைப் பொறுத்தவரையில் மனதில் சந்தோஷமிருந்தால் உடல் திடகாத்திரமாக இருக்கும். நான் இன்றைக்கும் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு என்னுடைய மனதில் எதுவித கவலையும் இல்லாததுதான் காரணம். எட்டுப்பிள்ளைகளைப் பெற்றேன். அனைவரும் நல்ல துறைகளில் இறங்கி நன்மக்களாக - என்னுடைய பெயரைக் காப்பாற்றுகின்ற பிள்ளைகளாக - இன்றும் இருக்கிறார்கள். இப்படி இருக்கும் எனக்கு என்ன கவலை?

❑ *கேள்வி:-* இறுதியாக ஐயா இன்றைய இளம் சந்ததியினர்க்கு யாது கூறவிரும்புகிறீர்கள்?

◆ *பதில்:-* என்னைப் பொறுத்தவரையில் நான் கூறவிரும்புவது. தமிழர்கள் என்ற தனித்துவம் தாளாது இருக்க எமது மொழி தமிழ் என்கின்ற உணர்வு என்றைக்கும் அருகிப்போகாது பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

அனைவரும் தமிழ் மொழியினைப் பாதுகாப்பதற்கு பாடுபட வேண்டும். அத்துடன், மாணவர்கள், பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் வகுப்புகளில் கலந்து கொள்ளவேண்டும். அதிலே தேர்ச்சிபெறவேண்டும்.

அதன் மூலமே அருகிப்போகும் தமிழ் இலக்கணத்துறையினை காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

எமது தமிழ்த் தேசியத்தை மீட்டெடுக்க நாம் 40வருடங்களாக பேடிராடுகிறோம். எமது விடுதலை உறுதிப்படுத்தப்படும் தறுவாயில் எமது அடையாளங்களைத் தொலைத்தவர்களாக இருக்கக்கூடாது. அத்தகைய தேசியப் பொறுப்பு இன்றைய இளம் சந்ததியிடம் உள்ளதென்பதை மறக்கக்கூடாது.

இறுதியாக ஒன்றை மட்டும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புவது யாதெனில், தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணத்துறை இரண்டிலும் இன்றைய இளைய தலைமுறையினரை ஈடுபாடுகொள்ள வைக்கவேண்டுமானால் பண்டித பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு பட்டதாரி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கான கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படவேண்டும் இதன் மூலமே மாணவர்களைக் கவர முடியும்.

செவ்வி கண்டவர் : கவிதரன்

# வானத்தில் பறந்த உலங்குவானூர்திக்கு பித்தளைப் பொத்தான் மூலம் சமிக்ஞை...!



தமிழில்
விசியெஸ்ரீ

## அடர்ந்த காட்டில் 04 ஒரு திகில் பயணம்...

"அப்போது நேரம் பிற்பகல் இரண்டு மணியைத் தாண்டியிருந்தது. எங்களது அப்போதைய நிலைமை பெரும்சிரமம் மிக்கதாக அமைந்து காணப்பட்டது. முன்னர் ஒரு சமயம் எனது காலில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை காரணமாக எனது வலது காலில் உட்புறமாக எலும்புடன் சேர்ந்து இரும்புத் தகடொன்று பொருத்தப்பட்டிருந்தது. அதனாலேயே சிரமத்துடனாவது என்னால் நடக்க முடிந்தது. சத்திரசிகிச்சையின் பின்பு எனக்கு இவ்வாறான ஒரு சிரமம் - நீண்டதூரம் நடக்க வேண்டிய சந்தர்ப்பம் - ஏற்பட்டதில்லை. நீண்டதூரம் - அதுவும் கல்லும் முள்ளும் மிக்க, சமதரையற்ற நிலத்தில் நடக்க வேண்டி ஏற்பட்டதால் காலின் உட்புறம் பொருத்தப்பட்டிருந்த தகடு சதைப்பகுதியில் உரோஞ்சியதால் எனக்கு தாங்கமுடியாத வேதனை உண்டாயிற்று. ஆயினும் எனது அந்த அசௌகரிய நிலை குறித்து நான் ஏனைய எவருக்கும் அந்தவேளையில் தெரிவிக்கவில்லை. மற்றவர்கள் நடக்கும் வேகத்தில் நடக்க நான் முயற்சித்தேன். சிரமமாய் இருந்த போதிலும் அச்சமயத்தில் அதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் கிட்டவில்லை" இவ்விதம் தமக்கேற்பட்ட சிரமம் குறித்து ஜெனரல் ரத்வத்த விளக்கிக் கூறியபடியே கதையைத் தொடர்ந்தார்.

சிரமம் மிக்க அப்பயணத்தில் எதிர்கொள்ள நேர்ந்துள்ள ஆபத்து நிலைகுறித்து ஏனையோரின் அச்ச உணர்வைப் போக்கும் நோக்குடன் ஜெனரல் ரத்வத்தை வேடிக்கைப் பேச்சுகளைப் பேசியவாறே ஏனையோருடன் கூடி நடந்தார். தாம் முன்னர் யுத்தகளத்தில் பற்பல சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ள நேர்ந்த பயங்கர அனுபவங்கள் குறித்து விவரித்தவாறே ஏனையோரை உற்சாகப்படுத்தியவாறு ஜெனரல் ரத்வத்தை பயணத்தைத் தொடர்ந்தார்.



பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் உயர் மாநாடுகளில் இடம்பெற்ற சுவாரசியமான சம்பவங்கள் குறித்தும் விவரிக்க அவர் தவறவில்லை. ஒருவரோடொருவர் உரையாடியவாறே நடந்து செல்வதால் பயணத்தின் சிரமம் உறைப்டுவது இல்லை என்ற உண்மை அங்கு அந்த வேளையில் நிதர்சனமாக ஆனது.

"அந்த வேளையில் விமானப் படைக்குச் சொந்தமாக சில உலங்கு வானூர்திகள் ஆகாயத்தில் பறப்பதை எம்மால் காண முடிந்தது. எமது நிலைமை குறித்து ஏதோ ஒரு வகையில் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் எட்டியிருக்க வேண்டும். அதனால், தான் இவ்விதம் எம்மைத் தேடிப் புறப்பட்டு உள்ளனர்" என்றவாறு சிந்திக்கத் தலைப்பட்டோம். ஆனால், அதேவேளை மனது மற்றொரு கோணத்திலும் சிந்திக்கிறது. ஒருவேளை விடுதலைப் புலிகளால் வெடிக்க வைக்கப்பட்ட உலங்கு வானூர்திக்குள் நாமும் அகப்பட்டிருக்கக் கூடுமென அவர்கள் தவறாகக் கணிப்பிட்டு தமது முயற்சியைக் கைவிடக் கூடுமெனவும் ஒரு கணம் எண்ணத் தலைப்படுகிறது மனது.

"எமது தலைக்கு மேலாக உயரத்தில் உலங்குவானூர்தி இருந்த போதிலும், நாம் கீழே இருப்பது குறித்து அவர்களுக்கு எவ்வித சமிக்ஞை கொடுக்கத்தக்க வாய்ப்பெதுவும் கிட்டாததால் வெறுமனே கைகளை மட்டும் அசைத்துக்காட்டி நாம் இருக்குமிடம் குறித்து தெரிவிக்க முயன்றோம். இதில் வேறொரு சிக்கலும் இருந்தது. உலங்குவானூர்திகள் குறிப்பிட்டதொரு உயரத்துக்குக் கீழே தாழப் பறப்பது அந்தவேளையில் பாதுகாப்பற்றதாகக் கருதப்பட்டது. அவ்விதம் தாழப் பறந்து எம்மைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் விமானிகள் ஈடுபட்டால், எந்தவேளையிலும் விடுதலைப் புலிகளின் கலிபர் துப்பாக்கி வேட்டுக்கு உலங்குவானூர்தி உட்பட வேண்டிய பாதுகாப்பு அச்சுறுத்தல் அவ்வேளையில் அப் பகுதியில் காணப்பட்டது. இதனால், உயரப் பறந்த படியே எம்மை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி அவர்களுக்கு அத்தனை இலகுவாக அமையவில்லை"

சம்பவத்தை இவ்விதம் விவரித்து வந்த ஜெனரல் ஒரு கணம் பெருமூச்சு விட்டு ஆசுவாசப்பட்டுக் கொள்கிறார்.

அந்த காட்டுப் பகுதியில் ஜெனரல் ரத்வத்தை குழுவினரால் மேலும் குறிபிட்டதொரு தூரம் வரை வவுனியா நோக்கிய திசையில் முன்னேற முடிகிறது. இடையில் ஓடையொன்ற குறுக்கிடுவதைக் கண்டு அக் குழுவினர் அதனருகில் சிறிது நேரம் இளைப்பாற முடிவு செய்கின்றனர்.

"நான் இந்த ஓடையில் குளிக்கப் போகிறேன்"

திடீரென்று உற்சாகம் மேலிட ஜெனரல் ரத்வத்தை இவ்விதம் கூறுகிறார்.

"ஐயோ, வேண்டவே வேண்டாம் சேர்... அது பெரும் ஆபத்தான விஷயம்...."

அருகில் இருந்த இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்த பதற்றத்தோடு இவ்வாறு கூறுகிறார்.... சலசலத்தோடும் அந்த ஓடை நீரில் இறங்கி உடம்பில் தண்ணீரை வாரியிறைத்தால் தான் களைப்புத் தீரும் போலிருந்தது ஜெனரலுக்கு... வெய்யிலில் நடந்ததால் ஏற்பட்ட களைப்பு ஒருபுறம்..... நீண்டதூரம் நடந்ததால் ஏற்பட்ட ஆயாசம் வேறு... போதாததற்கு ஊனமுற்ற காலில் ஏற்பட்ட வேதனை பயங்கர வலியைக் கொடுத்ததால் ஜெனரல் ரத்வத்த சிரமப்பட்டார்....

கடைசியில் அரைமனதுடன் ஜெனரல் ரத்வத்தையின் விருப்பத்துக்கு ஏனையோர் சம்மதிக்க நேர்ந்தது.

ஒருவாறு எல்லோரும் அந்த ஓடை நீரில் தமது உடம்மைக் கழுவிக் கொண்டனர்.

களைப்பு ஓரளவு நீங்கி மனதில் புதுத்தென்பு பிறந்தது. "மேலும் சிறிது தூரம் முன்னேறியிருப்போம். திடீரென்று எம்மிடமிருந்த 'வோக்கி ரோக்கி' சத்தம் எழும்பியது. அது எமக்கு முன்னர் வவுனியா சென்றடையும் நோக்கில் சென்றவர்களால் ஏற்படுத்தப்பட்ட அழைப்பு; தாம் பாதுகாப்பாக வவுனியாவுக்குச் சென்றடைந்து விட்டதையும், எமது நிலைகுறித்து உரிய இடத்தில் தெரிவித்து விட்டதையும் அவர்களது தகவல் மூலம் தெரிய முடிந்தது மனதுக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் அளித்தது. வவுனியா பொலீஸ் நிலையத்தில் இருந்த பெண் பொலீஸ் அதிகாரிக்கு இச் சம்பவம் குறித்து எதுவும் தெரிந்திருக்கவில்லை. 'வோக்கி ரோக்கி' யில் நாம் தற்போது தரித்திருக்கும் இடம் பற்றி விரிவாகத் தெரிவித்தால் அது ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் உணர்ந்தோம். அதனால், சங்கேத மொழியில் அது பற்றித் தெரிவிக்க நாம் முயன்றபோதும் அப்பெண் பொலீஸ் அதிகாரியினால் அதைக் கிரகிக்க முடியவில்லை. மிகவும் இக் கட்டான நிலையில் ... விரிவாக நாம் இருக்குமிடத்தை தெரிவித்தால் இடையில் விடுதலைப் புலிகள் அந்த உரையாடலை இடைமறித்து ஒட்டுக் கேட்க வாய்ப்பாகி விடும். ஏதோ எமது அதிர்ஷ்டம்... அந்தவேளையில் வவுனியா பொலீஸ் நிலையத்தில் கடமையில் இருந்த உடுவெல என்ற அதிகாரி அப்பெண் பொலீஸ் அதிகாரியிடமிருந்த 'வோக்கி ரோக்கி' யில் எம்முடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். பொலீஸ் மா அதிபர் ராஜகுரு சங்கேத பாஷையில் எமது இருப்பிடம் குறித்துத் தெரிவித்த தகவலை அந்த அதிகாரியால் சரியாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது....

நல்லவேளை.... தகவலை எம்மால் உரிய இடத்துக்கு அனுப்ப முடிந்ததால் நிம்மதிப்பெருமூச்சு விட்டுக்கொள்கிறோம்.

"அந்தவேளையில் நான்கு உலங்கு வானூர்திகள் அப்பகுதியில் எம்மைத்தேடி வானத்தில் நோட்டமிட்டவாறு பறக்கின்றன. ஆனால், நாம் இடைநடுவில் தரித்து நிற்கும் இடத்தை அவர்களால் சரியாக அடையாளம் காண முடியவில்லை. அதேசமயம், வெகு தூரத்துக்கப்பால் உலங்குவானூர்திகள் நிலத்தில் தரையிறங்குவதையும், அவற்றிலிருந்து பாதுகாப்புப் படை வீரர்கள் நிலத்தில் குதித்து எம்மைத் தேடிக் கண்டு பிடிக்கும் நோக்கத்தில் அப்பகுதியில் பல திசைகளில் பிரிந்து செல்வதையும் எம்மால் தெளிவாகக் காண முடிகிறது. ஆனால், அவர்களுக்கு நாம் தரித்து நிற்கும் இடம் குறித்துச் சரியான தகவலைத் தெரிவிக்க எந்தவொரு மார்க்கமும் தெரியவில்லை. கைகளால் சைகை செய்தோ உரத்துச் சத்தமிட்டோ எதுவித பலனும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் கண் பார்வைக்குப் புலப்படும் தூரமே யாயினும், அவர்கள் தரையிறங்கியுள்ள இடம் நாம் தரித்து நின்ற இடத்திலிருந்து சுமாரான தொலைவில் இருந்தது. அதுவுமின்றி ஒருவேளை எமது நடமாட்டம் விடுதலைப் புலிகளின் காதுகளுக்கு எட்டிவிட்டால் பாதுகாப்புப் பிரிவினர் எம்மைக் கண்டு பிடித்துக் காப்பாற்று முன்னர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிக் குண்டுகள் எம்மை மேல் உலகத்துக்கு அனுப்பி வைத்துவிடும்.

"இந்த சமயத்தில் தான் பொலீஸ் மா அதிபர் ராஜகுருவுக்கும் அவரது உதவியாளருக்கும் புதுமையான யோசனையொன்று மூளையில் தட்டுப்பட்டது. அதையும் பரீட்சித்துப் பார்த்துவிட விரும்பி அவர்கள் உடனடியாகவே செயலில் இறங்கினர். தமது உத்தியோக பூர்வ உடையில் வைத்துக் தைக்கப்பட்டிருந்த பித்தளைப் பொத்தான்கள் மூலம் எம்மைத் தேடி ஆகாயத்தில் வந்து கொண்டிருந்த உலங்குவானூர்திகளுக்கு நாம் தரித்து நிற்கும் இடத்தை தெரியப்படுத்தும் முயற்சியே அது. முதலில் அவர்கள் இருவரும் தாம் உடலில் அணிந்திருந்த 'கோர்ட்' டுக்களைக் கழற்றி அவற்றில் தைக்கப்பட்டிருந்த பித்தளைப் பொத்தான்களை சூரிய ஒளி பிரதிபலிக்கும் விதத்தில் சூரியனை நோக்கிப் பிடித்துக் கொண்டு மெல்ல அங்குமிங்கும் சிறிது அசைத்து சைகை காட்டினர். என்ன ஆச்சரியம். எம்மைக் கண்டு பிடிக்கும் நோக்கில் ஆகாயத்தில் பறந்தபடியே காட்டின் தரைப்பகுதியை நோட்டமிட்டவாறு உலங்குவானூர்தியை இயக்கிக் கொண்டிருந்த ஒரு விமானி பொலீஸ் மா அதிபர் சிரமப்பட்டு வழங்கிக் கொண்டிருந்த ஒளிச் 'சிக்னல்' லை அவதானித்துவிட்டார். ஏதோ எமது அதிர்ஷ்டம் என்றே எண்ணத் தோன்றியது.

அந்தவேளையில் என்னால் காலைத்தூக்கி மேலும் ஒரு அடி முன்னே வைக்க முடியாத நிலை ஊனமடைந்த எனது வலதுகாலில் தாங்க முடியாத வேதனை, கால் பெருத்து வீங்கிப்போய் விட்டது. நிலத்தில் நிமிர்ந்து நிற்கத்தானும் முடியாத நிலையில் நான் நிலத்தில் 'பொத்தென' உட்கார்ந்து கொண்டேன்.

அந்தவேளையில் தான் உலங்கு வானூர்தியொன்று நாம் நின்றிருந்த இடத்துக்கு அண்மையில் தரையிறங்கியது. பொலீஸ் மா அதிபர் சூரியனின் ஒளிக் கதிர்களைத் தமது பித்தளைப் பொத்தானில் பதியவிட்டு வழங்கிய ஒளிச் 'சிக்னலை'ப் பெற்றதால் அந்த விமானியால் எமது இடத்தை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ள முடிந்துள்ளது. ஏதோ எல்லாம் எமது அதிர்ஷ்டமே என எண்ணிக் கொண்டேன்....."

ஜெனரல் ரத்வத்தை ஒரு பெரு மூச்சு விட்டவாறு பழைய சம்பவத்தின் நினைவில் ஒரு கணம் மூழ்குகிறார்.

"உலங்குவானூர்தியைச் செலுத்தி வந்த விமானி தரையில் குதித்து நேராக என்னிடம் வந்து எனது கைகளைப் பற்றிக் குலுக்குகிறார். என்னுடன் கூடவுள்ளோரை விரைவாகச் செயற்படும்படி பணிக்குமாறு என்னை அவர் கேட்டுக் கொள்கிறார். ஆயிற்று;..... எல்லோரும் இயந்திரக் கதியில் இயங்க ஆரம்பிக்கின்றனர்... முதலில் எல்லோருமாகச் சேர்ந்து என்னைத் தூக்கிச் சென்று அந்த உலங்கு வானூர்தியில் ஏற்றினர். ஏனையோர் சகலரும் ஏறிக் கொண்டதையடுத்து உலங்குவானூர்தி வானத்தில் மேலெழுகிறது. எமது பயங்கரமான, உயிராபத்து மிக்க அப்பயணம்... உயிர்ப் போராட்டம் முடிவுக்கு வந்ததை எண்ணி எம்மில் சகலரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்கிறோம்.... ஒரு சிறிய நேர பறப்பின் பின்னர் உலங்குவானூர்தி வவுனியா விமானப்படைத்தளத்தில் தரையிறக்கப்பட்டது. இரண்டாயிரம் பேர் வரையிலான பாதுகாப்புப் படை வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் எமது உலங்கு வானூர்தியை சூழ்ந்து கொள்கின்றனர். அந்த கணத்தில் சகலரும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் திளைப்பதைக் காண மனதுக்கு இதமாய் இருக்கிறது...

அதிகம் நீட்டுவானேன்?...... அடுத்து சம்பவங்கள் துரிதகதியில் இடம் பெற்றன.... கொழும்பிலிருந்து விசேட மருத்துவக் குழுவொன்று வந்து சேர்ந்தது.... எம்மை பரிசோதித்து உரிய சிகிச்சை அளிக்கும் நோக்கில் அவர்கள் விரைந்து வந்திருந்தனர்.... விமானப் படைத்தளபதி ஒலிபர் ரணசிங்க கொழும்பிலிருந்து அவசரமாகப் புறப்பட்டு வவுனியா வந்து சேர்ந்தார்.... அலரி மாளிகையில் ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொள்ள நான் முயன்றபோதும் அச்சமயம் அவர் அங்கிருக்கவில்லை. அவ்வேளையில் கூட்டுப்படைத் தலைமையகத்திலிருந்து எம்மைப்பற்றி தகவல் அறியும் ஆவலுடன் ஏனைய பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்பட்டுக் கொண்டிருந்த தாகப் பின்னர் தெரிந்து கொண்டேன்.

அந்த அளவுக்கு நாட்டின் உயர் அரசியல் தலைவர்கள் முதல், பாதுகாப்புப் படைகளின் சகல மட்ட ஊழியர்களும் கூட என் மீது எவ்வளவு தூரம் பற்றும் மதிப்பும் வைத்திருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ள- நேரில் தெரிந்து கொள்ள எமக்கேற்பட்ட இத் திடீர் விபத்து எனக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததல்லவா?

அந்த வகையில் எதுவும் நன்மைக்கே என எனது மனது எண்ணி ஆறுதலடைகிறது.

*முற்றும்*

# மலர்வு மரணத்துக்காகவா?

முகையின் எல்லை வரை
தாங்கிக்கொள்கின்றேன்
நாளைய விடியலுக்கு முன்பாக
மலர்வதற்கு

இறைவனின்
சிரசு தொடலாம் – அவன்
பொற்பதம் நாடித் தாவப்படலாம்
பூசை நிறைவுறும் வரை

குழந்தையின் கையில்
சித்திருக்கலாம் – அதன்
அழுகை தீரும்வரை

குமரியின்
கார்குழலில் சூடப்படலாம்
வாடிடும் வரையில்

மேனி சிவத்து
மகரந்தக் குறிநீட்டி
தேன் சொரியலாம்
வண்டு வந்து தீண்டும் வரை

வாசனைத் திரவியத்திற்காய்
மெய்யெல்லாம்
கசக்கிப் பிழியப்படலாம்
நறுமணம் தீரும் வரை

பிணங்களின் மீதும்
சொரியப்பட்டிருக்கலாம்
சுடுகாடு வரை.

இப்படி
எங்களில் இருந்து
கண்ணீர் செந்நீர்
உறுஞ்சப்படுகின்றன.
வேருக்கு நீரின்றி

மலர்வென்பது
மகிழ்வானது தான்– அது
உதிர்ந்து வாடிப்போகும் வரையில்

ச.தேவிகன்

# யாழ்.பாணம்



## பந்தம்

நம்மில் சிலபேர் முக்கிய சந்தர்ப்பங்களில் யதார்த்தத்தைப்புரிந்து கொள்ளத் தவறிவிடுவதுண்டு.

உண்மையில் தெரியாது தானோ, அல்லது தெரிந்தும் தெரியாதது போல் பாசாங்கு செய்கிறார்களோ என நிச்சயப்படுத்திக்கொள்ள முடிவதில்லை.

செய்யும் தொழிலில் ஆர்வமும், விடாமுயற்சியும் மட்டுமன்றி நேர்மையும் இருப்பின், என்றோ ஒரு நாள் வாழ்க்கையில் உயர்ச்சியும் வெற்றியும் கிட்டுவது நிச்சயம்.

இதனாலேயே இன்று பதவியொன்றுக்கான தேர்வின்போது கல்வித்தகைமைக்கும் மேலாகக் குறிப்பிட்ட அத்துறைசார் அனுபவத்துக்கு முன்னுரிமை வழங்கும் நடைமுறை கைக்கொள்ளப்படுகிறது.

அந்த அளவுக்கு வெறுமனே ஏட்டுப்படிப்பால் பெறும் தராதரங்கள் குறிப்பிட்டதொரு வரையறைக்குள் மட்டுமே பயனளிப்பதைக் காண்கிறோம்.

அதேவேளை, தொடராக நீண்ட காலம் மேற்கொள்ளும் தொழிற் பயிற்சி, சராசரி மதிநுட்பம் மிக்க தொழிலாளியின் திறமையைப் புடம்போட்டுக் காட்டும்; வெளிப்படுத்தி வெற்றியளிக்கும்.

இதனால் குறிப்பிட்டதொரு துறைசார் தொழில் திறனை கல்வித்தராதர அடிப்படையில் குறைத்து மதிப்பிடுவது நியாயமல்ல. வாழ்க்கை அனுபவங்களே யதார்த்த உண்மைகளைப் புரியவைக்கும் திறன் கொண்டவை.

அவ்வித யதார்த்த உண்மையொன்றை, வாழ்க்கை அனுபவமொன்றினூடாக வெளிக்கொணரும் முயற்சியே இன்றைய யாழ்.பாணம்.

அவர் அந்தக் காலத்துப் பயிற்றப்பட்ட ஆசிரியர்.

சும்மா சொல்லக்கூடாது கற்பித்தல் தொழிலுக்கான அத்தனை இலட்சணங்களுடனும், கடமையுணர்வும் விசுவாசமும் மிக்க நல்லாசிரியராய் பேர் பெற்றவர்தான். அவரிடம் கற்றவர்கள் அரச துறை உத்தியோகங்களில் இன்று பிரகாசிப்பது இக் கூற்றை மெய்ப்பிக்கும். ஆனால், நடைமுறை வாழ்க்கையில் தமது சொந்த வாழ்க்கையில் அவரால் வாழ்க்கையின் ரகசியத்தை - யதார்த்தத்தை சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லையே!

அந்தவேளையில் அரசதுறையில் ஆசிரியத் தொழிலால் மதிப்பையும் மரியாதையையும் ஈட்டமுடிந்த அளவுக்குப் பொருளீட்ட முடிந்ததில்லை; மட்டான வருமானம். ஆசைக்கும் ஆஸ்திக்கும் என ஒரேயொரு மகள் மட்டுமே; அவருடன் உடன் பிறந்த ஒரேயொரு தங்கை இளவயதில் கணவனை இழந்து, கைக்குழந்தையான ஒரே மகனுடன் தன் அண்ணனின் வீட்டருகில் தனக்குரிய வீட்டில் தனித்து வாழ நேர்ந்தாலும், தன்மானத்துடன் துணிந்து நின்று தன் அண்ணனிடம் எக்கடமையும்படாது மகனை வளர்த்தெடுத்தமை கால ஓட்டத்தின் பதிவுகள்.

நான் அவர்களுக்கு உறவினன் அல்லன்; அயலவன். ஆதலால், எனக்கும் அவர்களுக்கும் மட்டுப்பட்ட தொடர்பும், பழக்கமும் மட்டுமே. ஆசிரியர் ஒரு வித்தியாச மான போக்கானவர். இது எனது பல நாள் அனுபவத்தின் பலனான கணிப்பு.

ஆசிரியர் வெளியில் மட்டுமல்ல வீட்டிலும் கூடப் பட்டும் படாமலும் ஒதுங்கி வாழும் இயல்பு கொண்டவர். உறவினர்களின் சுக துக்கங்களில் கூட - ஏன் அயலில் வாழும் விதவைத் தங்கை, அவளது மகன் என்ற நெருங்கிய இரத்தபந்தம் கூட அவர் ஒட்டிப் பழகியதை அறியார்கள். தானுண்டு - தன் மனைவி - தனது மகள் இதுவே அவரது உலகம். தாமரை இலைத் தண்ணீர் போன்று அவர்களுடன் கூட ஒட்டி உறவாடாத வாழ்க்கை முறை அவருடையது.

அவரது விதவைச் சகோதரியின் மகன் அவருக்கு மருமகன். தன் சின்ன வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டான். எவரிடமும் கையேந்தாது - கடமைப்படாது தனது தாயை வாழவைக்கும் குறிக்கோளுடன் ஆவேச உணர்வில் மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்றில் பயிற்சியாளனாய்ச் சேர்ந்தான். தனது இடைவிடாத முயற்சியால் முன்னேறி உதவியாளனாகிப் பின்னர் கைதேர்ந்த தொழில்நுட்பக் கலைஞனாகித் தனது இலட்சியத்தில் வெற்றிபெற்று வசதிவாய்ப்பைத் தேடித் தாயைக் குறையின்றி வாழ வைத்து மகிழ்ந்த போதிலும் ஆசிரியரின் கணிப்பில் அவன் என்றைக்கும் படிக்காதவன்தான்...

காலதேவன் எவர்பொருட்டும் காத்திருப்பதில்லையே!

திருமண வயதை எட்டி நின்ற தனது மகளுக்குத் துணைதேடி வாழ்க்கை அமைத்துக்கொடுக்க அலையா அலைச்சல்பட்டார் அந்த ஆசிரியர். ஆனாலும் அவர் மனதில் அவரது முறை மருமகன் இரத்த உறவு எதுவித சலனத்தையும் ஞாபகத்தையும் ஏற்படுத்த இல்லை.

கடைசியில் ஏதோ ஒரு விதத்தில், தன் தராதரத்தை ஒட்டிய பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவருக்குத் தனது மகளை மண முடித்துக் கொடுக்க அவரால் முடிந்தது.

இது ஏழு ஆண்டுகளுக்கு முன் இடம் பெற்ற சம்பவம். இன்று தொழில் நிமித்தம் தூர இடத்து மாவட்ட மொன்றில் மனைவி, பிள்ளைகளுடன் வாழும் மருமகன் மனது விரும்பினா லும் மாமன்மாமிக்கு உதவ முடியாத நிலை.

மாதா மாதம் ஓய்வூதியம் கிடைத்த போதிலும் பாரிசவாதத் தில் படுத்த படுக்கையாய் கிடக்கும் ஆசிரியருக்கும், வயதான அவரது மனைவிக்கும் மனம் கோணாது பணிவிடை செய்கிறான். அவரது இரத்த உறவு மருமகன் அவரது சகோதரியின் மகன்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்றொரு முதுமொழி உண்டு.

ஆனால், இன்றைய உலக வாழ்வு நடைமுறையை நோக்கும் வேளை, யதார்த்தத்தை உணர்ந்து வாழ வேண்டியதன் அவசியம் மனதை உறுத்துகிறதல்லவா?

மனித வாழ்க்கையின் ஆதாரமே அடிப்படையே நிம்மதியும் மகிழ்ச்சியும் வேண்டுவதே. புறத் தராதரங்களைப் பெரிதாகக்கருதி இரத்த பந்தங்களை மறந்து செயற்பட விளையும் ஆசிரியர் போன்றோரின் வாழ்க்கை பூரணத்துவம் பெற இயலாமற் போனமைக்கான காரணம் தேடி மனது அலைபாய்கிறது.

*'தானாடா விட்டாலும் தன்சதை ஆடும்'* என்பது பொய்யல்ல என்பதை நிரூபிக்கும் விதத்தில் இப்போது அந்த ஆசிரியரின் இரத்த பந்த மருமகன் மாமாவை வழமையான மாதாந்த 'கிளினிக்'குக்கு வைத்தியசாலைக்குக் கூட்டிச்செல்ல வாகனம்பிடித்து வரப் போய்க் கொண்டிருக்கிறான். ஆசிரியரால் தனது தவறை நியாயப்படுத்திக் கொள்ளவே முடியாது.

Just as Slip, Not a fall என்றொருமுதுமொழிஉண்டு. தவறுகள் எல்லாம் குற்றங்கள் அல்ல என்று மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டியது தான்.

பொன்வேலன்.

# சுயநிர்ணயத்துக்கான அரங்கப் பயணம்....

21.02.2005 அன்றிரவு மாலைப்பொழுதில் கூடிய அந்தக் குழாம் பல நினைவுகளைக் கிளறியிருக்கிறது. உயிர்ப்புடன் உள்ள ஒரு அரங்க வரலாறு திரும்பிப் பார்க்கப்படுகிறது. இந்தக் குழாம் சற்று வித்தியாசமானது; விசித்திரமானது. யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன், அதே துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் ரி.சனாதனன், ப.அகிலன், பல்கலைக்கழக அரங்கியல்துறை மாணவர்கள், ஆசிரியர்கள் சிலர் , அரங்குச் செயற்பாட்டு குழு என்ற சுதந்திர அரங்க இயக்கம் இவர்களோடு யாழ் மத்திய கல்லூரி உயர்தர மாணவர்கள், 10 ஆம் தர மாணவர்கள், பெண்கள் பண்பாட்டு மையத்தில் இணைந்துள்ள இளம் பெண்கள் (இவர்கள் எமது கல்விச் சமூகத்தால் கொடூரமாகக் கல்வியுரிமை மறுக்கப்பட்டு இடைநடுவில் பள்ளிப் படிப்பைக் கைவிட்டவர்கள்). இவர்கள் எல்லோரையும் இணைத்து நிற்கும் மென்மையான ஒரு நூலாக, நேர்வழி நடத்திச் செல்லும் கோலாக கலாநிதி.க.சிதம்பரநாதன் நின்றிருந்தார். அந்த மெல்லிய மின்னொளியில் இந்தக் குழாத்தினர் பாடினர், ஆடினர், அழகாய் ஆரோக்கியமாய் கதையாடல் புரிந்தனர்.

*அலைகளுக்கும் காற்றுக்கும்*
*அஞ்சார்கள் மீனவர்கள்*
*சிங்கத்திற்கும் ஓநாய்க்கும்*
*அஞ்சார்கள் வேட்டைக்காரர்*

என்று பாடியது நினைவிருக்கிறது. வேட்டையாடி வாழ்வு நடத்திய பண்டைச் சமூகத்தினர் தமது வேட்டைக்கான அளிக்கை பற்றிய அனுபவத்தை நெருப்பு வெளிச்சத்தில் கூடியிருந்து கதைத்து, பகிர்ந்து, பாடி, ஆடி, உண்டு மகிழ்ந்து, சக்தி பெற்று புத்துணர்ச்சியுடன் நாட்களை ஒட்டியதை மானிடவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

பண்டைத் தமிழ் சமூகத்திலும் கூத்தர், பாணர், பொருநர் போன்ற கலைக் குழுக்கள் அளிக்கைகளில் ஈடுபட்டதும் கூடி வாழ்ந்ததும் இலக்கியச் சான்றுகளாக உள்ளன.அவற்றையெல்லாம் அன்று நடந்த இந்தக் குழாத்தினரின் நடைமுறைகள் நினைவுபடுத்தின. இவர்களுக்குள்ளும் ஓர் உயிர்ப்பான உறவு இருந்தது. பாசம் கொப்பளித்தது. பரவசமான பகிர்வுகள் நடந்தன. ஆரோக்கியமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. தெளிவுகள் பிறந்தன. முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலைமைகள் எல்லாம் திடீரென்று வந்து சேர்ந்த விவகாரங்கள் அல்ல. இதற்குப் பின்னால் ஒரு நல்ல வழி நடத்தலில் நீண்ட காலம் அர்ப்பணிப்புடனும் கொள்கைப் பற்றுதியுடனும் நிகழ்ந்த உழைப்பின் கதையொன்று உள்ளது. அது வேறொரு நேரத்தில் விரிவாகப் பார்க்கப்பட வேண்டியது. இவற்றின் மையமாய் கலாநிதி சிதம்பரநாதன் நின்று கொண்டுள்ளார் என்ற உண்மை முக்கியம்.

இவரது வழிப்படுத்தலில் இன்று 'செவ்விளக்கு' அளிக்கை நிகழ்ந்திருக்கிறது. இதற்குக் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்கு முன்னால் 'பேசாப் பொருள்' 'ஆன்மவிசாரம்... அளிக்கைகள்' திறந்த வெளிச் சிறைச்சாலையில் நாம் வாழ்ந்தோம் என்ற உணர்ச்சிக் கிளர்வுகளை ஏற்படுத்திப் பொங்கு தமிழில் பல்கலைக்கழகத்தையும் மக்களையும் பெருக வைத்தது.

அதற்குள் ஐந்து வருடங்களுக்கு முன்னால் 'பொங்குகால்' அளிக்கைசெய்யப்பட்டுப்பண்பாட்டுப் பவனியாய் வலம் வந்திருக்கிறது. அதற்கும் ஐந்து வருடங்கள் முன்னால் 'உயிர்த்த மனிதன் கூத்து' தமிழ் விடுதலை போரில் தன் பங்களிப்பைச் செய்திருக்கிறது. அதற்கும் ஐந்து வருடங் களுக்கு முன்னால் 'மண்சுமந்த மேனியர்' ஈழத் தமிழ் நாடக வரன்முறையின் போக்கை மாற்றிப் புதுவடிவம் கொள்ளவைத்து, ஈழத்தேசிய போராட்டத்தின் அரங்கியல் தேவையை உணர்த்தி நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்படைந்த காலத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கும் போராட்டத்துக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தே வருகிறது. இந்தத் தொடர்பை ஆரோக்கியமானதாய் பேணுவதில் அரங்கு ஒவ்வொரு கட்டங்களிலும் தன்னை நிலைநிறுத்தி வருகிறது.

இந்த வரலாற்றுத் தேவையின் கலைப்பயண வழியில்தான் இன்றைக்கு செவ்விளக்கு அளிக்கை முடிந்த பின்னான அந்தக் கலைக்குழாத்தின் கூடல் நிகழ்ந்தது. இந்தப் படைப்பு நாடகத்துறை இறுதி வருடத்துக்கான மாணவர்களின் பட்டப் படிப்புத் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக அவர்களால் தயாரிக்கப்பட்டது. எனினும், இது பரந்துபட்ட சமூகத்தைத் தன்னுள் ஈர்த்துள்ளது முக்கியம்.

19–20.02.2005திகதிகளில் செவ்விளக்கு அளிக்கை செய்யப்பட்டது. 'ரெட்லன்ரேன்' என்ற சீன நாடகத்தின் மொழிபெயர்ப்பு இது. இந்தத் தயாரிப்பின் 40 வீதமான வேலைகளைத்தான் முடித்துள்ளோம். மிகுதி வேலைகள் இன்னும் செய்யப்படவேண்டும் என்று ஆற்றுகைக் குழாம் தெரிவித்தது.

எது எப்படியோ 22.02.2005 இலங்கையில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட மூன்றாண்டுக்கான நினைவுகள் கொண்டாடப்படுவதற்கு இரு நாள்கள் முன்பாய் யுத்த நிறுத்த மாயைக்குள் ஏமாற்றப்பட்டு இருளடைந்து கிடந்த மக்களின் மனங்களில் செவ்விளக்கு ஒளிபாய்ச்சத்தொடங்கியிருக்கிறது. இதுவே அரங்கின் தேவை. இந்திய மாயைக்குள்ளிருந்து மக்களை மீட்டெடுக்க மாயமான் தெருவெளி அரங்கு 80களின் நடுப்பகுதியில் அளிக்கை செய்யப்பட்டதை இங்கு நினைவு படுத்தலாம்.

*சந்ததி சந்ததியாக நாம்*
*போராடி போராடி*
*முன்செல்வோம்*

என்று பாடிப் பங்கு கொள்ள வைத்து அரங்க வெளிக்கு அழைத்துச் சென்றனர் ஆற்றுகையாளர்கள்.

*புரட்சியின் பேரொளியில்*
*இருளார்ந்த இரவு*
*முடிவுறும் ஓர் நாள்*

என்று நம்பிக்கை கூறி இருள் விரட்டத் தொடங்கி இருக்கிறது செவ்விளக்கு. மண்சுமந்த மேனியர் காலத்திலிருந்து ஒவ்வொரு கட்டங்களிலும் இந்த விடுதலைக்கான அரங்கில் இணைந்து கொண்டவர்கள் செவ்விளக்கு அளிக்கையின் பின்னான குழாத்தினரின் கூடலில் சேர்ந்திருந்தனர். இது ஓர் ஆரோக்கியமான கூடல்; அதிசயமான உறவுப்பலம்.

செவ்விளக்கு அளிக்கையின் போது பார்வையாளர் மத்தியில் கையடக்கத்தொலைபேசி மணி அடித்ததும் மற்றப்பார்வையாளர்கள் இப்போ போய் ரெலிபோன் கதைக்க வேணுமா? என்று சினம் கொண்டனர். சினிமாக் கொட்டகைகளில் போனால் கூட கையடக்கத் தொலைபேசிகளின் அநியாயங்கள் தாங்க முடியவில்லை என்ற சூழலில் தான் செவ்விளக்கு இத்தகைய அனுபவத்தையும் தந்திருக்கிறது. ஒவ்வொரு ஆற்றுகையாளரும் தம்மை அர்ப்பணித்து அளிக்கை செய்தபோது மக்கள் அரங்கோடு சேர்ந்து இருந்தார்கள் பயணித்தார்கள். பல்வேறு பரிமாணங்களில் ஒரே தேசியக் கொள்கையோடு வளர்ந்து வரும் எமது அரங்கு சுயநிர்ணயத்துக்கான அரங்காய் பரிணமித்து நிற்கிறது. இது நிமிர்ந்து செல்ல இன்னும் கருமையாய் அர்ப்பணித்து உழைக்க வேண்டியதன் தேவை நல்ல மனிதர்கள் முன்னே விரிந்துகிடக்கிறது.

செ.விந்தன்

# சீறிச் சினந்தது கலேராஸ்....!! ஆய்வுக் குழுவினர் அகப்பட்டனர்!!



## உலகை உலுக்கிவரும் இயற்கை அனர்த்தங்கள் 11

நாலாயிரம் மீற்றர் உயரத்தில் ஒரு பொலீஸ் 'போஸ்ட்' இருக்கிறது. அந்த இடத்திலிருந்து அந்தப் பிராந்தியம் முழுவதையும் நோட்டமிடும் வாய்ப்புகள் வசதியானவை. Amphi theatre என இந்த உலைமுகம் அழைக்கப்படுகிறது. சுற்றவர வட்டமான, உயரமான பாரிய விளிம்பையும் மத்தியில் ஆழமான மைதானத்தையும் கொண்டு ஒரு பெரிய ஸ்ரேடியம் போல காட்சி தருதலால் இவ்வாறு இது பெயரிடப்படுகிறது.

விளிம்பில் நின்றுகொண்ட ஒரு தொலைக்காட்சி நிருபர் இனி எப்போது இது வெடிக்கும் என்கின்ற கேள்வியை விஞ்ஞானியான பற்றிமோத்திடம் உருவி விட்டாள். நாளை வாசிக்கும் செய்தியில் ஓர் ஊகத்தை சரிவர வெளியிடுதலே அவளது கேள்வியின் நோக்கமாக இருக்கலாம்.

இது அடுத்த வாரமும் வெடிக்கலாம், ஐந்து வருடங்களுக்கு அமைதியும் காக்கலாம். இப்போதைக்கு இது அமைதி காக்கிறது என்பது மட்டுதான் உண்மை என்றாள் பற்றி மோத். இத்தகைய எதிர்வு கூறல்களுக்கான ஆய்வுகளை மேற் கொள்ளத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். இதுவரை எதிர்வு கூறத்தக்கத் தெளிவான தடயங்களை எரிமலை ஆய்வாளர்கள் கண்டுபிடிக்கவில்லை என்று அவள் மேலும் விளக்கினாள்.

விசேட ஆடைகளை மாட்டிக் கொண்டு கருவிகளையும் சாதனங்களையும் சுமந்த வண்ணம் விளிம்பைக் கடந்து ஏறி, இறங்கி வெடிப்பு உதட்டுப் பகுதியை அவர்கள் நெருங்கிக் கொண்டார்கள். இப்போது ஒரு சீற்றம் இடம்பெற்றால் அதை இயற்கை அழிவு என்பதா அல்லது இவர்கள் வில்லங்கத்துக்குப் போய்த் தேடிக்கொண்ட சோலி என்பதா?

அவர்களது துணிவு பாராட்டப்பட வேண்டியது. ஆராய்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியவை. அடுத்தவர்களின் உயிர்காக்கும் பணிக்காக இவர்கள் உலைமுகத்தில் நிற்கிறார்கள். இடைக்கிடை கருவி ஒன்று தப்பான வாசிப்புகளைக் காட்டுவதாக அப்போது தெரிவிக்கப்பட்டது. நிலைவரத்தில் ஆபத்து இல்லை. தப்பான வாசிப்பு இது - கருவிக்கு தலை கிறுகிறுக்கிறதா என அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

கமெராக்கள், உணர்கருவிகள், வாயு சேகரிக்கும் புட்டிகள், கல்லுடைக்கும் சுத்தியல், பொருள்களை சேகரிக்கும் பைகள், வாயு முகமூடிகள், வெப்பம் தாங்கும் கவசங்கள், ஹெல்மெட்டுக்கள், உயிர் காப்பு மருந்துகள், உணவுக்கான சொக்லேட்டுகள், தண்ணீர் எனப் பலவற்றை இவர்கள் சுமக்க வேண்டி இருந்தது.

அணிக்குத் தலைமை வகித்த ஸ்ரான்லி வில்லியத்தின் வலதுகையாக முப்பத்தைந்தே வயதான ஜோஸி ஆல்ஸ் நின்றிருந்தான். கரிய கேசமும் துருதுருக்கும் விழிகளும் குழந்தை முகமும் கொண்ட அவனது மனதில் எல்லை இல்லாத சோகம்தான் குடிகொண்டிருந்தது. அவன் இளவயதில் தனது 12 நண்பர்களை 1985 இல் நேவடோ எரிமலைக் குழம்புக்குப் பலிகொடுத்திருந்தான். ஆமரோ நகரில் 23 ஆயிரம் வரையான பொதுமக்களைக் காவுகொண்ட சம்பவம் இது எனக் கண்டோம். தற்போது அவன் கொலம்பியாவின் ஆய்வு மையத்தில் ஒரு முக்கியமான புள்ளி; கடும் உழைப்பாளி.

மலைமுகட்டில் சடுதியான காலநிலை மாற்றங்கள் வழமையானவை. திடீரென கருமுகில்கள் அப்பிக் கொள்ளும். அல்லது பனிப் போர்வை போர்த்துக் கொள்ளும். எரிமலை என்பதால் அதன் குணங்குறிகளும் திடீரென வெளிப்படலாம். அவதிக்கு இறங்கி ஓட முடியாது.

இவர்களது குழுவில் 16 பேர்வரையில் இருந்தார்கள். சாரி சாரியாகப் பிற குழுக்களும் வந்து போய்க் கொண்டிருந்தன. முகப்பை இவர்கள் மெதுமெதுவாக அணுகிக் கொண்டிருந்தனர். முறையான ஆய்வுகளை அவதிப்பட்டுச் செய்ய முடியாதே. தீக்குச்சி எரியும் அந்த கந்தக வாசனை பலருக்குப் பிடிக்கும். நாக்கில், தொண்டையில் ஓர் அமிலச் சுவை புகைகிறது. ஒரு மெல்லிய கடல் இரைச்சல் போன்ற ஓசை வேறு கேட்கிறது.

வெளிப்படும் வாயுக்களை இகோர் என்ற அந்த ரஷ்ய விஞ்ஞானி தனது குடுவைக்குள் சிறைப்படுத்திக் கொண்டிருந்தார். இவரது தாயும் தந்தையும் மட்டுமல்ல அவரது மனைவி குழந்தைகளும் இதே துறையில் தான் இறங்கி இருக்கிறார்கள். நேரம் மதியம் 12.00 இனைக் கடக்கிறது. இகோரை தனது பல்கலைக்கழக ஆய்வுகளுக்கு துணையாக இழுக்க வில்லியம் அன்று முழுவதும் பேச்செடுத்துக் கொண்டிருந்தார்.

குசினிக்குள் குந்தி இருந்துகொண்டு புகையும் அடுப்பிலிருந்து முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு சட்டியைத் துழாவுவது போல, இகோர் கிளம்பும் வாயுமூட்டத்தைத் தவிர்த்து முகத்தைச் சுழித்துக்கொண்டு ஏதோ செய்து கொண்டிருந்தார். இவர்கள் இவ்வளவு கிட்ட இருக்கிற தெம்பு பார்ப்பவர்களைப் பிரமிக்கவும் வைக்கிறது; துணிந்து நெருங்கி வரவும் வைக்கிறது.

சுமார் மூன்று மணி நேரத்தை அவர்கள் முகட்டில் கழித்து இருக்கிறார்கள். இன்னமும் புறப்பட இகோருக்கு மனமில்லை. ஜோஸி ஆல்ஸ் மலைப் பிராந்தியத்திலுள்ள ஆறு அவதான நிலையங்களுடனும் தொடர்பில் இருந்தான். எவரும் அசாதாரண அறிகுறிகள் தென்படுவதாக அறிவிக்கவில்லை. அவனது நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் விழித்திருந்தன.

வில்லியம் புறப்படத் தயாராகிவிட்டார். இகோர்தான் புன்னகை பூத்தவாறு தொடர்ந்தும் ஆய்வில் முனைப்பாக இருந்துகொண்டார். மாதர என்ற அவள் கலேராஸ் மலைப்பகுதியில் பிறந்து வளர்ந்து அப் பிராந்தியத்தை நன்கு அறிந்த பெண் ஆய்வாளர். தனது சகாக்களுடன் சுமார் 400 மீற்றர்கள் வரை திரும்பி இறங்கிக் கொண்டிருந்தாள். விபத்துக் காலங்களில் உயிர்காப்புப் பணிகளில் அவளது செயற்பாடுகள் தீவிரமானவை. தன்னுயிரை ஒரு பொருட்டாக மதிக்காமல் செயற்படும் பண்பு அவளுக்கு உரியது. அவளோடு பற்றிமோத்தும் நின்றிருந்தாள்.

நேரம் பிற்பகல் 1.40 இருக்கும், வருகிறேன் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் இகோரின் (வெள்ளைத்) தலைக்கறுப்பு விளிம்புக்கு வெளியே தெரிந்தபாடில்லை. விளிம்பில் இருந்து இறக்கம் நோக்கி வில்லியம் இரண்டொரு அடிகளை வைத்ததுதான் தாமதம் ஓர் அசாதாரண இரைச்சல் 'ஊவ்' வென்று கிளம்பியது. அந்த அசாதாரணம் எரிமலைப் பிராந்தியத்தில் சாதாரணம்தான் என அவர்கள் அறிவார்கள்.

என்றாலும் அனைவரையும் உசார்ப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்ட வில்லியத்தின் கால்கள் விரைவாக அடியெடுத்து இறங்கலாயின. இரைச்சல் அதிகமாகியது. கல்மாரி பொழிய ஆரம்பித்தது. பூமி கிடுகிடுத்துக் கொண்டது. எல்லோரும் சிதறி ஓடத் தொடங்கினார்கள். புகைப்போக்கி போல உலைமுகத்திலிருந்து கரிய வாயுகள் மேல்நோக்கிக் கோபுரமாகக் கிளம்பலாயின.

எரிமலைகள் மெதுமெதுவாகத்தான் செயற்படும். புகைத்துப் புகைத்துத்தான் பூதாகாரமாகக் கிளம்பும். பூகம்பம் மாதிரித் திடீரெனத் தாக்குவது கிடையாது. தப்பிக்கொள்ளப் போதிய அவகாசம் கிடைக்கும் என்றெல்லாம்தான் இவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால், இப்பொழுது இந்த எரிமலைச் செயற்பாட்டில் எதிலுமே வேகம்தான் தெரிகிறது. இது என்ன அசாதாரணமான புதுமை என நினைத்துக் கொண்டார் வில்லியம். ஒருபாறை வில்லியத்தின் தலையில் பட்டதும் அவர் நிலைகுலைந்து விழுந்தார். சில சிதறல்கள் செஞ் சிவப்பாக தணலாக, ஒளிருவனவாகப் பொசுங்கிப் புகைந்து விழுந்து சிதறலாயின.

மீண்டும் எழுந்து ஓடிவிட நினைத்த வில்லியம் மெதுவாகவே தாண்டிவர முடிந்தது. விளிம்பிலிருந்து 20 மீற்றர்கள் மட்டும் இறங்கிய நிலையில் கண்ணில் பட்டது ஜோஸி அல்ஸின் மஞ்சள் நிற ஓவர்கோட். அவனது தலை சிதறி இருந்தது. உடல் உருமாறிக் கிடந்தது. அவன் 1985 இல் நேவடோவில் பலி கொடுத்த தனது 12 நண்பர்களிடம் போய்விட்டான் என்பது பார்த்த மாத்திரத்தில் புரிந்துவிட்டது. உலகம் ஒரு துடிப்புள்ள இளைய, இன்னும் நிறையச் சாதிக்க வேண்டிய இளைஞனை இழந்துவிட்டது. ஒரு கணப்பொழுதில் நிலைமை தலைகீழாகி விட்டிருந்தது. அவனது தொலைத்தொடர்புச் சாதனம் அருகில் சிதைந்து கிடந்தது.

சற்று முன்னர் வில்லியத்துடன் அளவளாவி இருந்த மூன்று உல்லாசப் பயணிகளும் கூட அங்கே சடலமாகக் கிடக்கக் காணப்பட்டனர். எரிமலை ஓசையோடு இந்தக் காட்சிகள் மேலும் பீதிக்கு வலுச் சேர்த்தன.

மேலும் சிதறிவரும் பாறைகள் தாக்கி வில்லியம் நிலைகுலைந்து போனார். இரண்டு கால்களிலுமே நடக்க இயலாத அளவிற்குக் காயங்கள் ஏற்பட்டன. வலி பிராணனை வாங்கியது. உடலெங்கும் எரிகாயங்களும் ஏற்பட்டு வலியெடுக்கத் தொடங்கின. தான் ஒருவன்தான் தப்பிவிட்ட உணர்வு. மலையுச்சியில் தனித்து விடப்பட்ட எண்ணம் மேன்மேலும் பீதியை இரட்டிப்பாக்கியது. தன்னைத் தானே காப்பாற்றியாக வேண்டும் என்கின்ற நிலைமையில் ஒருவாறு அரக்கியும் உருண்டும் சில மீற்றர்களை அவரால் தாண்ட முடிந்தது.

இதற்கிடையில் முதுகுப் பையில் தீப் பற்றிக் கொள்ள அதனைக் கழற்றி எறிந்துவிட்டு உருண்டு உருண்டு தீயை அணைக்க வேண்டியிருந்தது. ஒரு பக்கத் தாடை கல்பட்டுக் கிழிந்து போனது . சில ஆயிரம் மீற்றர் ஆழத்துக்கு இறங்க வேண்டிய நிலைமையில் இன்னமும் முகட்டிலிருந்து நூறு மீற்றர்கள் கூட இறங்கியாகவில்லை. நான்கு சடலங்களைத் தவிர வேறு மனிதத் தடயங்கள் கண்ணில் படவில்லை.

சல்லிக்கல் அளவிலிருந்து பாரிய பாறைகள் வரை சிவப்பு மஞ்சள் நிறங்களில் ஒளிர்ந்தவாறு கொட்டுப்பட்டன. அவற்றிலிருந்து தப்பிக்கொள்ள குப்புறக் கிடப்பதைத் தவிர வேறு உபாயம் தெரியவில்லை. கவசமெடுக்க என்று எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், இது ஒரு முழுமையான எரிமலைச் சீற்றம் அல்ல. ஒரு சிறு சினப்புத்தான் இத்தனை கோரம் காட்டுகிறது. இது முழுமை பெற்றால் தனது சாம்பல்கூடக் கிடைக்காது என நினைத்தார் வில்லியம். உலைமுகத்து பேசினுக்குள் அகப்பட்டுக்கொண்ட வாயு நிபுணர் இகோர் தனது நண்பர் நெஸரருடன் வாயுவாகவே புகைந்து போயிருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் தேவையில்லை என முடிவெடுத்துக் கொண்டார் அவர்.

இதற்கிடையில் மழைவேறு பொழிய ஆரம்பித்தது. சாம்பற்சேறு வேறு ஆளை அடையாளம் காணமுடியாமல் அப்பிக் கொண்டது. அணு அணுவாகச் சாகப் போகிறேன் என்கின்ற அச்சம் ஒருபக்கம், அதற்குள்ளும் தன்னைக் காப்பாற்ற இயன்றவரை போராடும் வேகம் மறுபக்கம், இதில் எது வெல்லுமோ?

இடைக்கிடை அலறியபடிக் கிடந்தார் வில்லியம். தான் மயங்கவோ உறங்கிவிடவோ கூடாது என்பதில் குறியாக இருந்தார். சீற்றம் மெல்ல மெல்லத் தணியலானது. என்றாலும் அது முற்றிலும் ஓயவில்லை. அவரது மனைவி, மக்கள், நண்பர்கள், பல்கலைக்கழக மற்றும் ஆய்வுகூடப் பணியாளர்கள் என்றெல்லாம் அன்பாகப் பழகுபவர்கள் ஒவ்வொருவராக நினைவில் வந்து விடைபெற்றுக் கொண்டு போயினர்.

இத்தனை நிபுணர்கள் திரண்டு இருந்த சூழலில் அத்தனை கருவிகளையும் கொண்டு இந்த அனர்த்தம் எதிர்வுகூறப்பட முடியாமல் போய்விட்டது என்றால் இந்த உலகத்தை இனி எவரால் காப்பாற்ற இயலும்? மலைமுகட்டில் நிற்கின்ற நிபுணர்களுக்கே தண்ணி காட்டுகிற எரிமலைகள் அப்பாவி மக்களை என்ன பாடுபடுத்தும்?

**தருவது : மூ.சிவநேசன்**

400 மீற்றர்கள் கீழே நின்றிருந்த குழுவினர் தப்பினோம் பிழைத்தோம் என்று ஜீப்புக்களை கிளப்பிக்கொண்டு கீழே நோக்கிப் பறந்தனர். அவர்களை அவசர அவசரமாக ஏற்றிக் கீழே அனுப்பிவிட்டு கடைசி ஜீப்பில் தொற்றிக் கொண்ட பற்றிமோத்தும் மாதாவும் ஜுப்பைச் சுழற்றிப் பிடித்து உச்ச வேகத்தில் மேல்நோக்கிச் செலுத்தலாயினர். இந்த இரு பெண்களும் தம்மைவிடப் பெறுமதிமிக்க உயிர்களை உலகம் இழந்துவிடக் கூடாது என்பதில் குறியாக இருந்தனர்.

ஏற்கெனவே பாதையே இல்லாத பாதையில் கற்கள் மேலும் சிதறிச் சிக்கலாகிக் கிடந்தன. வழியில் புதிய வாகனம் ஒன்று கண்ணாடிகள் ஏதுமின்றி ரிங்கரிடம் விடப்பட்ட கோலத்தில் கிடந்தது. இறங்கி வரும்போது புதுப் பொலிவுடன் கிடந்த அந்தப் பொலீஸ் போஸ்ட் கட்டடம் ஹிரோஷமாவின் அணுகுண்டில் அகப்பட்ட கட்டடம் போலாகிக் கிடந்தது. இயன்றவரை ஜீப்பில் வந்த இரு பெண்களும் இனி இயலாது என்றதும் இறங்கி முகட்டுப் பகுதியை நோக்கி ஓடலானார்கள்.

வழியில் கற்கள் சுண்ணாம்புச் சூளைக்குள் பிறந்து வந்தவை போலாகிக் கிடந்தன.

வேறு சில நெருப்புத் தணல்போல பொசிந்து கொண்டு சீறிக் கிடந்தன.

*பொறுத்திருங்கள்.*

# மூன்று மாதங்கள் கடந்தும் முடிவுறாத அவலங்கள்



கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் நாள் ஆசியநாடுகள் பலவற்றை உலுக்கியது 'சுனாமி' என்னும் அந்த ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தினால், இலங்கைத் தீவில் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்திழப்புகள், சேதங்கள் என்பன எண்ணிலடங்காதவை. கரையோர மக்களின் பொருளாதாரக் கட்டுமானங்களை அப்படியே அடியோடு அள்ளிச் சென்றது சுனாமிப் பேரலை.

சுனாமிப் பேரலை ஏற்பட்டு நேற்றுடன் மூன்று மாதங்கள் நிறைவடைந்தன.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்குப் பல்வேறு தரப்பினரும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

அபிவிருத்திப் பணிகள் எந்தளவில் நடைபெறுகின்றன? இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களின் அடுத்த கட்டம் என்னவென்பது பற்றி அறிவதற்கென வடமராட்சியில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் நேரடியாக விஜயத்தை மேற்கொண்டோம். இதன்போது பல தகவல்களைத் திரட்ட முடிந்தது.

### இடைத்தங்கல் முகாம்கள்

வடமராட்சியில் தொண்டைமானாறு, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை, சக்கோட்டை, இன்பருட்டி, பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி கிழக்கு, திக்கம், சுப்பர் மடம், கொட்டடி, முனை, தும்பளை கிழக்கு, கற்கோவளம், புனிதநகர் ஆகிய இடங்களில் இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. முற்று முழுதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இந்த இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றில் பாதிக்கப்பட்ட மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சில முகாம்களின் வேலைகள் முற்றாக முடிவடையாமையால் அவற்றில் இன்னும் பொதுமக்கள் குடியமர்த்தப்படவில்லை. யுன்.என்.எச்.சி.ஆர். வேல்ட் விஷன், போரூட், ஒக்ஸ்பாம் போன்ற வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பெருமளவு உதவிகளை வழங்கி வருவதைக் காணக் கூடியதாக இருந்தது. தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது குடாநாட்டில் நிலவும் கடும் வெப்பத்தால் முகாம்களில் உள்ள மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

### அரசின் உதவி

பாதிக்கப்பட்ட மக்களுக்கெனக் அரசு வழங்கியுள்ள உதவியை நோக்கும்போது அது வேடிக்கையானது என்றுதான் கூறவேண்டும்.

சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு பெருந்தொகையான நிதியை வாரி இறைத்துள்ள போதிலும் அவை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை. தமிழ் மக்கள் மீது வெளிநாட்டு நிறுவனங்கள் காட்டிய அக்கறையைக்கூட இலங்கை அரசு காட்டவில்லை என்பது பாதிக்கப்பட்டோருக்கு அரசினால் வழங்கப்பட்ட உதவியின் மூலம் தெளிவாகியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உதவி மிகச் சொற்பமானவை. சமையல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், ஒரு நபருக்கு ஒரு வாரத்துக்கு 375ரூபா பெறுமதியான உணவு முத்திரை, 5ஆயிரம் ரூபா பணம், உயிரிழந்த ஒருவருக்கு மரணச் செலவாக 15 ஆயிரம் ரூபா இவையே அரசினால் வழங்கப்பட்ட உதவி.

அரசினால் வழங்கப்பட்ட இந்த உதவியை மட்டும் வைத்துக் கொண்டு நாம் எவ்வாறு இழந்த எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதென முகாம்களில் வாழும் பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர். தொழில் உபகரணங்களை முற்றாக இழந்த நிலையில் அரசினால் வழங்கப்பட்ட 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு அவற்றை மீளப் பெறப் போதுமானதா எனவும் அவர்கள் கேட்கின்றனர்.

### அடிப்படை வசதிகள்

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் இடைத்தங்கல் முகாம்களில் குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் அங்கு வாழும் மக்களின் தொகைக்கு அவை போதுமானதாக இல்லை.

தற்போது உள்ள வசதிகள் ஓரளவு திருப்தியளிப்பதாகவே பலரும் தெரிவிக்கின்றனர். மேலதிகமான தண்ணீர்த் தாங்கிகளை வைத்துப் மக்களின் தேவைக்கேற்ப நீர் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### சுகாதாரம்

முகாம்களில் சுகாதாரம் என்பது மிக முக்கியமானது. அங்கு ஓரிடத்தில் ஒரு நோய் ஏற்பட்டால் அது வேகமாக எல்லோருக்கும் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம். எனவே, முகாம்களில் உள்ள மலசலகூடங்களை ஒவ்வொரு நாளும் சுத்திகரிக்க வேண்டிய தேவைப்பாடுள்ளதென அங்கு வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இதற்கான சுத்திகரிப்புத் தொழிலாளர்களை நியமித்து, சிறந்த முறையில் அவற்றைச் சுத்திகரிப்பதன் மூலம் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கமுடியும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிவரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இவற்றையும் கவனத்தில் கொள்ள வேண் டும்.

அத்துடன், அங்குள்ள குடிதண்ணீர் கிணறுகளுக்கும் குளோரின் இட்டு தொற்று நோய்கள் பரவாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

### மருத்துவம்

முகாம்களில் நோய் ஏற்பட்டால் அவற்றுக்குச் சிசிச்சை பெறுவது மிகவும் கடினமானதாக உள்ளதென அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர் எனவே, உடனடியாகச் சிகிச்சை பெறக் கூடியவாறு மருத்துவ நிலையங்களை அமைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மருத்துவ நிலையங்களை அமைத்து உடன் சிசிச்சை மேற்கொள்வதன் மூலம் நோய்த் தொற்றைத் தடுத்துக் கொள்ளமுடியும். அத்துடன், இங்குள்ள பொது அமைப்புகள் இடைத் தங்கல் முகாம்களில் நடமாடும் மருத்துவ சேவைகளை ஒழுங்கு செய்து நடத்தினால் மக்கள் மிகுந்த பயனடைவார்கள் என் இடைத் தங்கல் முகாம் ஒன்றில் பணியில் ஈடுபட்டிருந்த கிராம சேவையாளர் ஒருவர் தெரிவித்தார். எனவே, பொது அமைப்புகள் இது விடயத்தில் அதிக அக்கறை காட்டலாம்.

### கல்வி

முகாம்களில் உள்ள பெரும் எண்ணிக்கையான சிறார்கள் தமது கல்வியை மீள ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமையால் அவதியுறுகின்றனர். பெற்றோரும் வருமானம் எதுவும் இல்லாமையால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் அக்கறை காட்டவில்லை. எனவே, சமூகத்தில் உள்ள கல்வியியலாளர்கள் இதனை உடன் கவனத்தில் கொண்டு அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாதா?

எமது சமூகத்தில் கல்விப் பாரம்பரியத்தை கட்டியெழுப்புவதற்குத் துணை நிற்க முடியாதா? என முகாம் ஒன்றில் வாழும் இளைஞர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

சில பாடசாலைகளில் இன்னமும் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால், மாணவர்கள் உரிய முறையில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளர். எனவே, கிராம சேவையாளர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் பாடசாலைகளில் உள்ள அகதிகளை முகாம்களில் குடியமர்த்தி மாணவர்களின் சுதந்திரமான கல்வி நடவடிக்கைக்கு உதவி புரியவேண்டும் என மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை, பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவிவருகின்றது. எனவே, இதனை கல்வி அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### தொழில் வாய்ப்பு

இடைத்தங்கல் முகாம்களில் உள்ள அனைத்து மக்களும் தமது தொழில்வாய்ப்புக்களை இழந்த நிலையிலே உள்ளனர்.

குறிப்பாக வடமராட்சிப்பகுதிக் கரையோரங்களில் உள்ள மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களை இழந்துள்ளனர். அவர்கள் மீண்டும் தமது சொந்தக்காலில் நின்று செயற்படுவதற்கு தொழில்வாய்ப்பு முக்கியமானது. எனவே, அவர்களுக்கான தொழில் உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளும் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. தொழில் நடவடிக்கையை ஆரம்பிப்பதன் மூலம் தாம் மீண்டும் பழைய நிலைக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உள்ளது.

### படையினரின் கெடுபிடி

எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மக்கள் நிற்கின்ற போதிலும் படையினரின் கெடுபிடிகள் குறைந்தபாடாக இல்லை.

மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்காத நிலையிலும் கடலுக்குச் செல்வோர் அதற்கான அனுமதி அட்டைகளை மீளவும் பெற்றபின்னரே கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் எனக் கடற்படையினர் விடாப்பிடியாக உள்ளனர். இது தொடர்பாக கதைப்பதற்கென கடற்றொழில் சங்கங்களின் தலைவர்களை படையினர் அடிக்கடி தமது முகாமுக்கு அழைப்பதாகச் சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் அரசு புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்மென மீனவர்கள் கோருகின்றனர். தாம் பல்வேறு இன்னல்களை அனுபவித்துள்ள நிலையில் தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முதலில் படையினரின் முட்டுக்கட்டைகளை நீக்கவேண்டுமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### நிரந்தர வீடமைப்பு

பாதிக்கப்பட்டோருக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதில் இலங்கை அரசு முன்வைத்துள்ள விதி முறைகள் பற்றி வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

கடற்கரையிலிருந்து 100மீற்றருக்கு அப்பால் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட வேண்டும் மென அரசு அறிவித்துள்ளது. ஆயினும் அது எமது வட பகுதி மீனவர்ளுக்குச் சாத்தியமானதல்ல. ஏனெனில், அவர்கள் கடற்கரையில் வாழ்வதன் மூலம் தான் தமது தொழில் நடவடிக்கைகளை முற்றாகக் கவனிக்க முடியுமெனக் கருதுகிறார்கள். இதனால், அரசின் மேற்படி தீர்மானத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவதற்கில்லை. தாம் முன்னர் குடியிருந்த இடங்களிலேயே தமது நிரந்தர குடியிருப்புகள் அமைக்கப்படவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். இதன் காரணமாக நிரந்தர வீடமைப்பு விடயத்தில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன.

எனவே, எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் மிகவும் அவதானமாகவும் விரைவாகவும் செய்யப்படவேண்டும் என்பது தெளிவாகிறது.

தருவது :– தேவா
படங்கள் சுந்தரன்

## புதுமைச் சிற்பிக்கு விருது

தமிழகத்தில் பல்வேறு துறைகளிலும் தரம் குன்றி வரும் சமயத்தில், தமிழ் இலக்கிய உலகம் கண்ட அற்புத எழுத்தாளர் ஜெயகாந்தனுக்குக் கிடைத்துள்ள ஞானபீட விருது தமிழ் மக்களுக்கு அகமகிழ்ச்சியையும் புதிய மிடுக்கையும் ஏற்படுத்தக்கூடியது. எங்கும் அரசியல். எதிலும் அரசியல் புகுந்ததால் முதலில் பாதிப்புக்கு உள்ளானது தமிழ் இலக்கிய உலகமே. மலிவான அரசியல் கருத்துகளே புதிய வேடங்களைப் புனைந்துகொண்டு இலக்கியம்போலப் பாசாங்கு காட்டும் பரிதாபநிலை தமிழகத்தில் நீடித்து வருகிறது. இத்தகைய சூழலில் அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில், ஆன்ம உணர்வில் மானுடத்தில் சுரந்து வரும் தேனருவியைத் தமிழில் இலக்கிய சித்திரங்களாக வடித்துப் புகழ்பெற்ற ஜெயகாந்தனுக்கு இந்த சிறப்பு கிடைத்திருப்பது தமிழ் நெஞ்சங்களுக்குப் பூரிப்பை ஏற்படுத்தக்கூடியது.

கவிதை உலகில் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் மகாகவி பாரதியார். அதைப் போலவே பத்திரிகைத் தமிழில் திரு. வி. க. வும் நாடக உலகில் சங்கரதாஸ் சுவாமிகளும், தமிழ் மேடையில் அண்ணாவும், திரை உலகில் சிவாஜி கணேசனும் புதிய சகாப்தங்களைப் படைத்தவர்கள். அந்த வரிசையில் இலக்கிய உலகில் புதிய யுகத்தைப் படைத்தவர் ஜெயகாந்தன்.

எந்தவிதமான பின்னணிப் பலமும் இல்லாத அவர், முழுக்க முழுக்கத் தனது சொந்த அறிவாற்றலால், கலை உள்ளத்தால் தமிழகம் கண்டறியாத இலக்கியச் சாதனைகளைப் படைத்திருக்கிறார். அவருடைய அற்புதப் படைப்புகள் கவிதை உள்ளம் வடித்த இலக்கிய ஓவியங்கள், பாரதியின் வார்த்தைகளில் கூறுவதென்றால், 'கல்லையும் தீயையும் சேர்த்து, நல்ல காற்றையும் வானவெளியையும் சேர்த்து' இறவாத புகழுடைய இலக்கிய செல்வங்களைப் படைத்த தமிழ் முன்னோர்களின் நெறியில் தனக்கெனத் தனித்திசையில், தனிப்பாதையை வகுத்துக் கொண்டு தமிழே கண்டறியாத நவீன இலக்கியங்களை, குறிப்பாகப் புதினங்களையும் சிறுகதைகளையும் வடித்திருப்பவர் ஜெயகாந்தன்.

எல்லா அம்சங்களிலும் சமுதாயத்தின் அடிவாரத்தில் தோன்றிய ஜெயகாந்தன் இலக்கிய உலகின் முகட்டில் மிடுக்குடன் பிரகாசிப்பதற்கு மூலவிசை எது? முதலில் அசலான சிந்தனை, தங்கு தடையற்ற சுதந்திரப் பார்வை. மானுடத்தின மீது அளவற்ற பரிவு. மானுடத்துக்கு எதிரான எல்லா அநீதிகளையும் வக்கிரங்களையும் தகர்ப்பதில் கோபாவேசம். இவை அத்தனைக்கும் ஈடு கொடுத்து நிற்கும் எளிய உயிர்த்துடிப்புள்ள இயல்பான தமிழ் போன்றவையே ஜெயகாந்தனின் ஆதாரபலம்.

புரட்சி எழுத்தாளர்களாகத் தங்களைக் கூறிக் கொள்பவர்கள் அதற்காகப் பழைய சமய இலக்கியங்களை வழித்தெறிந்து பேசுவதுண்டு ஆனால், ஜெயகாந்தன் பழைமையிலுள்ள அருமைகளைப் போற்றுவதுடன் அவற்றுக்கு இணையான புதிய படைப்புகளையும் வடித்துக் காட்டியவர்.



குறிப்பாக அவருடைய தமிழ் நடை, இலக்கிய உலகில் குற்றால அருவி போன்றது. இந்த நடை அழகில் சொக்கியவர்கள் எண்ணிறந்தவர்கள். இவர்களுள் பல எழுத்தாளர்களும் அடங்குவர். புதினங்கள் உலகில் மேற்கு நாட்டுப் பாணியையும் வாடையையும் சில சந்தர்ப்பங்களில் சரக்குகளையும் கூடத் தமிழாக்கிப் பகட்டாக உலா வரக்கூடிய எழுத்தாளர்களிடையே தமிழ் மண்ணில் வேர் விட்டு எழுந்த சிந்தனைகளை, ஏழை எளிய மக்களின் யதார்த்த வாழ்க்கையில் மூச்சோடு உஷ்ணம் போலக் கலந்துள்ள மானுடத்தின் நாகரிகக் கூறுகளை, அரிதாரம் பூசாத வீட்டுத் தமிழில் வடித்த சாகசம், எதற்கும் எவருக்கும் அஞ்சாத உள்ளம் போன்றவையே ஜெயகாந்தனாகிய தமிழ்ச் சிற்பியின் இலக்கியங்களைப் படைத்தவை. பாரதியின் அதே பாதையில் ...ந்த வண்ண மலர்கள் இவருடைய இலக்கியங்கள். எழுத்துலகில் புதிய அத்தியாயத்தைப் படைத்த இந்த இலக்கியவாதியின் மணிமுடியில் புதிய மாணிக்கமாகப் பதியக் கூடியது ஞானபீட விருது.

நன்றி :- தினமணி



தமிழ்த் திரையுலகில் ஜெமினி கணேச னுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டம் 'காதல் மன்னன்.' எண்ணற்ற காதல் படங்களில் நடித்துப் புகழ் பெற்றதால் அவருக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது.

17.11.1920 இல் பிறந்த ராமசாமி கணேசன்தான் இன்று தமிழகமே அறியும் ஜெமினி.

தாம்பரத்திலுள்ள கிறிஸ்தவக் கல்லூரியில் பி.எஸ்.சி. வேதியியல் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றார் ஜெமினி.

1947 இல் ஜெமினி ஸ்டுடியோவில் தயாரிப்பு நிர்வாகியாகச் சேர்ந்தார் ஜெமினி. ஆரம்ப காலத்தில் மேடை நாடகங்களில் நடித்த அவர் 'மிஸ் மாலினி', 'மூன்று பிள்ளைகள்', 'நவ ஜீவனம்', 'அவ்வையார்' உட்படப் பல படங்களில் நடித்தார். ஆனால், அப்படங்களில் கதாநாயகன் வேடம் அவருக்குக் கிடைக்கவில்லை.

பின் நாராயணன் திரைப்பட நிறுவனத்தில் சேர்ந்தார். 'தாய் உள்ளம்' படத்தின் நாயகனாக நடித்தார். 'மனம் போல் மாங்கல்யம்' படத்தில் இரட்டை வேடம் ஏற்று நடித்தார். 'மனம் போல் மாங்கல்யம்', 'பெண்', 'கணவனே கண் கண்ட தெய்வம்' ஆகிய ஜெமினியின் இந்த மூன்று படங்களும் 1953 இல் வெளிவந்தன. இம் மூன்று படங்களுமே மாபெரும் வெற்றி அடைந் தன.

'வஞ்சிக்கோட்டை வாலிபன்', 'மிஸ்ஸியம்மா', 'மீண்ட சொர்க்கம்', 'பணமா பாசமா', 'சித்தி', 'கல்யாணப் பரிசு', 'பெண்ணின் பெருமை', 'பாசமலர்', 'பந்தபாசம்', 'சுமை தாங்கி', 'கற்பகம்', 'ராமு', 'தேன்நிலவு', 'பனித் திரை', 'பூஜைக்கு வந்த மலர்', 'ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்', 'உன்னால் முடியும் தம்பி', 'அவ்வை சண்முகி' ஆகியவை அவர் நடித்த பிரபலமான படங்களின் பட்டியலில் இடம்பெறும்.

கமல்ஹாசனுடன் அவர் நடித்த 'அவ்வை சண்முகி' படத்தில் முதுமையிலும் நகைச் சுவையை வெளிப்படுத்திச் சிறப்பாக நடித்தவர் என்ற பாராட்டு அவருக்குக் கிடைத்தது. கே.பாலசந்தரின் இயக்கத்தில் அவர் நடித்த 'காவியத் தலைவி', 'இரு கோடுகள்', 'பூவா தலையா', 'புன்னகை', 'நான் அவனில்லை' ஆகிய படங்கள் மாபெரும் வெற்றிப் படங்கள். 200க்கும் மேற்பட்ட படங்களில் அவர் நடித்தார்.

1971 இல் பத்மஸ்ரீ விருது பெற்றார். கலைமாமணி, எம்.ஜி.ஆர்.தங்கப் பதக்கம் உட்படப் பல விருதுகளையும் பெற்றார். 1976 இல் 'இதயமலர்' என்ற படத்தை இயக்கினார் ஜெமினி.

ஐம்பது ஆண்டு கால கலைச் சேவைக்காக சிகாகோ நகர மேயரிடமிருந்து 'கிங்ஒவ் ஸ்டார்ஸ்' என்ற விருதைப் பெற்றார் ஜெமினி.

இவரது படங்களில் இடம்பெற்ற 'காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலேயே அவள் ஓவியம்', 'ஓஹோ எந்தன் பேபி', 'காதலிலே தோல்வியுற்றான் காளை ஒருவன்', 'காதல் யாத்திரைக்குப் பிருந்தாவனமும்' உள்ளிட்ட பல பாடல்கள் ரசிகர் களால் மிகவும் விரும்பப்பட் டவை.

சிவாஜி கணேசன், எஸ்.எஸ். ஆர். உட்படப் பல்வேறு நடிகர் களுடன் அவர் சேர்ந்து நடித்தார். எம்.ஜி. ஆரு டன் அவர்நடித்த படம் 'முகராசி'. கமலுடன் 'அவ்வை சண்முகி', 'உன்னால் முடியும் தம்பி' ஆகிய படங்களிலும் ரஜினியுடன் 'அலாவுதீ னும் அற் புத விளக்கும்' படத்திலும் நடித்தார்.

கோல்ஃப் விளையாடுவது இவரது பொழுது போக்கு. நடிகர்களை ஒன்றுகூட்டி கிரிக்கெட் விளையாடுவார். தி.நகர் கிளப்பில் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்கேற்பதும் ஜெமினியின் பொழுதுபோக்கு.

உடற்பயிற்சி செய்வதில் அதிகம் நாட்டம் உடையவர் ஜெமினி. சிறுவயதிலிருந்தே யோகாசனங்களிலும் அதிகமாக ஈடுபட்டு வந்தார். சண்டைக் காட்சிகளில் தனக்கு 'டூப்' போட்டு நடிக்க விரும்பாதவர் ஜெமினி. 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தில் மாடு அடக்கும் காட்சி யில் டூப் போடாமல் நடித்தார் ஜெமினி.

'சரஸ்வதி சபதம்' படத்தில் மல்யுத்த வீரர் ரந்தாவைத் தன் தோள்பட்டைக்கு மேல் தூக்கி இயக்குநர் ஏ.பி. நாகராஜனை ஆச்சரியப்பட வைத்தவர் ஜெமினி.

திரையுலகில் 'காதல் மன்னன்' என்ற வுடன் நினைவுக்கு வருபவர் ஜெமினி கணேசன். சாவித்திரி, சரோஜாதேவி, கே. ஆர்.விஜயா, வைஜயந்திமாலா, சௌகார் ஜானகி என எந்த நடிகையுடன் ஜெமினி நடித்தாலும் சிறந்த ஜோடி என மக்கள் வர்ணிப்பார்கள். இதனா லும் அவர் 'காதல் மன்னன்' என அழைக்கப் பெற்றார். காலங்கள் கடந்தாலும் இந்த 'காதல் மன்னனின்' புகழ் அழியாது.

### குடும்பம்

ஜெமினி கணேசன் தனது 19 ஆவது வயதில் பாப்ஜியை திருமணம் செய்தார். அவர்களுக்கு 4 மகள்கள். ரேவதி, டாக்டர் கமலா செல்வராஜ், பத்திரிகையாளர் நாராயணி, டாக்டர் ஜிஜி. பின் நடிகை புஷ்பவல்லியை அவர் மணந்தார். ஹிந்தித் திரையுலகின் முன்னணி நடிகையான ரேகா, ஜெமினி -புஷ்பவல்லியின் மகள். இன்னொரு மகள் ராதா.

தன்னுடன் பல படங்களில் நடித்த நடிகை சாவித்திரியையும் ஜெமினி திருமணம் செய்து கொண்டார். அவர்களது மகள் சாமுண்டிஸ்வரி, மகன் சதீஸ்குமார்.

நான் தொட்டுப் பார்த்த முதல் நடிகர் ஜெமினி கணேசன் என்றார் நடிகர் கமல்ஹாசன். 'களத்தூர் கண்ணம்மா' தான் எனது முதல் படம். அதில்நான்சிறுவன். அப்படத்தின் நாய கன்ஜெமினி கணேசன். நான் தொட்டுப் பார்த்த முதல் நடிகர் அவர். அவரது மடியில் அமர்ந்து விளையாடுவேன். அவரது மடியிலிருந்து தான் சிவாஜி அப்பாவின் மடிக்கு நான் தாவினேன்.

யார் சென்றாலும் சினிமா அப்படியேதான் இருக்கும். சினிமாவிற்கு இழப்பு என்பது ஒன்றுமில்லை. எனக்கும் என்னைப்போன்ற மற்ற கலைஞர்களுக்கும் தான் இது பெரிய இழப்பு. என்னை இழந்தால் எனது மகள்கள் எவ்வளவு வேதனைப்படுவார்களோ அந்த வேதனையை நான் இப்போது அனுபவிக்கி றேன் - என்றார் கமல்.

# காதல் மன்னன் ஜெமினி



---

# அவனா இவன்?

இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஓர் ஓவியன் யேசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை ஓவியங்களாகத் தீட்டிக் கொண்டு வந்தான்.....

யேசுநாதர் குழந்தையாக இருந்தபோது எப்படி இருந்திருப்பார் என்பதற்கு 'மாதிரி' யாக ஒரு குழந்தையைத் தேடிக்கொண்டிருந்தபோது, அவன் அந்த ஏழை வீட்டுக் குழந்தையைக் கண்டு திருப்தியடைந்தான். முகத்திலே அன்பு ததும்ப, கண்களில் அருள் ஒளிவிடத் தவழ்ந்து கொண்டிருந்த அந்தப் பாலனைப் பார்த்த அவன் பாலயேசுவைப் படம் போட்டுவிட்டான்.




கடைசியாக அந்த வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை நிறைவு செய்வதற்கு அவனுக்கு ஒரேயொரு படம்தான் பாக்கி. யேசுநாதரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் படத்துக்காக அவன் அப்பொழுது ஒருவனைத் தேடிக்கொண்டிருந்தான். பெரு முயற்சியின் பின்னர் இறுதியில் மெலிந்த தோற்றமும் கோரமான முகபாவமும் கொண்ட ஒருவனைக் கண்டான். அவனை யூதாஸ் படத்துக்கு ஏற்றவனாகத் தேர்ந்தெடுத்தான்.

ஓவியம் தீட்டியதும் யூதாஸாக உட்கார்ந்திருந்தவன் ஓவியனைப் பார்த்து "என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான் "இல்லையே!" என்றான் ஓவியன்.

'நான்தான் முன்னர் உம்முடைய ஓவியத்துக்கு பாலயேசுவாக இருந்தவன். குழந்தையாக இருந்தபோது ஏசுநாதர்போல இருந்தேன். பெரியவனாகியதும் யூதாஸ் போலாகிவிட்டேன்' என்றான் அவன்.

❖ ❖ ❖

"அவனா இவன்?" என்ற அந்த உண்மையை எப்படித்தான் அந்த இத்தாலிய ஓவியனால் ஜீரணிக்கமுடிந்ததோ தெரியவில்லை. 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே..... அவன் அப்படியானதற்கு யாருடைய வளர்ப்பு அல்லது சகவாசம் காரணமாக இருந்திருக்கும் என்பது தெரியவில்லை.....

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் விட்டு ஒரு நாளாக இரண்டு தமிழ்ப் படங்களைப் பார்க்க நேர்ந்தது. முதல்நாள் பார்த்தது ஞானசேகரனின் திரைக்கதை வசனத்தில் உருவான 'பாரதி' படம் .மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வரலாற்றைச் சொல்லும் இப்படத்தில் சாயி ஷிண்டே என்பவர் பாரதியாராக நடித்துள்ளார். அவரை விட்டால் அதற்குப் பொருத்தமான ஒரு நடிகரைத் தெரிவு செய்திருக்க முடியாது என்ற அளவுக்கு அவருக்குப் பாத்திரப் பொருத்தம் மிக அற்புதமாக அமைந்து விட்டது. அவரை நினைத்தால் பாரதியின் நினைவு வருகின்ற அளவுக்கு அவர் அப்படத்தின் மூலம் இரசிகர்கள் மனதிலே இடம்பிடித்து விட்டார்.

தமிழ்ப் படங்களைப் பொறுத்தவரை ஒரு படம் பார்த்தால் நூறு படங்கள் பார்த்ததற்குச் சமம் ('பாரதி' அதற்கு விதிவிலக்கு) அதனால் நானும் எப்போதாவதுதான் ஒரு படம் பார்ப்பேன். அடுத்த நாள் பார்த்தது 'தூள்' என்பதாக இருக்கவேண்டும். அதிலே வில்லனாக - எம்.எல்.ஏ.ஆக அமைச்சராக வந்த பாத்திரமும் மனத்தை வேறு ஒரு வகையில் தொட்டுவிட்டது. அதாவது 'இப்படியும் ஒரு கொடியவனா?' என்ற அளவில்.... வெறுப்புணர்வாக! வில்லன் எவ்வளவுதான் தனது பாத்திரத்தை உணர்ந்து சிறப்பாக நடித்தாலும் சாதாரண மக்களால் அவனைப் பாராட்ட முடிவதில்லை. அந்தப் பாத்திரத்தை நினைத்தால் அதாக நடித்த அந்த நடிகரையும் நினைத்து எமது வெறுப்புணர்வை வெளிப்படுத்துகிறோம்.

அந்த நேரம் பார்த்து என்னோடு படத்தைக் கூடவிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் சொன்னார். 'பாரதி படத்திலே நடித்த அதே சாயி ஷிண்டேதான் தூளிலே வில்லனாக வந்திருக்கிறார்.......'

எனக்கு வேதனை கலந்த அதிர்ச்சியாக இருந்தது. பாரதியாராகப் பார்த்து வியந்த அந்த நடிகரை, ஏனோ அப்படிப் பார்க்க மனம் ஒப்புக்கொள்ளவில்லை. நடிகனைக் கலைஞ னாகத்தான் பார்க்கவேண்டும் என்பதை மறந்து "அவரா இவர்?" என்ற மன உளைச் சல் ஏற்பட்டது.

நல்லவனை எப்போதும் நல்லவனாகவே பார்க்கவேண்டும் என்பதிலும் தமது ஆளு மைக்கு மாசு வரக்கூடாது என்பதிலும் அதிக கவனம் செலுத்தி நடித்தவர் எம்.ஜீ.ஆர் அவர்கள். கதாநாயகிகள் தான் அவருக்குப் புதிசு புதிசாக வந்து போனார்களே தவிர அவர், இறுதி வரை கதாநாயகனாகவே நடித்தவர். சண்டைக் காட்சிகளில் அவர் தோற்றுப் போவதாக நடிக்கமாட்டார். திரைக் கதை, வசனம், பாடல்கள் கூட அவருக்குப் பிடித்துக் கொண்டால் மட்டுமே மேற் கொண்டு படப்பிடிப்பு தொடங்கப்படுமாம். அவருடைய இத்தகைய தனித்து வங்களால் தானாம் அவரால் தமிழ் நாட்டின் தனிப்பெரும் தலைவராக மிளிர முடிந்ததாம்.....

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பெண், முன்னர் தமிழ்த் திரைப்படங்களிலும் நடித்தவர். ஆயிரத்தித் தொளாயிரத்தி நாற்பதுகளில் 'வனராணி' படத்திலே அவர் கவர்ச்சி காட்டி நடித்தவராம். அப்படி அவர் ஆபாசமாக நடித்ததைப் பொறுக்க முடியாத அவளின் அண்ணன் ஒருநாள் அவளைத் துப்பாக்கியால் சுட்டு விட்டானாம்....

அதாவது அந்தப் படம் யாழ். திரையரங்கு ஒன்றிலே ஓடிக் கொண்டிருக்கையிலே, அந்தக் காட்சி வரும் போதுதானாம் அவன் அவளை நோக்கி அப்படிச் சுட்டானாம்.

– [illegible]

---

# நாவுகளில் தொங்கும் கண்ணாடிகள்.....

பொய்களில்
முளைவிடும் மரம்
வேர்களில் 'மெய்' உறிஞ்சி
கிளை விரித்துப் பரந்து
பூத்துத் திளைக்கும்
நிலவின் ஒளியென
அதன் பூக்களில் ஒழியும் வஞ்சம்
இன்னும்...
நமட்டுச் சிரிப்புடன் கண்காணிக்கும்
என் புன்னகையை
எனதியல்புகளை
வரையறுக்காத
ஓர் கணப் பொழுதின்
எதிரில்
பிசுபிசுத்துப் போகிறது
அப்பூக்களின் ஜாலம்
எனினும்....
எழத் திராணியற்று
உள்ளடங்கிக் குமுறும் 'மெய்'
எல்லோருடைய நாவுகளிலும்
தொங்கும் கண்ணாடிகள்
அவற்றில் தூய்மையென மிளிரும்
அப்பூக்கள்
எப்போதும்!
நாவுகளற்ற கண்ணாடிகளில்
பூக்களிற்குப் பிரியமில்லை.
இருக்கப் போவதுமில்லை.....

அ.அகிலன்

---



# சுனாமியே! உன்னால்...

பலராய்
பிறந்த நாம்
பரிதவித்து
நிற்கின்றோம்.
சிறகடித்துத்
திரிந்த நாம்
சிறகிழந்து
திரிகின்றோம்

வாழ்வின் வசந்தங்களை
அநுபவித்து
நின்ற நாம்
தேற்றுவாரின்றித்
தவிக்கின்றோம்

இன்பமாய்
வாழ்ந்த நாம்
இருப்பிடம் இன்றி
அலைகின்றோம்
எம் ஊரில்
சுதந்திரக்காற்றை
அநுபவித்த நாம்
ஊரின்றி
அலைகின்றோம்

உறவின்றி..
ஊரின்றி..
உறங்கவும்
இடமின்றி..
நாம் அலைகின்றோம்

சுனாமியே!
உன்னால் தான்
இத்தனையும்.....

தே.மஞ்சு (லக்ஸ்மாலா)
குருநகர்.